591

# GEOGRAPHY

OF THE

# MADRAS PRESIDENCY

## TAMIL

WITH NUMEROUS MAPS AND ILLUSTRATIONS

Revised and Enlarged Edition

591
11 NOV 1919
4/9/19
658

# பூகோள சாஸ்திரம்

## சென்னை இராஜதானி



...LLAN & CO., LIMITED
...AY, CALCUTTA AND LONDON
1919

...Rights Reserved

[விலை, ௬ அணா.

U.211
N19
149457

# EOGRAPHY

OF THE

# MADRAS PRESIDENCY

**IN TAMIL**

591
4·19

# பூகோள சாஸ்திரம்.

சென்னை ராஜதானி

OFFICE ... 11 NOV 1919 ... MADRAS

**Revised and Enlarged Edition**

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1919

*Rights Reserved*

**Price, 6 Annas.]** [விலை, கூ அணா.

915.4

# CONTENTS—அட்டவணை.

MADRAS PRESIDENCY—சென்னை ராஜதானி.

## PART I—முதற் பாகம்.

### *General View.*—பொது விவரம்.


| | PAGE. |
|---|---|
| Extent, Surroundings, Relief, Plains, Mountains, Eastern Ghats Western Ghats, Tableland ... ... ... | 1 |
| Climate and Rainfall—Elementary notions; how rain is measured; climate and rainfall of the Presidency ... ... | 6 |
| Rivers—what they are; their uses; rivers of the Presidency ... | 10 |
| Natural Divisions of the Presidency based on relief, climate and rainfall—Political Divisions of the Presidency ... ... | 22 |
| Irrigation; what is meant by it; its need in the Presidency; different forms of irrigation; how these are determined by the relief of the country; the chief irrigation projects of the Presidency ... ... ... ... ... ... | 24 |
| Products; agricultural; conditions of growth; division of crops into dry, wet and garden; chief agricultural products of the Presidency ... .... ... ... ... ... | 26 |
| Forests; their uses; the chief forest areas of the Presidency ... | 32 |
| Cattle; their use to man; the chief varieties of cattle in the Presidency; Fauna of the Presidency; fish ... ... | 33 |
| Metals; what they are; their uses; the chief mineral products of the Presidency ... ... ... ... ... .. | 35 |
| Manufactures; (1) connected with food and drink; (2) connected with clothing; (3) other manufactures, e.g. jute, leather, aluminium ... ... ... ... ... ... | 37 |
| Commerce; what is meant by; facilities for; exports and imports of the Presidency ... ... ... ... ... | 42 |
| Means of Communication; roads, railways and canals of the Presidency; backwaters of the West Coast; harbours; seaport towns ... ... ... ... ... ... | 44 |
| Population and Languages of the Presidency... ... .. | 50 |

## PART II—இரண்டாம் பாகம்.

### DISTRICTS—ஜில்லாக்கள்.


| | PAGE. |
|---|---|
| Agency Tracts ... ... ... ... ... | 53 |
| Districts on the East Coast Plain : | |
| Northern ... ... ... ... ... | [illegible] |
| Central ... ... ... ... ... | 6[illegible] |
| Southern ... ... ... ... ... | 8[illegible] |
| West Coast Districts ... ... ... ... | 8[illegible] |
| Districts in the Interior ... ... ... ... | 9[illegible] |
| Deccan Plateau Districts ... ... ... ... | 119—[illegible]24 |


## PART III—மூன்றாம் பாகம்.

### INDIA—இந்தியா.


Relief and Natural Divisions ... ... ... ... 125—129


## PART IV—நான்காம் பாகம். ... 129—135

### CONTINENTS AND OCEANS

### கண்டங்கள்—மகா சமுத்திரங்கள்.

## PART V—ஐந்தாம் பாகம். ... 136—139

### EARTH IN RELATION TO THE SUN, THE MOON AND THE STARS

### பூமி-சூரியன்-சந்திரன்-நக்ஷத்திரங்கள்.

14945

# PREFACE

THIS book is the revised and enlarged edition of Mr. Marsden's Geography of the Madras Presidency. This opportunity to revise the book was availed of to bring the book up-to-date and to make the treatment of the subject thoroughly rational. Every attempt is made to treat the Geography of the Presidency as uniformly as the diversity of its conditions permits.

Part I is the general view of the Presidency, and the description of each geographical feature of the Presidency is as continuous as is necessary to make the children realize, through this continuity, the relation that exists between one geographical feature and another. The essential and fundamental facts of the science are specially emphasized throughout.

One special feature of the book is that the elementary notions of Physiography (or the Physical Geography) are not dealt with separately but are described in their appropriate places in connection with the description of each geographical feature. When, for example, the relief of the country is described, elementary ideas of what is meant by Hills, Mountains, Tablelands and Plains and how man uses these for his benefit are explained. Before the rivers of the Presidency are described, children are helped to realize what a river means, how it is formed, and how it is useful to man. Similarly elementary facts connected with climate, rainfall, products, etc., are described and these facts are illustrated from the geographical features of the Presidency.

After the descriptive account of the distribution of the chief geographical elements of the Presidency, a description of the political divisions on the regional basis follows. This doubtless involves repetition of facts; but constant recapitulation of the main principles of the regional Geography from different points of view is essential to children and will help them considerably.

Complaint is often brought and rightly too, that in the attempt to make the region the unit for purposes of geographical teaching, political Geography is altogether neglected and children are thoroughly ignorant of geographical features of the different districts. This charge cannot be brought against this book. Each district is described in detail and in connection with the study of each political division, the essential and valuable elements of Geography are once again emphasized.

The book is written in *plain* and simple language. No textbook however good, can hope to supplant oral instruction. Children can tread the first steps in any subject with the help of the living voice of the teacher alone and so the teacher is requested to keep the book in the background till after he had finished his oral instruction with the help of the map, blackboard sketches, illustrations, etc. He can do a great deal to stimulate thought and to make the subject serve as a valuable mental discipline by helping the children to compare and contrast facts in one region with those in another. General principles should, by this means, be constantly reviewed and recapitulated and children would then begin to reason for themselves and realize 'cause and effect' in Geography.

The book contains a number of special maps and illustrations. Every attempt is made to explain the maps (please see special instructions). It is again the teachers' task to lead the children by successive steps to understand the meaning of the physical maps. Exercises should also be set requiring the children to construct relief models. Thorough accuracy in the matter of scale, etc., need not be insisted upon at this stage. All that is needed is that the children should be made 'to do,' for it is only by the process of 'doing,' children can visualize geographical facts.

In this edition a few suggestive exercises are put in at the end of each section.

MADRAS,
*August, 1919* K. A. V.



சென்ன இராஜதானி
மைல்காட்டும் ஸகேல்
மைல் 20 10 0 25 50 100 200 மைல்
வங்காளக்குடாக்கடல்
வங்காளக்குடாக்கடல்
அராபிக்கடல்
இந்து மஹா சமுத்திரம்
இலங்கை
பம்பாய் ராஜதானி
நைஜாம் ராஜ்யம்
மைசூர்
காவேரி
கொள்ளிடம்
வெள்ளாறு
பச்சைமலை
பவானி
வெய்பாறு
தாம்ரபர்ணி ஆறு
அடையாறு
கூவம் ஆறு
பாலாறு
Emery Walker sc.

# படத்தின் விவரம்.

படத்தில் ஒரு அங்குலத்தைக்குறிக்கும் இடம் உண்மையில் பூமியின் 100 மைல் விஸ்தீரணமுள்ள இடத்தைக் காட்டுகிறது. ஒரு அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும் உள்ளதற்கு ஒரு சதுர அங்குலமென்று பெயர். படத்தில் ஒரு சதுர அங்குல மிருந்தால் அது நிலத்தில் 100 மைல் நீளம் 100 மைல் அகலம் = 10,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது.

படத்தில் உள்ள தடித்த கரிக்கோடு சென்னை ராஜதானியின் எல்லையைக் குறிக்கிறது. மெல்லிய கறுப்புக்கோடு இயற்கையான பாகங்களைக் குறிக்கிறது. இப்படத்திலிருக்கும் மெல்லிய கோடுகள் எத்தனை பாகங்களைக் காட்டுகின்றன?

இப்படத்தைக் கவனித்துப் பாருங்கள். இதில் சிலபாகம் வெளுப்பாகவும் வேறுசில பாகம் நெருங்கிய சிறு புள்ளிகளுள்ளதாகவும் இன்னும் சிலபாகம் விலகிய பெரும்புள்ளிகளுள்ளதாகவும் மற்றும் சில பாகம் கறுப்புக் கோடிட்டும் இருக்கின்றன. இவ்விதமிருப்பதற்குக் காரணம் இன்னதென்று தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியம். இதுதான் பூமியின் இயற்கையமைப்பைக் காண்பிக்கின்றது. வெளுப்பாயிருக்கும் பாகம் தாழ்ந்த சமவெளி. இது சமுத்திர மட்டத்திற்கு 600 அடிக்குக் குறைந்த உயரமுள்ள பிரதேசம். வெளுத்த பாகத்தின் பக்கத்திலுள்ள கோட்டில் 600 அடி என்று எழுதியிருப்பதைக்கொண்டு இது 600 அடிக்குக் குறைந்த உயரமுள்ள பிரதேசமென்று தெரிந்துகொள்ளலாம். நெருக்கமாய் நுண்ணிய புள்ளிகளுள்ள பிரதேசம் 600 முதல் 2,000 அடி வரையில் உயரமுள்ளது. புள்ளிகள் விலகியிருக்கும் பிரதேசம் 2,000 முதல் 6,000 அடி வரையில் உயரமுள்ளது. கறுப்புக் கோடிட்டிருக்கும் பிரதேசம் 6,000 அடிக்கு மேற்பட்ட உயரமுள்ளது.

# சென்னை ராஜதானி.

## முதற் பாகம்.

### சென்னை ராஜதானியின் பொதுவிவரம்.

**நாம்** வசிக்கும் நிலப் பாகத்துக்குச் சென்னை ராஜதானி என்று பெயர். சென்னபட்டணம் மத்ருஸ் இந்த ராஜதானிக்கு முக்கிய பட்டணமானபடியால் சென்னை ராஜதானி என்றும், மத்ராஸ் ராஜதானி என்றும், சென்னையில் ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை இருப்பதால் ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை ராஜதானி என்றும் இதற்குப் பெயர்கள் உண்டு.

**விஸ்தீரணம்** :—வடகிழக்குச் கோடிமுதல் தென்மேற்குக் கோடிவரையில் இதன் நீளம் 950 மைல் இருக்கிறது. அதிக அகலமாயிருக்கிற இடத்தில் இதன் அகலம் 450 மைல் இருக்கும். இவ்வளவு விஸ்தீரணமுள்ள தேசத்தைப் படத்தில் மிகவும் சிறியதாகக் காண்பித்திருக்கிறார்கள். ஸ்கேல் (Scale) என்பதை நீங்கள் கீழ்வகுப்பில் வாசித்திருக்கலாம். இப்புஸ்தகத்திலிருக்கும் சென்னை ராஜதானியின் படத்தில் 1 அங்குலத்திற்கு இத்தனை மைல் விஸ்தீரணம் என்பதைத் தெரிந்துகொண்டு அதேபிரகாரம் மேலேகண்ட விஸ்தீரணம் சரியாயிருக்கிறதா என்று ஒப்பிட்டுப்பார்க்கலாம். எந்த நிலமாவது 3 மைல் நீளமும் 2 மைல் அகலமும் இருந்தால் அந்த நிலத்தின் விஸ்தீரணம் 3 × 2 அல்லது 6 சதுரமைல் என்று சொல்வது வழக்கம். 20 மைல் நீளமும் 15 மைல் அகலமுமுள்ள தேசத்தின் விஸ்தீரணம் எத்தனை சதுரமைல்? அம்மாதிரி இந்த ராஜதானியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 1,50,000 சதுரமைல் உள்ளது. இவ்வளவு விஸ்தீரணமுள்ள தேசத்தில் ஏறக்குறைய 10,000 சதுரமைல் சுதேச மன்னர்களுடைய அரசாட்சிக்கு உட்பட்டிருக்கிறது. மற்றப்பாகம் ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வருகிறது.

எல்லைகள் :—இந்த ராஜதானியின் படத்தைப் பார்த்துச் சுற்றுப் பக்கங்களில் என்ன என்ன இருக்கின்றன என்பதைப் பாருங்கள் இதன் உருவத்தையும் கவனியுங்கள் வடக்கிலும், வடமேற்கிலும் நிலப்பாகமிருக்கிறது. கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. வடக்கிலிருக்கும் பாகத்திற்கு (1) ஓரிஸ்ஸா என்றும், வடமேற்கிலிருக்கும் இடங்களுக்கு (2) ஹைதராபாத் அல்லது நைஸாம் ராஜ்யம் என்றும், (3) பம்பாய் ராஜதானி என்றும், (4) மைசூர் ராஜ்யம் என்றும் பெயர்கள் வழங்கிவருகின்றன ஹைதராபாத் என்னும் ராஜ்யத்தை நைஸாம் என்னும் விருதுபெற்ற மகமதியரும்; மைஸூர் ராஜ்யத்தை மஹாராஜா என்னும் விருதுபெற்ற இந்தியரும் ஆங்கிலேயருக்குட்பட்டு ஆண்டு வருகிறார்கள்.

சமுத்திரம் என்றால் என்ன? கிழக்கில் இருக்கும் சமுத்திரத்திற்கு வங்காள விரிகுடா என்றும், மேற்கிலிருக்கும் சமுத்திரத்திற்கு அரபிக்கடல் என்றும் பெயர். இவை இரண்டும் தெற்கில் சேருகின்றன. தெற்கில் இருக்கும் சமுத்திரத்திற்கு இந்து மகாசமுத்திரம் என்று பெயர். வங்காள விரிகுடாவும், அரபிக்கடலும் இந்து மகாசமுத்திரத்தின் பிரிவுகளே.

படத்தை உற்றுப்பார்த்து இலங்கை என்னும் தீவு இருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். தீவு என்றால் என்ன? சென்னை ராஜதானிக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியிலிருக்கும் சமுத்திரத்தின் ஆழம் மிகவும் கொஞ்சம். அங்கே அநேகம் தீவுகளிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது இராமேசுவரம். இராமேசுவரத்திலிருந்து இலங்கைக்கு இருப்புப் பாதை போடப்பட்டிருக்கிறது.


## இயற்கை அமைப்பு.

பள்ளத்தாக்குகள் :—ஒரு தேசத்தின் இயற்கை அமைப்பை முதலில் நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அது தெரியாவிட்டால் பூகோள சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்வது மிகவும் கஷ்டம். நிலங்களின் சிலபாகம் சமுத்திரமட்டத்திற்கு ஏறக்குறையச் சமமாகவேயிருக்கும். சிலபாகம் சமுத்திரமட்டத்திற்கு அதிக உயரமாயிருக்கும்.


சிலபாகம் சமுத்திரமட்டத்திற்குத் தாழ்வாக இருக்கும். அப்பேர்ப்பட்ட பாகங்கள் பூமியில் மிகவும் சிலதேயுள்ளன; அவைகள் நம்முடைய தேசத்தில் இல்லை. சமுத்திரமட்டத்திற்குமேல் 500 அடிவரையில் உயரமுள்ள பூமிகளுக்கெல்லாம் சமவெளிகள் என்று பெயர். இம்மாதிரியான சமவெளிகள் சென்னை ராஜதானியில் கடலோரமாக இருக்கின்றன. நதிகளின் இரண்டு பக்கங்களிலும் இருக்கும் பூமிகள் சமவெளிகளே. சென்னை ராஜதானியின் படத்தைப் பார்த்துச் சமவெளிப் பிரதேசங்கள் உள்ள இடத்தையும், அவைகளின் விஸ்தீரணத்தையும் கவனியுங்கள். சமவெளிப் பிரதேசங்கள் மேற்குக் கரையைக்காட்டிலும் கிழக்குக் கரையில் அதிக விசாலமாயிருக்கின்றன. அவைகள் வடக்கே 20 மைல் விஸ்தீரணமுள்ளனவாகவும் தெற்கே போகப்போக 100, 150 மைல் விஸ்தீரணமுள்ளனவாகவும் இருக்கின்றன. அகன்றிருக்கும் இந்தச் சமவெளிகளுக்குக் **கர்நாடகம்** என்று பெயர். மேற்குக் கரையிலிருக்கும் சமவெளிகள் மிகவும் குறுகியிருக்கின்றன. அவைகளுக்குக் **கோங்கணம்** என்று பெயர்.

மலைகள். i. **மேற்குத்தொடர்ச்சி மலை:**—கர்நாடகச் சமவெளிகளுக்கு மேற்கிலும் கொங்கணச் சமவெளிகளுக்குக் கிழக்கிலும் மலைகள் வியாபித்திருக்கின்றன. மலைகள் இன்னவை என்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியுமல்லவா? இந்த ராஜதானியின் மேற்கே ஓடும் மலைத்தொடர்ச்சிக்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். இத்தொடர்ச்சி பம்பாயிலிருந்து ஏறக்குறைய 1,000 மைல் தூரம் தெற்கே செல்லுகின்றது. சமுத்திரக்கரையிலிருந்து மலைத்தொடர்ச்சி சில இடங்களில் 50 மைல் தூரத்திலும் வேறு சில இடங்களில் 100 மைல் தூரத்திலும இருக்கிறது. இம்மலையின் உயரம் ஏறக்குறைய 4,000 அடி. இதனுடைய உன்னதமான சிகரத்தின் உயரம் கிட்டத்தட்ட 8,760 அடி இருக்கும். இம்மலையைக் கடந்துபோவது மிகவும் கஷ்டம். அங்கங்கே கணவாய்கள் இருக்கின்றன. கணவாயென்றாலென்ன? அவைகளின் உயரமும் அதிகம். அவைகள் வழியாகத்தான் இருப்புப் பாதை முதலியவைகள் செல்லுகின்றன.

ii. **கிழக்குத்தொடர்ச்சி மலை:** — இம் மலைத்தொடர்ச்சி இந்த ராஜதானியின் கிழக்கில் வடக்கே ஒரிஸ்ஸாமுதல் தெற்கே



முனை
மலைத்தொடர்ச்சி
சிகரம்
உற்பத்தி
தீப கோடி
கணவாய்
வளைகுடா
கிராமம்
கடல்
ஆறு
தீபகற்பம்
பூசந்தி
சுரங்கம்
விரிகுடா
உபநதி
வலது கரை
இடது கரை
லங்கை
குன்று
இருப்புப்பாதை
தீபம்
ஜலசந்தி
பட்டணம்
ஆறு
ஆர்பர்
பாலம்
ஏரி
துறைமுகம்

நீலகிரிவரையில் வியாபித்திருக்கின்றது. இதன் உயரம் 2,000 அடி. இதன் உயரமான சிகரம் 6,000 அடிக்குமேல் இல்லை. இம்மலைத்தொடர்ச்சி மேற்குத்தொடர்ச்சி மலையைப் போல் ஒரே தொடர்ச்சியாக இல்லை. நதிகள் ஓடுவதனால் அநேகம் கணவாய்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தொடர்ச்சி தெற்கே வர வர, சமுத்திரத்திற்கு வெகுதூரத்தில் மேற்கு முகமாய் ஓடி மேற்குத்தொடர்ச்சி மலையுடன் சேருகிறது. இம்மலைத்தொடர்கள் சேரும் இடத்திற்கு நீலகிரி என்று பெயர். நீலகிரியின் உன்னதமான சிகரம் 8,640 அடி. நீலகிரிக்குத் தெற்கே 16 மைல் அகலமுள்ள ஒரு கணவாய் இருக்கிறது. அதற்குப் **பாலக்காட்டுக் கணவாய்** என்று பெயர். பாலக்காடு என்ற பட்டணம் இதற்கு மேற்கிலிருப்ப தால் இதற்கு அப்பெயர் வந்தது. மேற்குத்தொடர்ச்சிமலை யில் இந்தப் பாகந்தான் மிகவும் தாழ்ந்தது. இக்கணவாய்க் குத் தெற்கே இம்மலைத்தொடர்ச்சி அதிக உன்னதமாய் இருக் கிறது. அதற்கு **ஆனைமுடி** என்று பெயர் அதன் உயரம் 8,837 அடி. இம்மலைத்தொடர்ச்சி தெற்கே போகப்போக உயரம் குறைந்துகொண்டே வந்து கன்னியாகுமரி முனையில் தரையோடு தரையாய் முடிந்துவிடுகின்றது.

**பீடபூமி:** மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் மத்தியிலிருக்கும் பூமி அதிக உன்னதமானது. அது சில இடங்களில் சமுத்திரமட்டத்திற்குமேல் 1,000 அடி உயரமும், சில இடங்களில் 3,000 அடி உயரமுமாக இருக் கின்றது. இம்மாதிரி உயர்ந்திருக்கும் பிரதேசத்திற்குப் பீட பூமி என்று பெயர். பீடபூமியைச் சுற்றிலும் சாதாரணமாக மலைகளிருக்கும். சென்னை ராஜதானியின் பீடபூமி மேற்கே உயரமாயும் கிழக்கே வரவர உயரம் குறைந்துகொண்டும் வரு கின்றது. இதற்குத் **தக்ஷிணபீடபூமி** என்று பெயர். இந்தப் பூமியில் துர்க்கங்கள் என்னும் அநேக மலைக்குன்றுகள் அங் கங்கே இருக்கின்றன. 4,000 அடிக்கு மேற்பட்ட அநேகம் சிறு மலைத்தொடர்கள் குறுக்கிட்டிருக்கின்றன. இதன் தென் பாகத்தில் மைசூர்ச் சுதேச ராஜ்யம் இருக்கிறது. இது மற்றப் பாகங்களைக்காட்டிலும் மிகவும் உயரமானது. இந்தப் பீடபூமி யில் பாயும் நதிகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தி யாகிக்கிழக்கு முகமாக ஓடுகின்றன. இதற்கு என்ன காரணம்?

### அப்பியாசம்.

1. இந்த ராஜ்யத்தின் படத்தை எழுதி அதிலுள்ள மலைகள், பீடபூமிகள், பள்ளத்தாக்கு இவைகளைக் காண்பிக்கவும்.

2. இப்புத்தகத்தின் முதலில் உள்ள நமது ராஜதானியின் படத்தைப்பார்த்து, இயற்கையமைப்பைப்பற்றி நீங்கள் என்ன தெரிந்துகொண்டீர்கள் ?

## சீதோஷ்ணஸ்திதி.

நாம் மிகவும் உஷ்ணதேசத்தில் வசிக்கிறோம். இங்கே சூரியவெப்பம் அதிகமாயிருக்கிறது. சில மாதங்களில் பகல் வேளை 13 மணியாகவும் வேறு சில மாதங்களில் 11 மணியாகவும் இருக்கிறது. கோடைக்காலத்தில் சூரியன் அஸ்தமிக்க 7 மணி ஆகிறது. அக்காலத்தில் வெயில் பொறுக்கமுடியாமல் இருக்கும். இராக்காலத்தில் குளிர்ந்த காற்றுக்காக வெளியில் நாம் படுத்துக்கொள்ளுகிறோம். குளிர்காலத்தில் சூரியன் சீக்கிரம் அஸ்தமிக்கும். அப்போது இராக்காலத்தில் குளிர் அதிகமாயிருக்கும்.

கடலோரமாக வசிப்பவர்களுக்குச் சாதாரணமாகக் கோடைக்காலத்தில் வெயிலின் கடுமை அதிகமாகத் தெரிகிறதில்லை. சமுத்திர ஜலம்தான் அதற்குக் காரணம். நம்வீட்டில் வெந்நீர் காய்வதற்கும் காய்ந்த ஜலம் ஆறுவதற்கும் கொஞ்சம் நாழிகை பிடிக்குமல்லவா? நெருப்பைப் போலவே சூரியவெப்பத்திற்கும் தண்ணீரை உஷ்ணப்படுத்தும் சக்தி உண்டு. சூரிய வெப்பத்தினால் நிலப்பாகம் ஜலபாகத்தைக்காட்டிலும் சீக்கிரம் சுட்டுப்போகும்; சீக்கிரத்திலும் ஆறிப்போகும். நிலப்பாகம் நன்றாய்க் காயும்போது ஜலபாகம் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் சமுத்திரத்தின் மேலிருந்து வரும் காற்று குளிர்ந்தகாற்றாக இருக்கும். பூமி உஷ்ணமாகி ஆறிப்போகும் சமயத்தில் ஜலபாகம் உஷ்ணமாயிருக்கும். ஆனால் பூமியைப்போல் அவ்வளவு உஷ்ணமாயிராது. ஜலம் சுட்டபிறகு ஆறுவதற்கு அதிக காலம் பிடிக்கும். ஆகையால் சமுத்திரத்திற்குச் சமீபத்திலிருக்கும் நிலப்பாகம் இராக்காலத்தில் அதிகமாய்க் குளிர்ந்திராது.

இந்த விஷயங்களை நன்ருய்த் தெரிந்துகொள்ள நீங்கள் உங்கள் வீட்டில் வெந்நீர் போடும்போது ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பார்க்கவேண்டும். வெந்நீர் போடுவதாக இருந்தால் நெருப்பு மூட்டின அடுப்பின்மேல் பாத்திரத்தை வைத்து அதில் ஜலம்விட்டு மேலே பலகையினுல் மூடிவைப்பார்கள். முதல் முதலில் பாத்திரத்தில்தான் சூடு ஏறும். பிறகு அதிலுள்ள ஜலம் சுடும். ஜலம் சுடுவதற்குக் கொஞ்ச நாழிகை பிடிக்கும். சுட்டபிறகு ஜலம் தானுக ஆறுவதற்கும் நாழிகை பிடிக்கும். நாழிகை பிடிக்கும் என்கிற காரணத்தால்தான் குளிர்ந்தஜலத்தைச் சேர்த்து உஷ்ணஜலத்தை ஆற்றுவார்கள். குளிர்ந்த ஜலம் சேராமல் ஆற்றவேண்டுமானுல் சிறிய பாத்திரத்தில் ஜலம் எடுத்துக்கொண்டு குளிர்ந்த காற்று அதன் மேல் படும்படியாகக் கீழும் மேலுமாகக் கொட்டி ஆற்றுவார்கள்.

நெருப்புக்காற்றுக்கு (உஷ்ணமான காற்று) ஜலபிந்துக்களை இழுக்கும் சக்தி உண்டு. கோடைக்காலத்தில் ஈரவேஷ்டி சீக்கிரத்தில் உலர்ந்துபோகிறது. உஷ்ணக் காற்றினுல்தான் சூரிய வெப்பம் சமுத்திரத்திலும், நதிகளிலும் ஏரிகளிலும் இருக்கும் ஜலத்தை இழுக்கும். ஆகையால் தான் சமுத்திரத்திலிருந்து அடிக்கும் காற்றில் ஜலபிந்துக்கள் அதிகமாயுள்ளன. ஜலபிந்துக்கள் அதிகமாய்ச் சேர்ந்தால் மேகங்கள் உண்டாகும். வெந்நீர் பொங்கும்போது ஜலபிந்துக்கள் காற்றுடன் ஆவிரூபமாய்ப் போகும். இந்த ஆவி கண்ணுக்குத் தென்படாது. இம்மாதிரி உண்டாகும் ஆவிதான் மேகங்களாக விளங்குகின்றது. வெந்நீர்த்தவலையில் ஜலம் பொங்கும்போது அதன்மேல் மூடியிருக்கும் பலகையிலிருந்து ஜலம் சொட்டிக்கொண்டிருக்கும். ஜலபிந்துக்கள் நிறைந்து இருக்கும் உஷ்ணக்காற்று குளிர்ந்திருக்கும் வஸ்துவின்மேல் பட்டால் அது மறுபடியும் ஜலரூபமாய் மாறும் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

சமுத்திரத்திலிருந்து அதிக தூரம் உள்நாட்டில் போகப் போக, பகலில் உஷ்ணம் அதிகமாயும் இரவில் குளிர் அதிகமாயும் இருக்கும். கோடைக்காலத்தில் உஷ்ணம் அதிகமா

யும் குளிர்காலத்தில் குளிர் அதிகமாயு மிருக்கும். சமுத்திரக் கரையை அடுத்தபூமியில் உஷ்ணமும் குளிரும் குறைவாக இருக்கும் என்று மேலே சொன்னோம்.

சமுத்திரமட்டத்திற்கு ஏறக்குறையச் சமமாயிருக்கும் சமவெளிப் பிரதேசங்களில் இருக்கும் உஷ்ணத்தைப்போல் மலைப்பிரதேசங்களில் வெயில் அவ்வளவு உக்கிரமாயிராது. சூரிய வெப்பம் நேராய்ப் பூமியின்மேல் படுகிறது. ஆகையால் பூமிக்குச் சமீபத்தில் இருக்கும் காற்றுக்கு உஷ்ணம் ஏறும். இந்தக்காற்று உயரப் போகப்போக உஷ்ணம் குறைந்து கொண்டே வரும். 4,000 அடி உயரமுள்ள மலைப்பிரதேசங்களில் உஷ்ணம் நீர்மட்டத்திற்குச் சமமாயிருக்கும் தேசங்களைப்போல் அவ்வளவு கடுமையாக இராது. 8,000 அடி உயரமுள்ள மலைப்பிரதேசங்களில் உஷ்ணமானது 4,000 அடி உயரமுள்ள தேசங்களில் இருப்பதைக்காட்டிலும் குறைவாக இருக்கும். ஆகையால்தான் கோடைக்காலத்திற்கூட நீலகிரி மிகவும் குளிர்ச்சியாயிருக்கிறது. நம் தேசத்திலுள்ள ஐரோப்பியரும் இந்திய கனவான்களும் கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்காக நீலகிரி முதலிய உயரமான மலைகளிற்போய் வசிப்பது வழக்கம்.

## மழை.

நமது தேசத்தில் சித்திரைமாதம் முதல் கோடை ஆரம்பமாகிறது; வைகாசி, ஆனி இந்த மாதங்களில் வெயில் அதிகமாயிருக்கும். அப்போது சென்னை ராஜதானியின் சில பாகங்களில் மழை அதிகமாய்ப் பொழியும். மழைக்கு மேகம் தான் காரணம். காற்றானது மேகங்களை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு அடித்துக்கொண்டு போகும். ஆகையால் நம்முடைய ஊரிலிருந்து காற்று இன்ன திக்கிலிருந்து இன்ன திக்குக்கு அடிக்கிறது என்பதை நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். காற்றாடியை விட்டாலும் உலர்ந்த செத்தையை விட்டாலும் காற்று இன்ன திக்கிலிருந்து இன்ன திக்குக்கு அடிக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். தெற்கிலிருந்து அடிக்கும் காற்றுக்குத் தேன்றல் என்று பெயர். மேற்கிலிருந்து அடிக்கும் காற்றுக்கு மேல்காற்று என்று பெயர். நம் தேசத்தில் கோடையில் காற்று தென்மேற்கி

லிருந்து வடகிழக்காய் அடிக்கிறது. தென்மேற்கில் விசாலமான சமுத்திரம் இருக்கிறபடியால் அங்கிருந்து அடிக்கும் காற்று மேகங்களை அதிகமாய் அடித்துக் கொண்டுவரும். இம்மாதிரி மேகத்தோடு வரும் காற்று மேற்கே இருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் குளிர்ந்த பாகத்தில் பட்டவுடனே மழை பொழியும். ஆகையால் மேற்குப் பிரதேசத்தில் இருக்கும் சமவெளிகளில் மழை மிகவும் அதிகமாகப் பெய்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே இருக்கும் பாகத்தில் மழை மிகவும் குறைவு. மேற்குத்தொடர்ச்சி மலைக்கு மேற்கே ஒரு வருஷத்தில் 100 அங்குலமும் *கிழக்கே சில இடங்களில் 25 அங்குலமும் சில இடங்களில் 5 அங்குலமும் மழை பெய்வதுண்டு. இம்மலைகளிலிருக்கும் கணவாய்கள் மூலமாய் இந்தக் காற்றுகள் சென்னை ராஜதானியின் வடபாகத்தில் உள்ள கிழக்குத்தொடர்ச்சி மலைப்பக்கங்களில் பரவ அங்கே கோடைக்காலத்தில் சிலபாகங்களில் 50 அங்குலமும் சில பாகங்களில் 60 அங்குலமும் மழை பெய்கிறது. தக்ஷிண பீடபூமியிலும் இக்காலத்தில் 15 அல்லது 20 அங்குலம் மழை பெய்வதுண்டு. இந்த மழை ஜூன்மாதம்முதல் செப்டம்பர்மாதம்வரையில் பெய்யும். இந்த மாதங்களிலே தென் மேற்கிலிருந்து வடகிழக்குக்குப் போகும் காற்று அக்டோபர்மாதம் முதலாக வடகிழக்கிலிருந்து தென்மேற்குக்குத் திரும்பி அடிக்க ஆரம்பிக்கும். விசாலமான பூபாகத்தின் மேலிருந்து அடிக்கும் காற்றானபடியால் இதில் மேகங்கள் விசேஷமாய் இருப்பதில்லை. ஆனால் இந்தக் காற்று கிழக்குக்கரைச் சமுத்திரத்தின்மேல் அடிக்கும்போது அங்கிருந்து மேகத்தைக் கொண்டுவரும். இந்த மேகங்கள் கிழக்குத் தொடர்ச்சி மலையில் படுவதால் கிழக்குக்கரைப் பிரதேசத்தில் குளிர்காலத்தில் மழை பொழியும். கோடையில் மேற்குத்

*அங்குலம் என்றால் என்ன? மழையை அளப்பதற்காக ஏற்பாடுகள் அங்கங்கே செய்திருக்கிறார்கள். உங்கள் ஊரில் அம்மாதிரியான ஏற்பாடுகள் உண்டா?

மழைஜலம் அளக்கும் விஷயத்தைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மழைஜலத்தை அளக்க ஒரு யந்திரம் இருக்கிறது. அதைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். அதைக்கொண்டு தரைத்தள உத்தியோகஸ்தர் மழை ஜலத்தை அளந்து இத்தனை அங்குலம் அல்லது சுழி என்று சொல்லுவார்கள்.

தேசத்தில் 150 அங்குலம் மழை பெய்தால் கிழக்குப் பிரதே சத்தில் குளிர்காலத்தில் 50 அங்குல மழைகூடப் பெய்வது கஷ்டம்.

கிழக்குச் சமுத்திரத்திற்கும் மேற்குச் சமுத்திரத்திற்கும் வெகு தூரத்திலிருக்கும் தக்ஷிண பீடபூமியில் மழை மிகவும் குறைவு. வருஷத்தில் 25 அங்குலம் மழைகூட அங்கே பெய்வதில்லை. கோடைக்காலத்தில் இங்கே ஏறக் குறைய 14 அல்லது 15 அங்குலம் மழை பெய்யும்.

இந்த ராஜதானியின் தென்கிழக்கில் இலங்கைத்தீவு இருப்பதால் மேகங்களை அடித்துக் கொண்டுவரும் காற்றை அத்தீவிலிருக்கும் மலை தடுக்கிறது. அதனால் இந்த ராஜ தானியின் தென்கிழக்குப் பாகங்களில் மழை கொஞ்சமாகப் பெய்கிறது.

கிழக்குக்கரை ஓரத்தில் கார்த்திகைமாதத்தில் காற்று மழை அடிக்கும். கப்பல்களுக்கு அக்காலத்தில் அபாயம் நேரிடுவதுண்டு; வீடுகளும் விழுந்துபோகும். ஜனங்களுக்கும் கஷ்டம் உண்டாகும். சில சமயங்களில் சமுத்திரம் பொங் கிச் சமவெளிகளில் வருவதுமுண்டு. 1916-வருஷம் நவம் பர்மாதத்தில் காற்றுமழை அதிகமாக அடித்ததால் சில ஜில் லாக்களில் ஜனச்சேதம் அதிகமாகவிருந்தது; பெரிய பெரிய மரங்களும் விழுந்துபோய்விட்டன.

## நதிகள்.

மழையானது மேகத்தால் உண்டாகிறது என்று உங்களுக் குத் தெரியும். மழை பெய்யும்போது நீங்கள் நன்றாய்க் கவனித் துப் பார்த்தால் அநேக விஷயங்கள் உங்களுக்குத் தெரியும். கீழேவிழும் மழைத்துளிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து ஆரம்பத்தில் சிறு கால்வாய்களாக ஓடும். இந்தக் கால்வாய் உயரத்திலிருந்து சாய்வாயிருக்கும் மார்க்கமாக ஓடிப் பக் கங்களில் அருவிகளாகச் செல்லும். இந்த மழைஜலம் உயர்ந்த இடத்திலிருந்து சாய்வான இடத்திற்கு ஓடும்போது வழியிலிருக்கும் மண்ணை அடித்துக்கொண்டு போகும். ஆகை யால்தான் இவற்றின் ஜலம் மிகவும் கலங்கியிருக்கும்.

சாதாரணமாய் நதிகள் உயர்ந்த மலைநாடுகளில் உற்பத்தியாகும். உற்பத்தியாகுமிடத்தில் அவை மிகவும் சிறியவைகளாக இருக்கும். பிரவாகம் அதிகமாக ஆகச் சுற்றுப் பக்கங்களிலிருந்து ஜலமானது கால்வாய்கள் மூலமாய் இதில் வந்து விழும். இம்மாதிரி நதிகளில் ஜலம் சேரச்சேரப் பிரவாகம் அதிகமாகிக் கடைசியில் சமுத்திரத்தில் கலக்கிறது. ஆகையால் நதிகள் உயர்ந்த மலைநாடுகளிலிருந்து தாழ்ந்த சமுத்திரத்திற்கு ஓடுகின்றன என்று தெரிந்துகொள்ளவேண்டும். நதியின் உற்பத்திஸ்தானம் எப்படியிருக்குமென்று நீங்கள் கேட்கலாம். மழை ஜலம் பூமியிலாவது ஊறும், அல்லது பிரவாகமாகவாவது ஓடும். பூமியின் அடியில் கற்பாறையாக இருக்கும் இடம்வரையில் ஜலம் ஊறும். அதற்கு அடியில் ஜலம் ஊறுது. அந்த ஜலம் அப்பாறைமேலேயே தணிவாக இருக்கும் இடத்திற்கு ஓடும். பாறையின் மட்டத்தை நாம் தாழ்வாக இருக்கும் இடங்களில் பார்க்கலாம். ஜலம் அங்கேயிருந்து ஓடிக்கொண்டிருக்கும். அந்த இடத்திற்கு **ஊற்று** என்று பெயர். இந்த ஊற்றுத்தான் நதிக்கு ஆரம்பம். இது போகப்போக, பெரியதாக ஏற்படும். இம்மாதிரி ஊற்றுக்களிலிருந்து ஜலம் புறப்பட்டு அப்படியும் இப்படியுமாகப் பள்ளத்தை அநுசரித்து ஓடி நதியில் கலக்கும்


ஜலம் மலைமேலிருந்து கீழே ஓடிவரும்போது வழியிலிருக்கும் மண், கல் முதலியவற்றை அடித்துக்கொண்டு போய்த் தரையை ஆழமாக்கும். சரிவு அதிகமாயிருந்தால் மண், கல் இவைகளை விசேஷமாய் அடித்துக்கொண்டு போகும். அப்போது பள்ளத்தாக்கின் ஆழம் அதிகமாகும். நதிகள் மலைகளிலிருந்து சமுத்திரத்திற்கு ஓடும்போது இம்மாதிரியான பள்ளத்தாக்குகள் ஏற்படுகின்றன.

பூமி மேடுபள்ளமாக இருக்கிறது. ஜலம் சாதாரணமாய் மேட்டு நிலத்தில் ஏறுது. பள்ளத்தாக்கை அனுசரித்தே ஓடும். சுற்றுப்பக்கங்களில் இருக்கும் பூமியைக்காட்டிலும் பள்ளத்தாக்கு அதிகத் தாழ்வாக இருப்பதால் ஜலம் அதில் வந்து விழும். நதிகள் வளைந்து வளைந்து சாய்வாக இருக்கும் வழியே ஓடும். இவைகள் உயரமான மலைகளிலிருந்து

திடீரென்று பள்ளத்தாக்கில் விழும். அப்பேர்ப்பட்ட இடத்திற்கு ஆகாசகங்கை அல்லது நீர்வீழ்ச்சி என்று பெயர். இம்மாதிரி நீர்வீழ்ச்சிகள் நம் ராஜ்யத்தில் சில விடங்களிலிருக்கின்றன. சாதாரணமாய் நதிகள் மலைகளிலிருந்து புறப்பட்டுச் சமவெளிக்கு வருகிறவரையில் அதிவேகமாய் ஓடிவரும். கூழாங்கல்லை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? மலைகளிலிருந்து கற்கள் பிரவாகத்தோடு தரையோடு தரையாய் உருண்டுகொண்டே வருவதனுல்தான் அக்கற்களுக்கு அந்த உருண்டையான வடிவம் ஏற்பட்டது. சமவெளிகளில் பிரவாகம் ஓடும்போது மெல்லத்தான் ஓடும். பிரவாகத்தின் வேகம் மிகவும் குறைந்துகொண்டே போகும். மலைநாட்டிலிருந்து அடித்துக்கொண்டுவரும் மண், கல் முதலியவைகள் இந்தச் சமவெளிகளில் தரையோடு தரையாகச் சேர்ந்து வர வர, பூமி உயர்ந்துகொண்டே வரும். இம்மாதிரி மணலானது முகத்துவாரத்தில் ஏற்பட ஏற்பட நதி நான்கு அல்லது ஐந்து கிளைகளாகப் பிரிந்து சமுத்திரத்தில் சேரும். இந்தக் கிளைகளுக்கு மத்தியிலிருக்கும் பூமி வருஷந்தோறும் விசாலமாகிக்கொண்டே வரும். இந்தப்பாகம் சாதாரணமாக முக்கோணவடிவமாய் இருக்கும். இதற்கு டேல்டா என்று பெயர். கிழக்குக்கரைச் சமவெளிப் பிரதேசங்கள் அநேகமாய் இம்மாதிரிதான் ஏற்பட்டன.

**சென்னை ராஜதானியின் நதிகள்:**—சென்னை ராஜதானியில் அநேக நதிகள் உண்டு. அவைகளில் சில பெரியவைகளாகவும் வேறு சில சிறியவைகளாகவும் இருக்கின்றன. பெரிய நதிகள் எல்லாம் சாதாரணமாய் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. அங்கிருந்து பூமி கிழக்கில் தாழ்வாய் இருக்கிறபடியால் நதிகள் பீடபூமியில் ஓடிக் கிழக்குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு சமவெளிகளில் பாய்ந்துகொண்டே சமுத்திரத்தில் கலக்கின்றன. சிறிய நதிகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மேற்குமுகமாய் ஓடி அரபிக்கடலில் விழுகின்றன. சில நதிகள் கிழக்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிக் கிழக்குமுகமாய் ஓடிக் கிழக்குச் சமுத்திரத்தில் கலக்கின்றன. இந்த ராஜதானியில் கோதாவரி, கிருஷ்ணு, காவேரி என்னும் மூன்று நதிகளும் மிகவும் பெரிய நதிகள்.

**கோதாவரி:**—இது மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இதன் உற்பத்தி ஸ்தானத்திற்கும் மேற்குச்சமுத்திரத்திற்கும் 50 மைல் தூரமிருக்கிறது. இந்த உற்பத்தி ஸ்தானத்தை இந்துக்கள் பெரிய புண்ணிய ஸ்தலமென்று கொண்டாடுகிறார்கள் அங்கே ஒரு மண்டபமும் அதனுள் ஒரு பிம்பமும் இருக்கின்றன அப் பிம்பத்தின் வாயிலிருந்து பிந்து பிந்துவாக ஜலம் சொட்டிக்கொண்டேயிருக்கிறது. அவ்விடத்தில் இந்நதி எவ்வளவு சிறியதாக இருக்குமென்பதை ஊகித்துப் பார்த்துக்கொள்ளலாம். இந்நதி பம்பாய் ராஜதானியில் 100 மைல் ஓடி, ஹைதராபாத் ராஜ்யத்தில் 176 மைல் தென்கிழக்காகச் செல்லுகிறது. பிறகு மத்திய மாகாணத்திற்கும் ஹைதராபாத்துக்கும் நடு எல்லையாகக் கிழக்குத்தொடர்ச்சி மலைவளையில் ஓடுகிறது. இதன் அகலம் சில இடங்களில் ஒரு மைலும் சில இடங்களில் இரண்டு மைலுமாக இருக்கிறது. கிழக்குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு ஓடும்போது இரு கரைகளிலும் மலைகளும் காடுகளும் இருக்கின்றன. இவ்விடத்தில் இது அகலம் குறைந்து இடுக்குவழியாய்ச் சமவெளியில் பாய்கிறது. இங்கே அகலம் குன்றியிருப்பதனால் ஆழம் அதிகமிருக்கும்; அதனால் ஜலம் கறுப்பாய் இருக்கும். சமவெளிகளில் இந்நதி மெதுவாக ஓடுகின்றது. இதன் டெல்டா இங்கேதான் ஆரம்பம். நதியின் அகலம் அதிகமாயிருப்பதால் இங்கு மணல்மேடிட்டு வருஷந்தோறும் பூமி உயர்ந்துகொண்டே வருகின்றது இங்கே அநேகம் செழிப்பான இடங்கள் இருக்கின்றன. இராஜமகேந்திரபுறம் என்கிற பட்டணத்தில் இருப்புப் பாதை போடுவதற்காக ஒரு பெரிய வாராவதி கட்டப்பட்டிருக்கிறது. அதன் நீளம் 3 மைல் இப்பட்டணத்திற்குக் கிழக்கே 5 மைல் தூரத்தில் தவளேசுவரமென்னும் கிராமத்தில் இந்நதி இரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. கிழக்கே ஓடும் கிளைக்குக் கௌதமகோதாவரி என்றும் மேற்குக் கிளைக்கு வசிஷ்டகோதாவரி என்றும் பெயர். இந்தக் கிராமத்திற்கும் கடலுக்கும் 30 மைல். இங்கே ஓர் அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. அதன் நீளம் $2\frac{1}{4}$ மைல். இதன் மத்தியில் இரண்டு தீவுகள் இருக்கின்றன. அவைகளின் வழியாகத்தான் அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணைக்



BEZWADA ANICUT.—பெஜவாடா அணைக்கட்டு.


கட்டிலிருந்து மூன்று கால்வாய்கள் வெட்டி ஜலத்தைக் கொண்டுபோய், பாய்ச்சல் முதலியவைகளுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். இந்தக் கால்வாய்களில் படகுகள் ஓடுகின்றன. இந்நதியின் நீளம் 898 மைல்.

கோடையில் மேற்குத்தொடர்ச்சி மலையில் மழை அதிகமாய்ப் பெய்யும்போதுதான் அதாவது ஆனி, ஆடி மாதங்களில் இதில் பிரவாகம் அதிகமாய் வரும். வெகுகாலமாய் இந்நதி ஜனங்களுக்கு ஜீவன் ஆதாரமாயிருந்து வருகிறபடியால், இதைப் புண்ணிய நதியென்றும் இதில் ஸ்நானம்செய்தால் நல்லகதி அடையலாமென்றும் இந்துக்கள் நினைத்து அதன் கரைகளில் அநேகங் கோவில்கள் கட்டியிருக்கிறார்கள். ஜனங்கள் வெகுதூரத்திலிருந்து யாத்திரையாக வந்து இந்நதியில் ஸ்நானம்செய்து போவதுமுண்டு.

**கிருஷ்ணா:**—இந்நதி மேற்குத்தொடர்ச்சி மலையில் மஹாபிலேசுவரம் என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது. மேற்குச் சமுத்திரத்திற்கும் இதற்கும் 50 மைல் தூரமிருக்கிறது. இது பம்பாய் ராஜதானியில் 300 மைல் தூரம் ஓடி ஹைதராபாத்தில் பிரவேசிக்கிறது. சென்னை ராஜதானிக்கும் ஹைதராபாத்திற்கும் எல்லையாக உள்ளது. பிறகு கிழக்குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு சமவெளியில் பாய்ந்து சமுத்திரத்தில் கலக்கிறது. இது பம்பாய் ராஜ்யத்தில் 300 மைலும் ஹைதராபாத்தில் 400 மைலும் சென்னை ராஜதானியில் 100 மைலுமாக ஓடுகின்றது. இதன் நீளம் 800 மைல். ஆனால் இது சென்னை ராஜதானிக்குமட்டுமே அதிக உபயோகமானது. பெஜவாடா என்கிற பட்டணத்தில் இதன் டெல்டா ஆரம்பிக்கிறது. அங்கே அணைக்கட்டு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து கால்வாய்கள் மூலமாய் ஜலத்தைக் கொண்டுபோய்ப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். பெஜவாடாவுக்கும் சமுத்திரத்திற்கும் 45 மைல் தூரம். இந்நதியிலும் இதன் கால்வாய்களிலும் படகுகள் போகின்றன. இந்நதியையும் இந்துக்கள் புண்ணியநதியாகக் கொண்டாடுகிறார்கள்.

**காவேரிநதி:**—இந்நதி மேற்குத்தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் தலைக்காவேரி என்னுமிடத்தில் உற்பத்தியாகி,

குடகு, மைசூர்ப்பீடபூமி இவற்றின் வழியாய் ஓடுகிறது. பிறகு கிழக்குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு சென்னை ராஜதானியின் சமவெளியில் பாய்ந்து கடலோடு கலக்கிறது. இதன் நீளம் 475 மைல். மைசூர் ராஜ்யத்தில் இந்நதியில் 12 அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன.





CAUVERY FALLS.—காவேரி நீர்வீழ்ச்சி.

அவ்வைகளின் வழியாய் ஜலத்தைக் கொண்டுபோய் உபயோகப் படுத்துகிறார்கள். இந்நதியின் பாய்ச்சலில் மூன்று தீவுகள்

இருக்கின்றன. அவற்றுள் ஒன்று ஸ்ரீரங்கபட்டணம். இங்கே இந்நதி இரண்டு கிளைகளாகப் பிரிந்து மறுபடியும் ஒன்றுய்ச் சேருகின்றது. இதற்கு ஆதிரங்கம் என்று பெயர். இந்த இடத்தில் இந்நதிக்கு 1,400 அடி நீளமுள்ள ஒரு வாராவதி கட்டப்பட்டிருக்கிறது. அது மைசூர் அரசரின் மந்திரியான பூர்ணையா என்பவரால் ஏறக்குறைய 110 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது. மைசூர் ராஜ்யத்தைப் பிடித்த வெல் லஸ்லி பிரபுவின் பெயரை அதற்கு வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீரங்கபட்டணத்திற்கு 50 மைல் தூரத்தில் சிவசமுத்திரம் என்கிற தீவு ஒன்றிருக்கிறது. இதற்கு மத்திய ரங்கம் என்று பெயர். இங்கே இந்நதி கிழக்குத்தொடர்ச்சி மலையிலிருந்து ஆகாச கங்கையாக விழுகிறது ஜூன், ஜூலை மாதங்களில் இந்நதியில் பிரவாகம் பூர்ணமாக இருக்கும்போது இந்த நீர்வீழ்ச்சி பார்க்க மிகவும் ஆச்சரியமாயிருக்கும். இதை நேரில் பார்த்துத்தான் அநுபவிக்கவேண்டும். இங்கே இந்நதி இரண்டு கிளைகளாகப் பிரிந்து 320 அடி உயரத்திலிருந்து கீழே விழுகின்றது. மறுபடியும் இந்தக் கிளைகள் ஒன்றுகச் சேர்ந்து சென்னை ராஜதானியில் பிரவேசிக்கின்றன. மைசூர் ராஜ்யத்தில் திவானுக இருந்த சேஷாத்திரி ஐயர் என்னும் கனவான் சிவசமுத்திரத்தில் நீர்வீழ்ச்சியினுல் உண்டாகும் சக்தியை உபயோகப்படுத்தும்பொருட்டுச் சில யந்திரங்களை ஸ்தாபித்துத் தந்திக் கம்பிகளினுல் அதை வெகுதூரம் கொண்டுபோய்ப் பயன்படும்படி செய்திருக்கிறார். இது உலகத்திலுள்ள ஆச்சரியங்களில் ஒன்று. சென்னை ராஜதானியில் இந்நதி பிரவேசித்தபிறகு பவானி, அமராவதி என்கிற உபநதிகள் இதில் வந்து கலக்கின்றன.

ஸ்ரீரங்கம் என்னுமிடத்தில் இந்நதி மறுபடியும் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இதுமுதல்தான் டெல்டா ஆரம்பம். வடக்கே ஓடும் கிளைக்குக் கொள்ளிடம் என்று பெயர். ஒரு பெரிய நதியாக ஓடி இது கடலில் கலக்கின்றது. தெற்கே ஓடும் கிளைக்குக் காவேரி என்று பெயர். இதன் ஜலத்தைப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்தும்பொருட்டு இதைச் சோழ அரசர்கள் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். சமுத்திரத்தில் கலக்கும்போது இந்நதி மிகவும் சிறியதாகக் காணப்

படும். இதன் ஜலம் விவசாயத்துக்கு உபயோகப்படுவது போல் எந்த நதிஜலமும் உபயோகப்படுகிறதில்லை.


ஸ்ரீரங்கத்திற்கு மேற்கேயும் கிழக்கேயும் பெரிய அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்நதியின் டெல்டா வுக்கு, தென் இந்தியாவின் தோட்டம் என்று பெயர். அநே கம் கால்வாய்களை வெட்டி ஜலத்தைத் திருப்பிக்கொண்டு போவதனால்தான் இதற்கு இந்தப் பெயர் வந்தது.

இம்மூன்று பெரிய நதிகளைத்தவிர நடுத்தரமான நதிகள் அநேகம் இருக்கின்றன.

**துங்கபத்திரா**: இந்த நதி மைசூர்ப் பீடபூமியில் **துங்க, பத்திரா** என்னும் இரண்டு நதிகளாக ஆரம்பித்து அந்த ராஜ் யத்திலேயே ஒன்றுசேர்ந்து முதலில் மைசூர் ராஜ்யத்திற்கும் பம்பாய் ராஜ்யத்திற்கும் மத்தியில் ஓடி அப்பால் சென்னை ராஜதானிக்கும் பம்பாய் ராஜதானிக்கும் நடுவே சென்று பிறகு ஹைதராபாத்துக்கும் சென்னை ராஜதானிக்கும் எல்லை யாகப் போய், கிருஷ்ணா நதியில் கலக்கிறது. இந்நதியி லிருந்து கால்வாய்கள் வெட்டப்பட்டுப் பாய்ச்சலுக்கு மிகவும் உபயோகப்படுகின்றன.

**பெண்ணையாறு**:—இதற்கு வடபெண்ணையென்றும் பினு கினி என்றும் பெயர். இது மைசூர் மலைநாட்டில் உற்பத்தி யாகி வடகிழக்காக ஓடி, சென்னை ராஜதானியில் பிரவேசித்து முதலில் வடக்கு முகமாய் ஓடி, பிறகு கிழக்கு முகமாய்த் திரும்பி வெகுதூரம் சென்று கிழக்குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு சமுத்திரத்தில் கலக்கிறது. இதன் நீளம் 350 மைல். இதன் டெல்டா நெல்லூர் ஜில்லாவில் ஆரம்பிக் கிறது. இந்த ஜில்லாவில் இரண்டு பெரிய அணைக்கட்டுகள் கட்டி ஜலத்தைத் திருப்பிக்கொண்டுபோய் உபயோகப்படுத்து கிறார்கள்.

**பாலாறு**:—இது மைசூர் ராஜ்யத்தில் பினுகினிக்குச் சமீ பத்தில் உற்பத்தியாகி அந்த ராஜ்யத்தில் 40 மைல் ஓடி, கிழக் குத்தொடர்ச்சி மலையைத் துளைத்துக்கொண்டு சென்னை ராஜ தானியில் பிரவேசித்து, 183 மைல் சென்று வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றது. இந்நதிக்கும் அணைக்கட்டுக்



TAMBRAPARANI.—தாம்பிரபரணி.

கட்டிக் கால்வாய்கள் மூலமாய் ஜலத்தைக் கொண்டுபோய்ப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

**தென் பெண்ணையாறு:**—இது மைசூர் ராஜ்யத்தில் நந்தி துர்க்கத்தில் உற்பத்தியாகி, சென்னை ராஜதானியில் பிர

வேசித்து 200 மைல் ஓடிக் கடலில் கலக்கின்றது. இதற்கும் அணைக்கட்டுக் கட்டி ஜலத்தைத் திருப்பிக்கொண்டு போகிறார்கள். இந்நதியும் புண்ணிய நதிகளில் ஒன்று. தை மாதத்தில் கங்காநதியானது பூமிக்குள்ளாக இந்நதியில் வந்து கலக்கிறது என்று ஜனங்கள் அநேக உத்ஸவங்கள் நடத்துகிறார்கள்.

**தாம்பிரபரணி** நதி:—இது திருவாங்கூர் ராஜ்யத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையைச் சேர்ந்த அகஸ்தியமலையில் உற்பத்தியாகி ஆரம்பத்தில் மலைநாட்டில் ஓடுகின்றது. பாபநாசம என்னுமிடத்தில் இந்நதி மேலேயிருந்து கீழே ஆகாச கங்கையாக விழுகிறது. இம்மலைநாட்டில் உற்பத்தியாகும் சித்திரநதி என்கிற சிறிய நதி இதன் உபநதியாகும். இந்த உபநதி **குற்றலம்** என்னுமிடத்தில் அருவியாக விழுகிறது. கோடையில் குற்றலத்து அருவியில் ஸ்நானம் செய்யவும், தேக சௌக்கியத்தை உத்தேசித்தும் அநேகர் போவார்கள். கோடைக்காலத்திலும், மழைக்காலத்திலும் பெய்யும் மழைஜலம் இந்நதியில் விழுவதனுல் வருஷம் முழுவதும் இதில் ஜலம் ஓடிக்கொண்டிருக்கும். இதன் நீளம் 70 மைல் ஆனபோதிலும் இதற்கு 8 அணைக்கட்டுகள் உண்டு. இது கடைசியில் வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. திருநெல்வேலி பட்டணத்தில், இந்நதியின்மேல் கட்டப்பட்ட வாராவதியின் படம் 20-ஆம் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

**வைகை**:—இதுவும் மேற்குத் தொடர்ச்சிமலைகளில் உற்பத்தியாகி, கிழக்காக மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்கள் வழியாக ஓடி வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. மேற்கே ஓடும் பெரியாறு என்னும் நதியின் ஜலத்தை இதில் திருப்பி இருக்கிறார்கள். ஆகையால் இந்த நதியில் பிரதி வருஷத்திலும் 9 மாதம் ஜலம் ஓடும்.

### அப்பியாசம்

தென்னிந்தியா படத்தைவரைந்து, அதில் மேற்சொன்ன நதிகளைக் காட்டவும்.

### ஏரிகள்.—(Lakes.)

சில்கா ஏரி:—இந்த ராஜதானியில் சில ஏரிகள் இருக்கின்றன. அவைகள் பெரியவைகளல்ல. ராஜதானியின் வடக்கே இருக்கும் ஏரிக்கு, **சில்கா** ஏரி என்று பெயர். இது ஒரிஸ்

ஸாவில் ஆரம்பமாகிறது. இதன் ஜலம் உப்பானது. எந்த இடத்திலும் இது ஆறடி ஆழத்திற்குமேல் இல்லை. இது சரியான ஏரி அன்று. இதற்கு ஒருபுறத்தில் கரை இல்லை; சமுத்திரத்துடன் சேர்ந்திருக்கிறது.

பழவற்கோடு ஏரி: —(The Pulicat Lake)—இது சென்னைக்கு வடக்கே இருக்கிறது. இது மிகவும் ஆழமில்லாதது. இது தெற்கு வடக்காய் வியாபித்திருக்கிறது. சமுத்திர ஜலம் புரண்டு உண்டானதால் இதன் ஜலம் உப்பாய் இருக்கும்.

## இயற்கைப் பிரிவுகள்.—(Natural Divisions.)

மேலே இந்த ராஜதானியின் இயற்கை அமைப்பும் சீதோஷ்ணஸ்திதியும் மழை வளமும் சொல்லப்பட்டன. இவைகளை அனுசரித்து இந்த ராஜதானியை வெவ்வேறு பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மேற்குக் கடலைச்சார்ந்த சமவெளிப் பிரதேசம், (2) இதற்கு அடுத்த மலைநாடு, (வயநாட்டின் பீடபூமியும் இதில் சேர்ந்திருக்கிறது), (3) தென் கிழக்குச் சமவெளிப் பிரதேசம், (4) கிழக்குக்கரைச் சமவெளியின் மத்தியபாகம், (5) கிழக்குக்கரைச் சமவெளியின் வட பாகம், (6) இதற்கு மேற்கே இருக்கும் கிழக்குத்தொடர்ச்சி மலையின் பாகம், [இதற்கு ஏஜென்ஸி டிராக்ட்ஸ் (Agency-tracts) என்று பெயர்], (7) தக்காண பீடபூமி.

## ஜில்லாக்கள்.—(Political Divisions.)

இந்தப் பிரிவுகளை ஆளுவதற்கு அனுகூலமாயிருக்கும்பொருட்டு 25 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். கிழக்குக்கரைத் தீரத்தில் வடக்கே இருக்கும் ஜில்லாக்கள் கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் என்பன. இவ்வைந்து ஜில்லாக்களும் வடசர்க்கார் ஜில்லாக்கள் என்று பெயர். கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி இவைகளின் மலைநாட்டுக்கு ஏஜென்ஸி டிராக்ட்ஸ் என்று பெயர். குண்டூருக்குத் தெற்கே கிழக்குக்கரை ஓரத்தில் நெல்லூர், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் இந்த ஜில்லாக்கள் இருக்கின்றன. செங்கற்பட்டு ஜில்லாவுக்கு மேற்கே இருக்கும் உள்நாட்டைச் சித்தூர், வட ஆற்காடு என்னும் ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள் இவைகள் சமுத்திரக்கரையில் இல்லை. சமுத்திரக்கரை ஓரத்தில் இருக்கும் ஜில்லாக்களைப்

போல் இவைகள் சமவெளிகள் அல்ல. சில இடங்களில் மலைகளும் சில இடங்களில் சமவெளிகளும் இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவுக்கு மேற்கே* திருச்சிராப்பள்ளி ஜில்லா இருக்கிறது. இதுவும் சமுத்திரக்கரையில் இல்லை படத்தை நன்றாய்ப் பார்த்து வட.ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி இந்த ஜில்லாக்களுக்கு மேற்கே சேலம், கோயம்புத்தூர் என்னும் ஜில்லாக்கள் இருப்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த இரண்டு ஜில்லாக்களும் அநேகமாய் மலைநாடுகளே ; அங்கங்கே பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. மொத்தமாய் மேலேசொன்ன ஜில்லாக்களைக் கிழக்குக்கரைப் பிரதேசத்தின் மத்தியபாகத்திற் சேர்ப்பது வழக்கம்.

கிழக்குக்கரைப் பிரதேசத்தில் இராமநாதபுரம். திருநெல்வேலி இந்த ஜில்லாக்கள் இருக்கின்றன. இராமநாதபுரத்திற்கு வடமேற்கே மதுரை ஜில்லா இருக்கிறது. மதுரை ஜில்லா சமுத்திரக்கரையில் இல்லை இந்த மூன்று ஜில்லாக்களும் தஞ்சாவூர் ஜில்லாவின் தென்பாகமும் கிழக்குக்கரைப் பிரதேசத்தின் தென்பாகமுமாகின்றன.

மேற்குக்கரை ஓரத்தில் மலையாளம் ஜில்லாவும் (மலபார்), தென்கன்னடம் ஜில்லாவும் இருக்கின்றன. மலையாளம் ஜில்லாவுக்குக் கிழக்கிலும் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு மேற்கிலும் நீலகிரி ஜில்லா இருக்கிறது இது சுத்த மலைநாடு.

தக்ஷிண பீடபூமியில் கடப்பை, கர்நூல், அனந்தபுரம், பல்லாரி இந்த ஜில்லாக்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாக்களில் கடல் இல்லை.

சமுத்திரக்கரை இல்லாத ஜில்லாக்களைச் சொல்லுக மேலே சொன்ன 25 ஜில்லாக்கள் தவிர, திருவாங்கூர் ராஜ்யத்தின் மேற்குக்கரை ஓரத்தில் அஞ்சங்கோ என்னும் ஒரு சிறிய ஜில்லா இருக்கிறது. இதுவும் சேர்ந்து இந்த ராஜதானியை 26 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## ஜில்லாக்களும் நதிகளும்.

படத்தை நன்றாகப் பார்த்து இந்த ஜில்லாக்கள் இருக்கும் இடத்தையும் இவ்விராஜதானியின் முக்கிய நதிகள் ஓடும்

* திருச்சிராப்பள்ளி, சேலம் ஜில்லாக்களுடைய எல்லைகளை கொஞ்சம் மாற்றி இருக்கிறார்கள். இந்த மாறுபாடுகள் 54 வது பக்கத்தில் உள்ள படத்தில் காண்பிக்கப்படவில்லை.

ஜில்லாக்களையும் தெரிந்துகொள்க ; கோதாவரி நதி கோதாவரி ஜில்லாவிலும் கிருஷ்ணா நதி கிருஷ்ணா ஜில்லாவிலும், குண்டூர் ஜில்லாவிலும் ஓடுகின்றன. **வட பெண்ணையாறு,** மைசூர் ராஜ்யம்விட்டபிறகு அனந்தபுரம், கடப்பை, நெல்லூர் இந்த ஜில்லாக்கள் வழியாக ஓடுகின்றது. **பாலாறுனது** வட ஆற்காடு, செங்கற்பட்டு இந்த ஜில்லாக்களில் ஓடுகிறது. **தென் பெண்ணையாறுனது,** சேலம், தென்ஆற்காடு இந்த ஜில்லாக்கள் வழியாக ஓடுகிறது. **காவேரியானது** சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு எல்லையாக ஓடித் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் சென்று கடலில் விழுகிறது. **தாம்பிரபரணி** யானது திருநெல்வேலி ஜில்லாவில்மட்டும் ஓடுகிறது. **வைகை,** மதுரை, ராமனுதபுரம் ஜில்லாக்களின் மூலமாய் ஓடுகிறது.

### அப்பியாசம்.

நமது ராஜதானியின் படம் ஒன்று எழுதி, அதில் ஜில்லாக்களையும், அவைகளின் எல்லைகளையும் காட்டவும். அதில் ஜில்லாக்களில் ஓடும் முக்கிய நதிகளையும் காண்பிக்கவும்

### நீர்ப்பாய்ச்சல்.

ஆறுகள் நமக்கு எவ்வளவு உபயோகமுள்ளவைகள் என்பது உங்களுக்குத் தெரியும். நமது பக்கங்களில் மழைபெய்வது மிகவும் ஆச்சரியமானது. வருஷத்தில் மிகவும் சில நாட்களே மழைபெய்யும். சென்னபட்டணத்தைப்போன்ற நகரத்தில் வருஷத்தில் 50 அங்குலம் மழைபெய்கிறது. அதுவும் ஏறக்குறைய 30 நாட்களில் பெய்துவிடுகிறது. ஆகையால் மழைக்காலத்தில் ஜலத்தைக் கட்டிவைக்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் நமது வயல்களுக்குப் பாய்ச்ச மழை ஜலம் பயன்படாது.

**கால்வாய்கள் :**—ஆறுகளில் அணைகள் கட்டியிருப்பது ஆற்றில் ஓடும் தண்ணீரைப் பக்கங்களில் இருக்கும் கால்வாய்களில் திருப்புவதற்காகத்தான். கால்வாய்கள் முதலில் பெரியவைகளாக இருந்து பிறகு அநேகமாய்ப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. டெல்டா பாகங்கள் முழுவதிலும் கணக்கில்லாத கால்வாய்கள் ஓடுகின்றன.

கோதாவரிக் கால்வாய்களின் நீளம் 2,000 மைல். இந்தக் கால்வாய் 500 மைல்வரையில் படகின் போக்குவரவுக்கு

அனுகூலமானது. கிருஷ்ணா நதியின் பெரிய கால்வாயின் நீளம் 370 மைல். அது 335 மைல்வரையில் படகுகளின் போக்குவரவுக்குச் சாதனமாயிருக்கிறது. மேலும் சிறிய கால்வாய்கள் 2,000 மைல் தூரத்திற்கு மேற்பட்டுப் பாய்ச்சலுக்கும் உபயோகமாகின்றன.

காவேரிநதி 10 லக்ஷம் ஏகருக்கு மேற்பட்ட நிலங்களுக்குப் பாய்கிறது. அதனால் அது எவ்வளவு உபயோகமுள்ளதென்பதை நீங்களே அறிவீர்கள். இந்தப் பக்கத்தில் அரசாண்ட பூர்விக அரசர்கள் காவேரியின் ஜலத்தை உபயோகிக்கவேண்டிய பல ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

துங்கபத்திராவிலிருந்து 190 மைல் நீளமுள்ள ஒரு கால்வாய் கர்நூல் கடப்பை ஜில்லாக்களில் ஓடுகிறது. முதலில் எண்ணினபடி இக்கால்வாய் அதிக உபயோகமாக இராவிட்டாலும் க்ஷாமகாலங்களில் மிகவும் பயன்படுகிறது. ஒவ்வொரு நதிகளிலும் அணைக்கட்டுகள் கட்டி, அவைகளில் ஜலத்தைக் கால்வாய்களின் மூலமாய் பாசனத்துக்கு உபயோகப் படுத்துகிறார்கள். உங்கள் ஜில்லாவில் ஆற்றுக் கால்வாய்கள் ஏதாவது உண்டா?

**ஏரிகள்:** நீர்ப்பாய்ச்சலுக்கு மேற்சொன்ன ஆதாரங்கள் ஏற்பட்டிருப்பதுடன் ஏரிகளும் இருக்கின்றன. நீங்கள் எப்போதாவது ஏரியைப் பார்த்திருக்கிறீர்களா? அதற்கு நாலுபக்கங்களிலும் கரையிருக்கும். அதன் மத்தியில் ஜலம் இருக்கும். மழைக்காலங்களில் அதில் தண்ணீர் நிறைந்திருக்கும். கோடைக்காலங்களில் நீர்வற்றி இருக்கும். வருஷம் முழுவதும் தண்ணீருள்ள ஏரிகள் மிகவும் சிலவே. சில ஏரிகள் பெரியவை. சில சிறியவை. மலைகளும் குன்றுகளும் சில இடங்களில் ஏரிக்கரையாக இருக்கின்றன. ஏரிகளை எல்லா இடங்களிலும் வெட்ட முடியாது. குறிப்பான சில இடங்களில்தான் வெட்ட முடியும். உங்கள் ஜில்லாவிலுள்ள பெரிய ஏரிகள் எவை? தக்ஷிண பீடபூமியில் அவ்வித வசதியான இடங்கள் அநேகம் உண்டு. அங்கு ஏரிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ராஜதானியில் 3,300 ஏரிகள் உண்டு. கர்நூல் ஜில்லாவில் உள்ள கம்பம் ஏரி மிகவும் பிரசித்திபெற்றது. இது மிகவும் புராதனமானது. இது ஜமதக்னி என்னும் மகருஷியினால் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லுகிறார்

கள்; சித்தூர் ஜில்லாவிலுள்ள வீராணத்தேரி மிகவும் பெரியது. அதன் கரை 12 மைல் நீளமுள்ளது.

**கிணறுகள் :**—கால்வாய்களையும், ஏரிகளையும் அன்றி, கிணறுகளும் இருக்கின்றன. இவை அதிகமான பணச்செலவில்லாமல் ஏற்படுத்தக்கூடியவை. கோயம்புத்தூர் கிணற்றினால் பாய்ச்சப்படும் ஜில்லா. ராஜாங்கத்தார் கிணறு வெட்டும்பொருட்டுக் குடியானவர்களுக்கு முன்பணம் கொடுத்து உதவிபுரிகிறார்கள். கிணற்றிலிருந்து தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சும் விதத்தை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் விதங்களில் நீங்கள் பார்த்ததை விவரமாகச் சொல்லுக. ஏற்றம், கபிலை இந்த உபாயங்களால் எவ்வளவு தண்ணீர் வீணாகிறதுபாருங்கள். சிறிதும் சேதமில்லாமல் இறைக்கப்படும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க ஜனங்கள் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

### அப்பியாசம்.

சென்னை ராஜதானியின் படத்தை வரைந்து அதில் கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இவைகளின் டெல்டாக்களையும், கர்நூல் கடப்பைக் கால்வாயையும், பெரியாற்று அணை இருக்கும் இடத்தையும், கம்பம், வீராணத்து ஏரிகளையும் காண்பிக்கவும்.


### விளை பொருள்கள்.

நமக்கு அநேகம் பொருள்கள் தேவையாக இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது நாம் சாப்பிடும் ஆகாரம். வெகு காலத்திற்குமுன் ஜனங்கள் வேட்டையாடியும் மீன்பிடித்தும் ஆகாரம் சம்பாதித்தார்கள். இப்போதுகூட, சிலர் அப்படியே ஆகாரத்தைச் சம்பாதிக்கிறார்கள். பிறகு மனிதர்கள் ஆடு, மாடு, குதிரை முதலியவற்றின் உபயோகத்தைத் தெரிந்துகொண்டு, அவற்றின் ஆகாரத்திற்காக இடத்துக்கிடம் சென்றார்கள். அதன்பிறகு ஒரே இடத்தில் நிலையாய்த் தங்கிப் பூமியைப் பண்படுத்திப் பயிரிட ஆரம்பித்தார்கள். பயிரிடுவதென்றால் இன்னதென்று உங்களுக்குத்தெரியுமா? பயிரிடுவதற்குச் செழிப்பான நிலம்வேண்டும். ஒரு நிலம் இவ்விதமான மண்ணை உடையது என்று நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

**விவசாயம்:**—சில இடங்களில் பூமி வளமுள்ளதாயிருக்கிறது. சில இடங்களில் வளமில்லாமல் இருக்கிறது. நன்



சீமையில் கோதுமை அறுவடை.



இதர தேசங்களில் கருப்பங்கொல்லை.

றாய் விளையும் பூமியை வளமுள்ளதென்கிறோம். விளையாத தை வளமில்லாதது என்கிறோம். பயிரிடுவதற்குத் தண்ணீர்

வேண்டும். ஆகையால் ஜல ஆதாரங்கள் அதியவசியமானவை. நிலத்திற்கு எரு வேண்டும். எரு இன்னதென்பதை நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். எருவில் அநேகவிதம் உண்டு. சில தழைகள் மிகவும் நல்ல எருவாகின்றன.

நிலத்தை உழவேண்டும். இவ்வேலைகளுக்குப் பயிரிடும் கருவிகள் மிகவும் உபயோகமானவை. உங்கள் வீட்டிற்கருகில் நிலம் உழுவதைக் கவனித்துப் பாருங்கள். விதையை எப்படி விதைக்கிறார்கள்? எல்லா இடங்களிலும் எல்லாத் தானியங்களும் விளையுமென்று எண்ணக்கூடாது.

**நெல்லை** உஷ்ணமான பிரதேசங்களில் நீர்வளமுள்ள இடத்திலே பயிரிடலாம். ஆகையால் நமது ராஜதானியில் அதிக மழையுள்ளதும், பாய்ச்சலுக்குத் தண்ணீர் சுலபமாய்க் கிடைக்கக்கூடியதுமான இடங்களில் **நெல்** பயிரிடப்படுகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களில் **கரும்புகூடப்** பயிராகிறது. நீங்கள் எப்போதாவது கரும்பைப் பார்த்திருக்கிறீர்களா? கருப்பஞ்சாற்றிலிருந்து வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியன செய்யப்படுகின்றன.

**கோதுமைகூட** முக்கியமான தானியமே. கோதுமை இவ்விதமான தானியமென்பதை ஆராய்ந்தறிக. அதை எல்லாவிடங்களிலும் பயிரிட முடியாது. அது குளிர்ச்சியான இடத்திலேயே பயிராகும். நமது ராஜதானியில் மேட்டுப் பிரதேசங்களில் அதைப் பயிரிடுகிறார்கள்.

**கம்பு, சோளம், கேழ்வரகு** இவை மிகவும் சிறு தானியங்கள். இவற்றிற்குப் புன்செய்த் தானியங்கள் என்று பெயர். அதிக மழைபெய்தால் இந்தப் பயிர்கள் அழிந்துபோகும் அதிக மழைபெய்யாத மேட்டுப்பிரதேசங்களில் இந்தத் தானியங்கள் பயிரிடப்பட்டு, அங்குள்ள ஜனங்களால் அதிக விசேஷமாய்ச் சாப்பிடப்பட்டு வருகின்றன.

மேலேசொன்ன தான்யங்களைத்தவிர, **எண்ணெய்வித்துக்களும்** பயிரிடப்படுகின்றன. இந்த வித்துக்களை ஆகாரமாய் உபயோகப்படுத்தப்படாமல், அவற்றினின்றும் எடுக்கப்பட்ட எண்ணெய் உபயோகிக்கப்படுகிறது. பிண்ணாக்கும் உபயோகமாகிறது. இவ்வித்துக்களில் **நிலக்கடலை**




தேயிலை.



மக்காச்சோளம்.



காப்பி.



சணற்பயிர்.

(மணிலாக்கோட்டை) மிகவும் முக்கியமானது. இது சம வெளிப்பிரதேசங்களில் புன்செய் நிலங்களில் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றது. எள்ளும், ஆமணக்கும் எண்ணெய் வித்

துக்களில் முக்கியமானவை. தேங்காய் எண்ணெய் தேங்காயி லிருந்து எடுக்கப்படுகிறது. தென்னைமரம் செழிப்புள்ள பிர தேசங்களில்மாத்திரம் பயிராகும். அதிக மழையுள்ள மேற் குக்கரைப் பிரதேசத்தில் இது விசேஷமாய் உண்டு. தவிர வும் இம்மரங்கள் ஆற்றுப்பாய்ச்சலுள்ள இடங்களிலும் ஆற் றங்கரைகளிலும் விசேஷமாய்ப் பயிராயிருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

பழங்கள் :—புளி, வாழை, மா, பலா, கிச்சிலி, எலுமிச் சம், அன்னாசம் முதலிய பழங்கள் அநேக இடங்களில் பயிராகின்றன. திராக்ஷை, அத்தி, ஆப்பல் பழங்கள் உன்னத பிரதேசங்களில்மட்டும் பயிராகின்றன.

நாம் உபயோகிப்பதில் பாக்கு ஒன்று. பாக்குமரம் அதிக உயரமாய் வளரும். அதன் பலனே பாக்கு. பலதேசங்களி லும் அது அநேகவிதமாக உபயோகப்படுகிறது.

புகையிலையும் இன்னொரு முக்கியமான பயிர். இது எப் படி உபயோகப்படுகிறது? இதற்குத் தண்ணீர் ஏராளமாய் வேண்டும். இது தோட்டங்களில் பயிராக்கப்படுகிறது. வெற்றிலையும் இப்படியே.

ஜனங்கள் தேயிலை, காப்பி முதலியவற்றின் கஷாயங்களைப் பானம் பண்ணுகிறார்கள். இவைகளும் பயிரிடப்படுகிறவை களே. இவைகள் பள்ளத்தாக்குகளில் பயிராகாமல் உயர மான மலைகளில் பயிராகின்றன. மலைகளில் உற்பத்தியாகின்ற வைகளில் சிங்கோனா ஒன்று. இம்மரத்தின் பட்டையிலிருந்து கோயினா மருந்தை எடுக்கிறார்கள். இந்த மருந்து ஜுவரத்தைத் தணிக்க உபயோகிக்கப்படுகிறது.

மிளகு, இஞ்சி, கடுகு, சீரகம், வெந்தியம், தனியா, மஞ் சள், லவங்கம், ஏலக்காய் முதலிய வாசனை திரவியங்களையும் நாம் உபயோகிக்கிறோம். இவைகள் அநேக இடங்களில் பயிராகின்றன. மிளகு, லவங்கம், ஏலக்காய் மலையாளத் திலும், திருவாங்கூரிலும் பயிராகின்றன.

## அப்பியாசம்.

## சென்னை ராஜ்ய பாகத்தில்

| முக்கியமான தானியங்கள். | அவை பயிராகும் ஜில்லாக்கள். |
|---|---|
| 1. நெல். (110 லக்ஷம் ஏகராக்கள்) | தஞ்சாவூர், கோதாவரி, கிருஷ்ணு, குண்டூர் ஜில்லாக்களின் டெல்டாக்களிலும், கஞ்சம், மலையாளம், தென் கன்னடம், செங்கல்பட்டு ஜில்லாக்களிலும், மதுரை பெரியாறு பிராஜெக்டிலும். |
| 2. சோளம். (52 லக்ஷம் ஏகராக்கள்) | கிருஷ்ணு, குண்டூர், நெல்லூர், தத்தமண்டல ஜில்லாக்கள், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை. |
| 3. கம்பு. (35 லக்ஷம் ஏகராக்கள்) | சேலம், திருச்சிராப்பள்ளி, ராமனுதபுரம், திருநெல்வேலி, குண்டூர், நெல்லூர், சித்தூர். |
| 4. கேழ்வரகு. (25 லக்ஷம் ஏகராக்கள்) | கஞ்சம், விசாகபட்டணம், சேலம், கோயம்புத்தூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு. |
| 5. நிலக்கடலை. (15 லக்ஷம் ஏகராக்கள்) | தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், அநந்தப்பூர், கர்நூல், கடப்பை, விசாகபட்டணம், கஞ்சம். |
| 6. பருத்தி (12 லக்ஷம் ஏகராக்கள்) | குண்டூர், கிருஷ்ணு, கோதாவரி ஜில்லாக்களிலுள்ள கரிசல் மண் நிலங்களிலும், தத்தமண்டல ஜில்லாக்களிலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ராமனுதபுரம். |

| | |
|---|---|
| 7 கரும்பு (2 லக்ஷம் ஏக்ராக்கள்) | பல்லாரி, விசாகபட்டணம், தென் ஆற்காடு, கோதாவரி, சித்தூர், கோயம்புத்தூர். |
| 8. அவுரி ($1\frac{3}{4}$ லக்ஷம் ஏக்ராக்கள்) | தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கடப்பை, கர்நூல், குண்டூர், விசாகபட்டணம். |

சென்னை ராஜதானியின் படத்தைவரைந்து, அதை ஜில்லாக்களாகப் பிரித்து, அந்த அந்த ஜில்லாக்களில் பயிராகும், தானியங்களை அந்த அந்த ஜில்லாக்களிலேயே எழுதவும். அவை அந்த ஜில்லாக்களில் பயிராவதற்கு என்ன சௌகரியங்கள் உள?

## காடுகள்.

மேலே சொன்னவை தவிர மனிதனுக்கு அநேக வஸ்துக்கள் தேவையுண்டு. அவைகளெல்லாம் காடுகளில் வேண்டிய அளவு கிடைக்கின்றன நீங்கள் எப்போதாவது காட்டைப் பார்த்திருக்கிறீர்களா? அது மரம் நிறைந்த இடம். நாம் காட்டை வளர்க்கவேண்டும். அது பலவிதங்களில் உபயோகப்படுகின்றது. ராஜாங்கத்தாரும் காடுகளை வளர்த்து வருகிறார்கள். காட்டிலாகா (Forest Department) என்று தனியாக ஓர் இலாகா ஏற்பட்டிருக்கிறது. காடுகள் உள்ள இடங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த ராஜதானியின் காடுகளில் பெரிய மரங்கள் இருக்கின்றன. மேற்குக் கிழக்குத்தொடர்ச்சி மலைகளிலுள்ள காடுகளில் கட்டிடத்திற்கு உபயோகமான தேக்கு, கருங்காலி, நூக்கமரம், செம்மரம் முதலிய மரங்கள் அகப்படுகின்றன. சாதாரணமாய் வேம்பு, மா, பலா முதலிய மரங்களும் கட்டிடவேலைக்கு உபயோகமானவை. சமுத்திரக்கரையில் தென்னை, பனை, சவுக்கு இவை நன்றாய்ப் பயிராகின்றன. மூங்கிலும் காடுகளிலேயே உண்டாகின்றது. மேற்குக்கரையில் உள்ள மூங்கில்கள் பெரியவை. கடுக்காய், தேன், பிசின், சாயவேர், மூலிகைகள் முதலியவைகளும் காட்டில் கிடைக்கின்றன.

காடுகள் விசேஷமாயுள்ள இடங்களில் மழை அதிகமாய்ப் பெய்கிறது. அதனால் ஆடுமாடுகள் மேய்வதற்கும் காடுகள் உபயோகமாகின்றன.

## ஆடுமாடுகள், க்ரூர ஜந்துக்கள்.

நமது தேசம் ஆடுமாடுகளுக்குப் பெயர்பெற்றது. நமது தேசத்தில் உள்ள ஆடுமாடுகள் ஒன்றிற்கொன்று உருவத்திலும் அளவிலும் வித்தியாசப்படுகின்றன. மாடுகளில் நெல்லூர் மாடுகள் மிகவும் உயர்ந்த ஜாதி ; இவைகள் பார்வைக்குப் பெரியவைகளாகவும் சிறிய கொம்புகளுள்ளனவாகவும் இருக்கின்றன. இந்த ஜாதிப் பசு அதிகப் பால் கொடுக்கும். புங்கனூர்ப் பசு என்று ஒரு ஜாதி உண்டு. அது உருவத்தில் சிறியதாகவும் அழகுள்ளதாகவும் இருக்கும். கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள காங்கயத்தில் ஒரு ஜாதி மாடு உண்டு. அந்த மாடுகள் பலமும் சுறுசுறுப்பும் உள்ளவை. அவை வேகமாய் ஓடும். அவற்றின் கொம்புகள் நீளமாயிருக்கும். நெல்லூர் மாடுகள் பாரமான சுமைகளை இழுக்கும். ஆனால் மெல்லத்தான் போகும்.

நமது ராஜதானியில் எருமைமாடுகளும் விசேஷமாக உண்டு. பல்லாரி, விசாகபட்டணம் இந்த ஜில்லாக்களில் உள்ள எருமைகள் அதிகப் பால் கொடுக்கும். பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகள் செய்துகொள்ளுகிறோம். எருமைப்பால் தேகத்துக்கு ஆரோக்கியமுள்ளதன்று.

நெல்லூர் ஜில்லாவில் 3 அடி உயரமுள்ள ஆடுகளும், கோயம்புத்தூர் ஜில்லாவில் மயிர் அடர்த்தியாயுள்ள குறும்பாடுகளும், மைசூர்ஜாதி ஆடுகளும் விசேஷமானவை. ஆனால் அவை நல்ல மயிர் கொடுப்பவையல்ல. மாமிசத்திற்கும் தோலுக்கும்மட்டுமே உபயோகப்படக் கூடியவை. ஆடுகள் வயல்களுக்கு எருவைக் கொடுக்கின்றன. ஆடுமாடுகளின் தோல், எலும்பு, கொம்பு முதலியவற்றை நாம் உபயோகப்படுத்துகிறோம்.

வண்டிகளை இழுப்பதற்கும், சவாரி செய்வதற்கும் நாம் குதிரைகளை விசேஷமாக உபயோகிக்கிறோம்.

மேலேசொன்ன மிருகங்களையன்றி யானை, பன்றி, புலி, சிறுத்தை, காடி, குள்ளநரி, மான், நாய் முதலிய மிருகங்களும் இங்கே வசிக்கின்றன. மைசூரிலும், திருவாங்கூரிலும்

அதற்கு அருகிலுள்ள நமது ராஜதானியின் ஜில்லாக்களிலும் யானைகள் மிகுதியாக உண்டு.

பலவிதமான பட்சி ஜாதிகளும் இந்தியாவில் உண்டு. கிளி, மயில், காக்கை, கருடன், பருந்து, குயில், ஆந்தை, புரு, காடை, கௌதாரி, மைனா, நாரை, கொக்கு, கோழி, வாத்து, மரங்கொத்தி, கழுகு, நீர்க்காக்கை முதலிய பட்சிகள் முக்கியமானவை.

நீங்கள் வெளியில் போகும்போது பார்க்கும் பட்சிகள், மிருகங்கள் முதலியவற்றைக் கவனித்து, அவைகளைப்பற்றிய விஷயங்களை உபாத்தியாயர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். எப்போதாவது சென்னபட்டணம்போக நேர்ந்தால், அங்குள்ள பீபில்ஸ்பார்க்கு (சிங்காரத்தோட்டம்), மியூஸியம் (விநோதக்காட்சிச் சாலை) முதலிய இடங்களுக்குப் போய் அங்குள்ள உயிருள்ளனவும் உயிரில்லாதவையுமான மிருகங்கள் பட்சிகள் முதலானவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மீன்:—நமது ராஜதானிக்கு அருகிலிருக்கும் சமுத்திரங்களில் அநேகவிதமான மச்சங்களைப் பிடித்துச் செம்படவர்கள் ஜீவனம் செய்கிறார்கள். மீன்களில் பலவிதம் உண்டு. நிறத்திலும், உருவத்திலும், அமைப்பிலும் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசப்படுகின்றது. நீங்கள் சென்னையில் சமுத்திரக்கரையில் இருக்கும் மீன்காட்சிச் சாலையைப் பார்க்கலாம். அங்குள்ள மச்சங்களின் நிறங்களும் அவைகளின் வடிவழகும் பரிமாணமும் பார்க்கப்பார்க்க வெகு ஆனந்தங் கொடுக்கும். மீன் இனத்தில் மிகப் பெரியது திமிங்கலம். அது சமுத்திரத்தில் நீர்மட்டத்திற்குமேல் படுத்திருக்கும் போது பார்த்தால், ஒரு பெரிய தீவைப்போல் அவ்வளவு பெரியதாய் இருக்கும். அது பெரிய கப்பல்களையும் கவிழ்த்து விடும். 37 வருஷங்களுக்குமுன் சென்னையில் சமுத்திரக் கரை ஓரத்தில் ஒரு திமிங்கலம் வந்தது. அதன் நீளம் ஏறக்குறைய 22 அடி இருந்தது. இறந்த மீன்களை உலர்த்தி எருவாகவும் உபயோகிக்கிறார்கள். எண்ணெயை இறக்கி மருந்தாகவும் உபயோகிப்பதுண்டு. அதனால் சவுக்காரக்கட்டியும் செய்யப்படுகின்றது.

**பாம்புகள்:**—இந்தியாவில் பாம்புகள் அதிகம். அவைகள் விஷமுள்ளவை. அவற்றில் பலவகையான ஜாதிகள் உள்ளன. சில பெரியவைகளாகவும், சில சிறியவைகளாகவும் இருக்கும்.

## உலோகங்கள்.

உலோகங்களாவன பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலியவை. அவற்றைப் பூமியினின்றும் வெட்டி எடுக்கிறார்கள் எடுத்தபிறகு அவற்றைத் தூளாக்கி அவற்றிலுள்ள மண், கல் முதலிய அசுத்தங்களை நீக்கி, உருக்கிச் சுத்தமாக்குகிறார்கள். நமது ராஜதானியில் கிழக்குத்தொடர்ச்சி மலையிலும் மேற்குத்தொடர்ச்சி மலையிலும் அநேகம் சுரங்கங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இதுவரையில் அவை விசேஷமாய்ப் பரிசோதிக்கப்படவில்லை. மைசூர் ராஜ்யத்திலுள்ள கோலார் என்னுமிடத்தில் தங்கம் வெட்டி எடுக்கப்படுகிறது. அனந்தபுரம் ஜில்லாவில் மூன்று தங்கச்சுரங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் இதுவரையில் பொன் கொஞ்சமாய்த்தான் கிடைத்திருக்கிறது. வயநாட்டிலும் பொற்சுரங்கம் உண்டு. ஆனால் பொன்னை எடுப்பதற்கு மிகவும் செலவாகிவிடுகிறபடியால் லாபம் கிடைக்கிறதில்லை. மலையிலிருந்து உற்பத்தியாகிவரும் ஆறுகளிலும் மணலோடு மணலாய்ப் பொன்மணிகள் அடித்துக்கொண்டு வருகின்றன. அவற்றை அரிப்புக்காரர் என்ற ஒரு ஜாதியார் எடுத்து ஜீவனம் செய்கிறார்கள்.

இரும்புச் சுரங்கங்களை அநேக வருஷகாலமாய் வெட்டி வேலைசெய்கிறார்கள். சேலம் ஜில்லாவில் மேலான இரும்பு அதிகமாய்க் கிடைக்கிறது. ஆனால் அதை உருக்கிச் சுத்தப்படுத்துவதற்குத் தேவையான நிலக்கரியாவது, கரியாவது, சுண்ணாம்புக்கல்லாவது அங்கில்லை.

மாங்கனீஸ் என்னும் உலோகம் விசாகபட்டணம் ஜில்லாவிலும், பல்லாரி ஜில்லாவிலுள்ள சாண்டூர் என்னும் சிறிய சுதேச ராஜ்யத்திலும், மைசூரிலும் கிடைக்கிறது. அதை வெட்டி எடுத்து இங்கிலாந்து முதலிய அயல்நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். வேறு எங்கும் அது விசேஷமாய் அகப்படுவதில்லை.

ஆபிரகம் (மைகா) என்னும் ஓர் உலோகம் உண்டு. அது பார்வைக்குக் கண்ணாடியைப்போல் இருக்கும். அதில் அநேகம் புள்ளிகள் உண்டு. அதைத் தகடுதகடாய்ப் பிரிக்கலாம். அது கண்ணாடியைப்போல் உடையாது. ஆனால் கண்ணாடி எந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுகிறதோ அவைகளுக்கெல்லாம் அது உபயோகப்படுகிறது. அது மருந்துக்கும் உபயோகமானது. ஆபிரகக் கனிகள் நெல்லூரில் விசேஷமாக உண்டு. சேலம் ஜில்லாவிலும் ஒரு கனி கண்டுபிடித்து வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்காலத்தில் நமது தேசம் வைரங்களுக்குப் பேர்போனது. அக்காலத்தில் பிரசித்தமாயிருந்த கோலகொண்டா ராஜ்யத்தில் அபரிமிதமான வைரக்கற்கள் அகப்பட்டுக்கொண்டிருந்தன. இப்போதும் கர்நூல் ஜில்லாவில் ஒரு சுரங்கம் இருக்கிறது. அதில் வைரக்கற்களை எடுத்து வேலைசெய்கிறார்கள்.

பென்சில்கள் (எழுதுகோல்கள்) செய்யும் ஈயம் கோதாவரி ஜில்லாவிலுள்ள பத்திராசலத்திலும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிங்கம்பட்டி ஜமீனிலும், திருவாங்கூரில் சில இடங்களிலும் கிடைக்கிறது.

கர்நூல், அனந்தபுரம் ஜில்லாக்களில் மாக்கல் கிடைக்கிறது. அதனால் சமையல் பாத்திரங்களும் விக்கிரகங்களும் செய்கிறார்கள்.

உப்பு:—சமுத்திரக்கரையோரங்களில் நிலங்களைப்போல் பாத்திகள் கட்டிச் சமுத்திர ஜலத்தை இறைத்து அவைகளில் பாயவிடுகிறார்கள். சூரியவெப்பத்தினால் தண்ணீர் ஆவியாகப் போக உப்பு அடியில் தங்கும். அதைச் சுத்தப்படுத்தி உபயோகிக்கிறார்கள். உப்பு எடுக்கும் சுதந்தரம் ராஜாங்கத்தாருக்கே உரியது. வேறு எவரும் எடுக்கக்கூடாது. பூமியில் உப்புக்கல்லுகள் இருக்கும். அவற்றை வெட்டி எடுத்துத் தூளாக்கித் தண்ணீரில் கரைத்து வடிக்கட்டி அதிலுள்ள அசுத்தத்தை நீக்குவார்கள். பிறகு அந்தத் தண்ணீரைக் காய்ச்சினால் தண்ணீர் ஆவியாகப்போக அடியில் உப்பானது தங்கும். இதுவே கல்லுப்பு. இது ஏழை ஜனங்களுக்கும், மிருகங்களுக்கும் உபயோகப்படுகிறது. பல்லாரி ஜில்லாவில் கல்லுப்புச் செய்கி

ருர்கள். கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் மண்ணிலிருந்து பொட்டிலுப்பு செய்யப்படுகிறது.

**கட்டிடக் கற்கள்:** — கட்டிடங்களுக்கு உபயோகப்படும் கருங்கல் முதலியவை மலைநாடுகளில் கிடைக்கின்றன. இவை பல நிறங்களாக அமைந்திருக்கின்றன. கடப்பைக்கல் என்கிற பலகை பலகையாயிருக்கும் கற்கள் தரையில் படுப்பதற்கும் வேறு பல வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றன. மேற்குக்கரையில் மலையாளத்திலும் முக்கியமாய்த் தென் கன்னடத்திலும் நேர்த்தியான ஓடுகள் முதலியவை செய்வதற்கேற்ற மண் கிடைக்கிறது.

## கைத்தொழில்கள்.

(i) அன்னபானுதிகளுக்குச் சம்மந்தமான கைத்தொழில்கள்:—நமக்குச் சாப்பிட ஆகாரமும் உடுக்க உடையும் இருக்க வீடும் அவசியமென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. மேலே சொன்ன ஒவ்வொன்றும் நாம் உபயோகிக்கக்கூடிய நிலையில் திடீரென்று அகப்படாது. உபயோகிக்குமுன் ஒவ்வொன்றையும் வேலைக்காரர்களால் அநேகவிதமாய் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதற்குத்தான் கைத்தொழில் என்று பெயர். நமது ராஜ்யத்தில் பயிரிடுதல் முக்கிய கைத்தொழில். நூற்றுக்கு ஏறக்குறைய எழுபதுபேர்கள் இத்தொழிலைச் செய்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு ஆடுமாடுகளைக் காப்பாற்றுதல் அவசியமானது. இந்தத் தொழிலால் அநேகர் ஜீவனம் செய்கிறார்கள். நெல் முதலிய தானியங்கள் அப்படியே ஆகாரத்துக்கு உபயோகப்படா. நெல்லைக் குத்தி அரிசியாக்கவேண்டும். இத்தொழிலினாலும் பலர் ஜீவிக்கிறார்கள். நெல்லைக்குத்துவதற்கு நீராவி யந்திரங்களும் இப்போது உபயோகிக்கப்படுகின்றன. குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி, தஞ்சாவூர் இந்த ஜில்லாக்களில் இம்மாதிரி யந்திரங்கள் அநேகம் இருக்கின்றன. நமது ராஜதானியில் நெல் குத்தும் யந்திரசாலைகள் 62-க்கு அதிக மிருக்கின்றன. கரும்பிலிருந்து வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவைகள் செய்கிறார்கள்; இதுவும் ஒரு முக்கியமான தொழில். வெல்லம் செய்வது சுலபமானதால் பல இடங்களில் செய்கி

றூர்கள் சர்க்கரை செய்வது கஷ்டம்; அது கஞ்சம் ஜில்லாவி லுள்ள ஆஸ்காவிலும், கோதாவரியில் உள்ள சாமல்கோட்டை யிலும், தென்னாற்காட்டில் உள்ள நெல்லிக்குப்பத்திலும், வேறு சில இடங்களிலுமே செய்யப்படுகிறது.

எள், ஆமணக்கு, நிலக்கடலை (மணிலாக்கோட்டை) தேங் காய் முதலியவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்களென்று முன்னமே சொன்னோம். இந்த எண்ணெய்களே நமது ராஜ்ய மெங்கும் உணவிற்கும், தேய்த்துக்கொள்வதற்கும், விளக்கெ ரிப்பதற்கும் உபயோகப்படுவதன்றி, வெளித்தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேற்குக்கரை நாடுகளில் தேங் காயெண்ணெய் விசேஷம். இந்த எண்ணெயே சவுக்காரம் ஸோப் செய்யவும் மெழுகுவர்த்தி செய்யவும் உபயோகப்படு கிறது. எண்ணெய் ஆட்டுகிறவர்களுக்கு நமது பிரதேசத்தில் வாணியர் என்று பெயர். செக்கிலிருந்து எண்ணெயை எடுப் பதன்றி யந்திரங்களாலும் எடுக்கிறார்கள்.

புகையிலையினால் சுருட்டுகள் செய்கிறார்கள். மதுரை ஜில்லாவிலுள்ள திண்டுக்கல்லிலும், திருச்சிராப்பள்ளியிலும் நேர்த்தியான சுருட்டுகள் கிடைக்கின்றன. கோதாவரி டெல் டாவிலுள்ள இலங்கைத் தீவுகளில் நேர்த்தியான புகையிலை விளைகிறது. ஆனால் அங்கே சுருட்டுச் செய்வதில்லை. புகை யிலை மூக்குப்பொடிக்கும், வெற்றிலைபாக்கோடு சேர்த்துப் போட்டுக்கொள்வதற்கும் உபயோகப்படுகிறது. இது இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

காப்பி:—இது முன்னே மிகவும் நன்றாய் விளைந்துகொண் டிருந்தது. இப்போது அவ்வளவு இல்லை. காப்பிச்செடியி லிருந்து பழங்களை உதிர்த்து மேல்தோலைப் போக்கி அவற்றை உலர்த்தி ஒட்டை உடைப்பார்கள். அதற்குள் காப்பிக்கொட் டை இருக்கும். காப்பிச்செடிகள் மேற்குத்தொடர்ச்சி மலை களில் சில பாகங்களிலும், நீலகிரி, குடகு, சேலம் இந்த ஜில் லாக்களிலும் விளைகின்றன. காப்பிக்கொட்டை எடுக்கும் தொ ழில் இவை விளையும் இடத்திற்கு அருகேயுள்ள கள்ளிக்கோட் டை, மங்களூர், தலைச்சேரி, கோயம்புத்தூர் முதலிய இடங் களில் நடக்கிறது.

**தேயிலை:**—தேயிலைச் செடிகள் நீலகிரியில் வளர்கின்றன. செடியிலிருந்து இலைகளைப் பறித்து அவற்றை அனலிலாவது வெயிலிலாவது பக்குவமாய் வாட்டி, துண்டு துண்டாகக் கத்தரித்துப் பொட்டளங்களாகக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். நீலகிரி ஜனங்களுக்கு இதுதான் தொழில்.

**கள், சாருயம் முதலியன:**—தென்னை, பனை, ஈஞ்சு முதலிய மரங்களிலிருந்து கள் இறக்குகிறார்கள். இத்தொழில் தேசமெங்கும் நடக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் பனை மரங்கள் ஏராளமாயிருப்பதால், அங்கு இத்தொழில் விசேஷமாய் நடக்கிறது. நீலகிரியில் பார்லி என்னும் தான்யத்தினால் யந்திரங்களைக்கொண்டு ஒருவகைச் சாருயம் காய்ச்சுகிறார்கள்.

(ii) உடுப்பு சம்மந்தமான கைத்தொழில்கள்: — **பருத்தி:** நாம் உடுக்கும் துணி பருத்திநூலிலிருந்து செய்யப்படுகிறது. பஞ்சைப் பருத்திச் செடியிலிருந்து சேகரித்து, கொட்டை, ஓடு இவற்றை எடுத்துவிட்டு, அதிலுள்ள அழுக்




பருத்திக் கொல்லை.

கை நீக்கிப் பிறகு நூலாக நூற்கிறார்கள். இந்த நூலினால் துணி நெய்யப்படுகிறது. இத்தொழிலாளிகளுக்குக் கைக்கோளர் என்றும் சேணியர் என்றும் பெயர். இத்தொழிலினால் அநேகர் ஜீவனம் செய்கிறார்கள். ஏறக்குறைய இரண்டு லட்சம் தறிகள் நமது ராஜதானியில் இருப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தறிகளில் சொற்பகாலத்தில் அதிகத் துணிகள் நெய்யும்படியான யந்திரங்கள் ராஜாங்கத்தாரின் உதவியினால் கண்டுபிடிக்கப்பட்டு, பல இடங்களிலும் பரவி வருகின்றன. பஞ்சைச் சுத்தி செய்வதற்கும், மூட்டைகள் கட்டி நெருக்குவதற்கும், நூல் நூற்பதற்கும், துணி நெய்வதற்கும் பல யந்திரசாலைகள் உண்டு. சென்னபட்டணத்திலும், பஞ்சு விளையும் ஜில்லாக்களிலும் இம்மாதிரி யந்திரசாலைகள் இருக்கின்றன. அநேக விடங்களில் சிறைச்சாலையிலிருக்கும் கைதிகளைக்கொண்டு நூலினால் ஜமக்காளம் நெய்கிறார்கள். அதோனி, சேலம், திருநெல்வேலி முதலிய இடங்களில் நெய்யும் ஜமக்காளங்கள் பிரசித்திபெற்றவை.

பட்டு:—பட்டுப்பூச்சிகள் பட்டுநூல் நூற்கின்றன. அப்பூச்சிகளுக்கு முசுக்கட்டைச் செடி ஆகாரம். கோயம்புத்



பட்டுப்பூச்சியும் முசுக்கட்டைச் செடியும்.

தூர் ஜில்லாவில் கொள்ளேகால் என்னுமிடத்திலும், மைசூரிலும் முசுக்கட்டைத் தோட்டங்களை வைத்துப் பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பட்டை உற்பத்திசெய்கிறார்கள். அப்பூச்சிகள் பட்டு நூலினால் கூடுகட்டும். அக்கூடுகளைக் கட்டி

முடித்து அவைகள் வெளியேபோக வழி உண்டாக்குமுன் கூடுகளை வெந்நீரில் போட்டால் பூச்சிகள் இறந்துவிடும். பிறகு யந்திரத்தின் சகாயத்தால் அக்கூடுகளை அறுமல் ஒரே நூலாக எடுப்பார்கள். பிறகு வேண்டிய சாயங்கள் போட்டு வஸ்திரங்கள் நெய்ய உபயோகிக்கிறார்கள். இத்தொழிலினால் அநேகர் ஜீவிக்கிறார்கள். பட்டுவஸ்திரங்கள் நெய்வதுதவிர நூலினால் நெய்யும் வஸ்திரங்களுக்கும் பட்டுக்கரைகள் கட்டுகிறார்கள். இம்மாதிரித் துணிகளைக் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் நெய்கிறார்கள். பட்டுவஸ்திரம் பருத்திவஸ்திரத்தைவிட அதிக விலையுள்ளது.

**கம்பளம்:**—ஆட்டு மயிரினால் கம்பளங்களை நெய்கிறார்கள். ஆனால் அவை நாணயமானவையல்ல. எல்லூரிலும், வேலூர், பங்களூர் முதலிய இடங்களிலுள்ள சிறைச்சாலைகளிலும் மேன்மையான ரத்ன கம்பளங்கள் நெய்யப்படுகின்றன.

(iii) **இதர கைத்தொழில்கள்:—சணல்:** நல்ல சணல் இங்கே விளைவதில்லை; ஆனால் வடசர்க்கார் நாட்டில் உள்ள செம்மண் பூமியில் சணல் விளைகிறது. அது அவ்வளவு நல்லதன்று. இந்தச் சணல்நாரினால் கோணி நெய்கிறார்கள். விசாகபட்டணம் ஜில்லாவில் பிமிலிபட்டணத்துக்கு அருகில் சிட்டி வலஸ என்னுமிடத்திலும் எல்லூரிலும் கோணிநெய்யும் யந்திரசாலைகள் இருக்கின்றன. இந்த யந்திரசாலைகளில் நெய்யும் கோணிகள் இங்கேயே செலவாகிவிடுகின்றன. இவைகள் போதாமலிருப்பதால் வெளியூர்களிலிருந்தும் வரவழைக்கப்படுகின்றன.

**தென்னை நார்:**—மேற்குக்கரை நாடுகளில் தென்னை விசேஷமாயிருப்பதால், அந்த இடத்திலுள்ள ஜனங்களில் சிலர் தென்னை நாரினால் கயிறு, பாய் முதலியவைகள் செய்து ஜீவிக்கிறார்கள்.

**தோல்:**—தோல் பதனிடுவதில் நமது ராஜ்யம் பேர்போனது. ஆடுமாடுகள் விசேஷமாயிருப்பதாலும், பதனிடுவதற்கு வேண்டிய ஆவாரம்பட்டை, கடுக்காய், சுண்ணாம்பு, நல்லெண்ணெய் முதலியவைகள் கிடைப்பதாலும் சொற்பச் செலவில் பதனிடுகிறார்கள். ராஜாங்கத்தார் இத்தோல்களை விட நல்ல தோல் உண்டாக்க க்ரோம் டானிங்கு என்ற

முறையை உண்டாக்கியிருக்கிறார்கள். இத்தோல் கபிலைக ளுக்கும், செருப்பு, ஜோடு முதலியவற்றிற்கும் மிகுதியாய் உபயோகிக்கப்படுகிறது. சிறுத்தைப்புலி, மான், முதலை, பாம்பு இவற்றின் தோல்களும் பதனிடப்பட்டுப் பலவாறு உபயோகிக்கப்படுகின்றன. இத்தோலினால் செருப்பு முத லியவை தைப்பதில் பல ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். இத் தொழிலாளிகளுக்கு. சக்கிலியர் என்று பெயர்.

அல்யூமினியம் :—சில வருஷங்களாக, சென்னையில் அல்யூ மினியம் என்னும் உலோகத்தினால் வீட்டிற்கு வேண்டிய பல பாத்திரங்கள் செய்யப்பட்டுவருகின்றன. இந்தப் பாத்திரங் கள் வெண்மையாயும் இலேசாயும் விலை நயமாயும் இருக் கின்றன இவை ஒவ்வொரு ஊரிலும் இப்போது பாவி விட்டன.

சென்னை ராஜதானி பாத்திரங்களுக்கும் நகைகளுக்கும் பேர்பெற்றது. தஞ்சாவூரில் வெள்ளிச் சாமான்களும், திருச் சிராப்பள்ளியில் தங்க நகைகளும், கும்பகோணத்தில் பித் தளைப் பாத்திரங்களும், ஈயப்பாத்திரங்களும், திண்டுக்கல்லி லும் பாலக்காட்டிலும் வெண்கலப் பாத்திரங்களும் சிறந் தவை.

## வர்த்தகம்.

விளைபொருள்களெல்லாம் ஒரேயிடத்தில் கிடைப்பதில்லை யென்பது தெரியுமே. அரிசி கிடைக்காத இடங்களுக்கு அரிசியும், துணி அகப்படாத இடங்களுக்குத் துணியும் கொண்டுபோகவேண்டும். ஒரு இடத்தில் அதிகமாய்க் கிடைக் கும் பொருள்களை அவை கிடைக்காத மற்றப் பிரதேசங்க ளுக்குக் கொண்டுபோகவேண்டும். இம்மாதிரி செய்வதைத் தான் வியாபாரம் என்று சொல்வார்கள். நமது ஊரிலிருந்து அயலூருக்குச் சாமான் அனுப்பினால் அதற்கு ஏற்றுமதி என்று பெயர். வெளியூர்களிலிருந்து நமது ஊருக்குச் சாமான் தருவித்தால் அதற்கு இறக்குமதி என்று பெயர்.

ஒரு ஜில்லாவிற்கும் மற்றொரு ஜில்லாவிற்கும் ஒரு தேசத் துக்கும் மற்றொரு தேசத்துக்கும் வியாபாரம் நடப்பதுண்டு. புகைவண்டிகளும், மரக்கலங்களும் வியாபாரத்துக்கு இன்றி யமையாதவை.

நீங்கள் கடைகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் துறைமுகங்களிலும் வண்டிப்பேட்டைகளிலும் விசாரித்துப் பார்த்தால் உங்கள் ஊரிலிருந்து வெளியிடங்களுக்கு இன்ன இன்ன சாமான்கள் போகின்றனவென்றும், வெளியூர்களிலிருந்து உங்களூருக்கு இன்ன இன்ன சாமான்கள் வருகின்றனவென்றும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

**ஏற்றுமதி:**—ஆடு மாடுகள் நமது தேசத்தில் அதிகமாயிருக்கின்றனவென்று முன்னமே சொன்னோம். ஆகையால் தோலும், பதனிட்டதோலும் முக்கியமான ஏற்றுமதிகள். பஞ்சு, எண்ணெய் வித்துக்கள், அரிசி, காப்பிக்கொட்டை, தேயிலை, தென்னைநார், அதனால் செய்த கயிறு முதலியவைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவைகள் நமது உபயோகத்துக்குமேல் அதிகமாயிருப்பதால் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. சோளம், கம்பு முதலிய தானியங்கள் நம்முடைய ஆகாரத்திற்கு வேண்டியிருப்பதால் அவை ஏற்றுமதியாவதில்லை. இவ்வஸ்துக்கள் எல்லாம் ஓரேயிடத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எந்த வஸ்துக்கள் எங்கே கிடைப்பதில்லையோ, அந்த இடங்களில் விற்றால் அதிக லாபம் கிடைப்பதால் அங்கேதான் அவைகளை அனுப்புகிறார்கள்.

**இறக்குமதி:**—நமது ராஜதானிக்கு இதர தேசங்களிலிருந்து வரும் சரக்குகளில் முக்கியமானது நூல்துணி. இங்குவரும் இறக்குமதிச் சாமான்களின் கிரயம் 100 ரூபாயானால் நூல்துணிமட்டும் 25½ ரூபாய் விலையுள்ளது. துணிகள் எல்லாம் அநேகமாய் இங்கிலாந்திலிருந்துதான் வருகின்றன. நமதுதேசத்தில் உலோகங்கள் அதிகமாய்க் கிடைக்காததால் இவைகளும் வெளியிடங்களிலிருந்து வருகின்றன.

காஞ்சீபுரம், சேலம், பந்தர், திண்டுக்கல் முதலிய இடங்களில் நாணயமான துணிகள் நெய்யப்படுகின்றனவென்று சொன்னோமல்லவா? அவ்விதமான துணிகள் நெய்வதற்கு ஏற்ற உயர்ந்த நூலும் மேற்சொன்ன இடத்திலிருந்துதான் வருகிறது.

இவைகளன்றி, பிஸ்கோத், பெப்பர்மெட் முதலியவைகளும், சாராயம், புட்டிப்பால், கண்ணாடி முதலியனவும், கண்ணாடிச் சாமான்களும், பீங்கான்களும், காகிதங்களும், ஆயுதங்

கள், தண்டவாளங்கள், இரும்புச் சக்கரங்கள் முதலியனவும், பலவித மருந்துகளும், தீப்பெட்டிகளும், மெழுகுவர்த்தியும், மரச்சாமான்களும், கம்பளிநூல் வஸ்திரங்களும், பொன் வெள்ளிச்சரிகைகளும், விளையாட்டுக் கருவிகள் முதலிய பல வஸ்துக்களும் பல தேசங்களிலிருந்தும் நமது நாட்டுக்கு வருகின்றன.

நாம் அவற்றைத் தினந்தோறும் உபயோகிக்கிறோம். அப்படியிருந்தும் இன்னின்ன தேசங்களிலிருந்து இன்னின்னவை வருகின்றனவென்று நமக்குத் தெரியாது.

மண்ணெண்ணெயும், மோடார் வண்டிகளுக்கு வேண்டிய பெட்ரோலியம் முதலிய எண்ணெய்களும் பர்மாவிலிருந்தும் ரஷியாவிலிருந்தும் கிடைக்கின்றன.


## போக்குவரவுக்குரிய சாதனங்கள்.

(1) **சாலைகள்** :—போக்குவரவுக்காக நமது ராஜதானியில் இப்போது போடப்பட்டிருக்கும் சாலைகளையன்றி, ராஜாங்கத்தார் இன்னும் பல சாலைகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமது ராஜ்யத்திலிருக்கும் சாலைகளில் முக்கியமானவை சென்னபட்டணத்திலிருந்து (1) கல்கத்தாவுக்கும், (2) தெற்கே திருவனந்தபுரத்திற்கும், (3) மேற்கே கள்ளிக்கோட்டைக்கும் போகின்ற பாதைகள். இவைகளில் இரட்டைமாட்டு வண்டிகள் விசேஷமாய்ப் போகும். நாகரிகம் அதிகமாயுள்ள தேசங்களில் பணக்காரர்கள் மோடார் வண்டிகளில் சாமான்கள் கொண்டுபோகிறார்கள்.

சாலைகள் இல்லாத இடங்களிலும் மலைநாடுகளிலும், சாமான்களை மனிதர்களே சுமந்து போவதன்றி, பொதிமாடு, குதிரை, கழுதை முதலிய ஜந்துக்கள்மேலும் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.

(2) **கால்வாய்கள்** :—கால்வாய்களின் மூலமாயும் சில இடங்களில் சாமான்களைக் கொண்டுபோகிறார்கள். இக்கால்வாய்கள் மிகவும் ஆழமாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவைகளில் படகுகள் போகமாட்டா.

**பக்கிங்ஹாம் கால்வாய்:**—மேற்சொன்ன கால்வாய்களில் முக்கியமானது பக்கிங்ஹாம் கால்வாய். ஏறக்குறைய 35 வருஷங்களுக்குமுன் சென்னை ராஜதானிக்கு பக்கிங்ஹாம் என்னும் ஒரு ஸ்ரீமான் கவர்னராக வந்தார். அவர்காலத்தில் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கு, தாதுவருஷத்துப் பஞ்சம் என்று பெயர். ஏழை ஜனங்கள் ஆகாரத்திற்காகப் படும் கஷ்டத்தை அவர் பார்த்து ராஜாங்கத்திலிருந்து பணத்தைச் செலவிட்டு அவர்களுக்காக இக்கால்வாயை வெட்டுவித்தார். ஆகையினாலேதான் இக்கால்வாய்க்கு அந்தத் தர்மதுரையின் பெயர் கொடுக்கப்பட்டது. இந்தக் கால்வாய் சென்னபட்டணத்திலிருந்து வடக்கே 200 மைல் தூரம் குண்டூர் ஜில்லாவுக்கும், தெற்கே 66 மைல் தூரம் தென்ஆற்காடு ஜில்லா



பெஜவாடா கால்வாய்கள்.

விற்கும் கடற்கரையோரமாய்ச் செல்லுகிறது. இதன் வழியே தேங்காய், சுண்ணாம்புக் கிளிஞ்சல், அரிசி, சவுக்குக்கட்டை முதலிய சாமான்கள் சென்னபட்டணத்திற்குக் கொண்டுவரப் படுகின்றன. இக்கால்வாய் சென்னைக்கு வடக்கே 37 மைல் தூரத்திலுள்ள பழவேற்காடு ஏரியின் வழியாகப் போகிறது. குண்டூர் ஜில்லாவில் இது கிருஷ்ணா கால்வாயோடு சேருகி

றது. பிறகு எல்லூர்வரையில் போய் அங்கு கோதாவரிக் கால்வாயோடு கலக்கிறது. ஆகையால் இக் கால்வாய் சென்ன பட்டணத்திலிருந்து வடக்கே கோதாவரிக்கால்வாய் போகும் வரையில் ஒரே தொடர்ச்சியானதென்று சொல்லலாம். இக் கால்வாய்கள் கடற்கரை வழியாகப் போவதுதவிர உள்நாடுகளிலும் அநேகம் கிளைகளாய்ப் பிரிந்து வியாபாரத்திற்கு அனுகூலமாக இருக்கின்றன.


**கடப்பை கர்நூல் கால்வாய்:**—இந்தக் கால்வாயானது துங்கபத்திரா என்று சொல்லப்படும் நதியில் கர்நூலுக்கு வடமேற்கே 17 மைல் தூரத்தில் ஆரம்பித்து அப்பட்டணத்தின் வழியாய் போய் அப்பால் தென்கிழக்காய்த் திரும்பிக் கர்நூல் கடப்பை ஜில்லாக்களில் ஓடி, பினுகினி என்னும் நதியில் சேருகிறது. இதில் தண்ணீர் அதிகமாயில்லாமையால் படகுகள் போக்கு வரவு விசேஷமாயில்லே.

**மேற்குக்கரைக் கழிகள்:**—மலேயாளம் ஜில்லா வடகோடி முதல் இந்தியாவின் தென்கோடிவரையில் கடற்கரையோரமாய் இக்கழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்குக்கரையில் சில இடங்களில் சமுத்திர நீர் நிலத்தில் உள்ளிட்டும் வேறு சில இடங்களில் நிலம் (மலேகள்) கடலுக்குள் பிரவேசித்துமிருப்பதால் இக்கழிகள் சுலபமாய் ஏற்பட்டிருக்கின்றன. நிலங்கள் கடலில் பிரவேசித்துள்ள இடங்களில் ராஜாங்கத்தார் அவற்றினுள்ளே குடைந்து இக்கழிகளை ஒன்றாய்க் கலக்கச்செய்து போக்குவரவுக்கு அனுகூலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக்கழிக்காகத் திருவாங்கூர் ராஜ்யத்தில் ஓர் இடத்தில் 2,500 அடி வரையில் மலேயைத் துளைத்திருக்கிறார்கள். இக் கழிகள் அநேக இடங்களில் சமுத்திரத்தோடு கலந்திருக்கின்றன. அங்கு இவைகள் சமுத்திரம்போலவே காணப்படும். இக்கழிகளுக்கும் சமுத்திரத்திற்கும் இடையிலுள்ள நிலங்களில் தென்னைமரங்கள் அபாரமாயிருக்கின்றன. இக்கழிகள் மூலமாய் மேற்குக்கரையில் கிடைக்கும் தேங்காய், கயிறு, மிளகு, காப்பிக்கொட்டை, ஏலக்காய் முதலியவைகள் இதர இடங்களுக்கு கொண்டுவரப்படுகின்றன.

**துறைமுக பட்டணங்கள்:**—கிழக்குக்கரையிலும் மேற்குக் கரையிலும் பல துறைமுக நகரங்களிருக்கின்றன. ஆனல்

அவைகளில் ஒன்றாவது துறைமுகமாயிருப்பதற்கு ஏற்ற தன்று. கிழக்குக்கரையிலுள்ள துறைமுக நகரங்களுக்கு அருகில் கடல் ஆழமாயிராமையால் கப்பல்கள் பட்டணங்களுக்கு நாலைந்து மைல் தூரத்திலேயே தங்கவேண்டியிருக்கிறது.

சென்னபட்டணத்தில்மாத்திரம் அநேக லட்சம் ரூபாய்கள் செலவிட்டு, துறைமுகம் ஒன்று ஏற்படுத்தி வியாபாரத்திற்கு



வியாபாரக் கப்பல்.

வேண்டிய அனுகூலங்கள் யாவும் செய்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் இது மிகவும் சிரேஷ்டமான துறைமுகமாயில்லை. கிழக்குக்கரையிலும் மற்ற இடங்களில் இருப்பதுபோல் அலைகளடிப்பதால் கரையோரம் தூர்ந்துபோய் மேடாகி விடுகிறது

வடக்கே விசாகபட்டணத்தில் கிழக்குத்தொடர்ச்சி மலையானது சமுத்திரத்தில் பிரவேசித்திருக்கிறது. இதனால் இங்கே இயற்கையான துறைமுகம் ஏற்பட சௌகரியம் உண்டு.

துறைமுக நகரங்கள் வசதியானவை அல்லது வசதியற்றவை யென்று தெரிந்துகொள்ள அடியிற்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

1. கப்பல்கள் நிலத்திற்கு அருகில் தங்கும்வண்ணம் கடலோரம் ஆழமாய் இருக்கவேண்டும்.

2. துறைமுக நகரத்திலிருந்து ஏற்றுமதி செய்ய அப்பட்டணத்திற்கு அருகே தானியங்கள் உற்பத்தியாகவேண்டும், அல்லது உலோகங்கள் கிடைக்கவேண்டும், அல்லது கைத்தொழில்கள் இருக்கவேண்டும்.

3. துறைமுக நகரம் கப்பலிலிருந்து இறங்கும் சரக்குகளை உள்நாடுகளுக்கு அனுப்ப அநேகம் சாலைகளாலும், இருப்புப்பாதைகளாலும், கால்வாய்களாலும் மற்றப் பட்டணங்களோடு சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.


(3) **இருப்புப்பாதைகள்:**—நீங்கள் எப்போதாவது இருப்புப் பாதையைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் போய்ப் பாருங்கள். வழியை ஒழுங்குபடுத்தி இரண்டு தண்டவாளக் கம்பிகளை ஒன்றன் பக்கத்தில் மற்றொன்றாய் நீளமாகப் போட்டிருப்பார்கள். இவற்றின் மேல்தான் புகைவண்டிகள் சுலபமாய் ஓடுகின்றன. இவ்விதமான தண்டவாளங்கள் போடப்பட்டிராவிட்டால் வண்டிகள் ஓர் அடிகூட நகரமாட்டா. நமது ராஜதானியில் போடப்பட்டிருக்கும் இருப்புப்பாதைகளில் இரண்டுவிதம் உண்டு. ஒன்றில் தண்டவாளங்களின் குறுக்களவு $3\frac{1}{2}$ அடி இருக்கும். இவைகளின்மேல் ஓடும் வண்டி சிறியது. மற்றொன்று $5\frac{1}{2}$ அடி குறுக்களவுள்ளது. இவைகளின்மேல் ஓடும் வண்டி பெரியது. சென்னை ராஜதானியில் கிட்டத்தட்ட 4,000 மைல் தூரம் இருப்புப்பாதை இருக்கிறது.

சென்னை ராஜதானியில் உள்ள இருப்புப்பாதைகளின் விவரம்:—

1. சென்னபட்டணத்திலிருந்து கல்கத்தாவுக்குப் போக நமது ராஜதானியின் வடகிழக்குக் கோடியிலுள்ள கஞ்சம் ஜில்லா வடகோடிவரையில் ஒன்று போகிறது.

2. மற்றொன்று தெற்கே இராமேசுவரம்வரையில் போய் லங்கைத்தீவிலுள்ள கொழும்புக்குப் போகும் பாதையில் கலக்கிறது.

3. இன்னுமொன்று மேற்கு முகமாய் மேற்குச் சமுத்திரக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டைக்குப் போய் அங்கிருந்து மங்களூர்வரையில் செல்லுகிறது.



இருப்புப்பாதை.

4. வேறொன்று பீடபூமியின் (கடப்பை கர்நூல்) வழியாய் வடமேற்கிலுள்ள பம்பாய்க்குப்போகும் இருப்புப்பாதையை ரெய்ச்சூரில் சந்திக்கிறது.

5. பின்னும் ஒன்று மைசூர் ராஜ்யத்திலுள்ள பங்களூருக்குப் போகிறது.

இவையல்லாமல் அங்கங்கே அநேகம் கிளைப்பாதைகள் போடப்பட்டு ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த ராஜதானியிலுள்ள இருப்புப்பாதைகள் தென் இந்தியா இருப்புப்பாதை கம்பெனி (S. I. R.) மதராஸ் தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதை கம்பெனி (M & S. M. R.) என்ற இரண்டு கூட்டத்தாரால் நடத்தப்பெற்று வருகின்றன.

**இருப்புப்பாதைகளின் உபயோகங்கள்:**—இருப்புப்பாதைகளினால் நாம் அடையும் நன்மைகளில் சிலவற்றைச் சொல்வோம்:—

1. நாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சொற்பச் செலவில், அதிசீக்கிரத்தில், திருட்டுப்பயம் இல்லாமல் போகிறோம்.

2 சரக்குகள் சுலபமாய் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றன.

3. க்ஷாமகாலங்களில் இவற்றின் உபயோகம் சொல்லி முடியாது. விளைவுள்ள இடங்களிலிருந்து விளைவில்லாத இடங்களுக்கும் பண்டங்களைக் கொண்டுபோய் ஜனங்களைக் காப்பாற்ற இவை உதவுகின்றன.

4. கடிதப் போக்குவரவுக்கு அனுகூலமாயுள்ளன.

5. கப்பலிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளை உள்நாட்டிற்கும் உள்நாட்டில் கிடைக்கும் பொருள்களைத் துறைமுகத்திற்கும் கொண்டுபோக மிக்க உதவியாயிருக்கின்றன

6. சண்டைக் காலங்களில் சைனியங்களை சண்டை நடக்கும் இடங்களுக்கு சீக்கிரத்தில் அனுப்பலாம்.

### அப்பியாசம்.

நமது ராஜதானியின் படத்தை எழுதி, முக்கிய சாலைகளையும், இருப்புப்பாதைகளையும், இருப்புப்பாதை சந்திகளையும், கால்வாய்களையும் காண்பிக்கவும்.

## ஜனசங்கியை, மதம், பாஷை.

ஜனங்கள் எல்லா இடங்களிலும் விசேஷமாய் இருக்க முடியுமா? முடியாது. மலைப்பிரதேசங்களிலும், செழிப்பில்லாத இடங்களிலும், காட்டுப் பிரதேசங்களிலும். மழையில்லாத இடங்களிலும் ஜனங்கள் மிகவும் குறைவாயிருப்பார்கள்.

நிலவளமும் நீர்வளமுமுள்ள பிரதேசங்களிலும், வியாபாரம் மிகுதியாய் நடக்கும் இடங்களிலும், உலோகங்கள் கிடைக்கும் சுரங்கங்கள் உள்ள இடங்களிலும், கைத்தொழிற்சாலைகளுள்ள இடங்களிலும் ஜனங்கள் மிகுதியாய் வசிப்பார்கள்.

நமது ராஜதானியில் வடசர்க்கார் நாட்டில் மலைப்பிரதேசத்தில் சதுரமைலுக்கு 80 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்

கள். கிழக்குக்கரையின் தென்பாகம் செழிப்புள்ளதாகையால் அங்கே சதுரமைலுக்கு 429 ஜனங்கள் வீதமும் மேற்குக்கரை நாடுகளில் 400 ஜனங்கள் வீதமும் வசிக்கிறார்கள். தக்ஷிண பீடபூமியில் மழையில்லாததால் சதுரமைலுக்கு 145 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்கள். ஜில்லாக்கள் முறையாக ஜனசங்கியையைக் கணக்கிட்டால் தஞ்சாவூர் ஜில்லாவில் சதுரமைலுக்கு 634 பேரும், கோதாவரியில் 568 பேரும் வசிப்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன? நமது ராஜ்யத்தில் வசிக்கும் ஜனங்களின் மொத்தத்தொகை 4,20,00,000 இதில் ஆண்பிள்ளைகள் இத்தனைபேரென்றும் பெண்பிள்ளைகள் இத்தனைபேரென்றும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? ஆயிரம் ஆண்பிள்ளைகளுக்கு 1,832 பெண்பிள்ளைகள் வீதம் வசிக்கிறார்கள்.

இந்த ஜனங்களில் பலவகையான ஜாதியார்கள் இருக்கிறார்கள். ஒரு ஜாதியாரைப்போல் மற்றொரு ஜாதியார் இருக்கமாட்டார்கள். நீங்களே பார்த்து வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளலாம். இதில் சிலர் காட்டில் வசிக்கும் நாகரிகமில்லாத ஜனங்கள். இவர்களுள் ஜாதிபேதம் இருப்பதுபோல் மதபேதமும் உண்டு. இம்மதங்களில் இந்துமதம், பௌத்தமதம், ஜைனமதம், மகம்மதியமதம், கிறிஸ்தவமதம் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. பதினாயிரம் ஜனங்களுக்கு

| | | |
|---|---|---|
| இந்துக்கள் | 8,892 | பேரும் |
| மகம்மதியர் | 660 | பேரும் |
| கிறிஸ்தவர் | 289 | பேரும் |
| மற்றவர்கள் | 159 | பேரும் இருப்பார்கள். |

பாஷைகளிலும் வித்தியாசம் உண்டு. நாம் பேசுவது தமிழ்ப்பாஷை. இதுபோலவே நமது ராஜதானியில் தெலுங்கு, மலையாளம், உரியா, கன்னடம், இந்துஸ்தானி முதலிய பல பாஷைகள் வழங்கிவருகின்றன.

• தமிழ்ப்பாஷை சென்னபட்டணத்திற்குச் சில மைல் வடக்கிலிருந்து மேற்கே நீலகிரிவரையிலும், மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் தெற்கே கன்னியாகுமரி முனைக்கும் இடையி

14945

ள்ள பிரதேசத்திலும் பேசப்படுகிறது. தெலுங்குபாஷை சென்னபட்டணத்திற்கு வடக்கேயுள்ள சில பிரதேசங்களில் பேசப்படுகிறது.

கன்னடபாஷை தென் கன்னடத்திலும், பல்லாரி அநந்த புரம் இவற்றிற்கு மேற்கிலும், மைசூர் ராஜ்யத்திலும் பேசப் படுகிறது.

மலையாளபாஷையானது திருவாங்கூர், கொச்சி, மலையா ளம் முதலிய ஜில்லாக்களில் வழங்கப்படுகிறது

மகம்மதியர்கள் பேசும் பாஷை இந்துஸ்தானி (உருடு.)

## அப்பியாசம்.

1. நமது ராஜதானியில் சதுரமைல் ஒன்றுக்கு

| | | | |
|---|---|---|---|
| 1871 ஆம் வருஷத்தில் | | 220 | |
| 1881 ,, | ,, | 217 | |
| 1891 ,, | ,, | 251 | |
| 1901 ,, | ,, | 261 | |
| 1911 ,, | ,, | 291 | வீதம் |

ஜனங்கள் வசித்திருக்கிறார்கள். இதனால் நமது தேசத்து ஜனவிருத்தியைப்பற்றி உங்களுக்கு என்ன தெரிகிறது?

2. நமது ராஜதானியிலுள்ள அந்த அந்த ஜில்லாக்களின் விஸ்தீரணமும், ஜனசங்கியையும், இரண்டாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. நமது ராஜதானியின் படத்தை எழுதி அதில் சதுரமைல் ஒன்றுக்கு ஜனசங்கியை 500 க்கு அதிகப்பட்ட இடங்களை ஒரு மாதிரியாகவும், 400 உள்ள இடங்களை இன்னொரு மாதிரியாகவும், 300 உள்ள இடங்களை பின்னும் ஒரு மாதிரியாகவும், 200 உள்ள இடங்களை மற் றொரு மாதிரியாகவும், 200 க்குக் கீழே உள்ள இடங்களை வேறொரு மாதிரியாகவும் கோடுகள் போட்டுக் காட்டவும்.

# இரண்டாம் பாகம்.

## ஜில்லாக்கள்.

### 1. கஞ்சம். 2. விசாகபட்டணம். 3. கோதாவரி.

சென்னை ராஜதானியின் வடபாகத்தில் கிழக்குக் கடற் கரையோரமாகவுள்ள **ஜில்லாக்கள்:**—இந்த ராஜதானியின் வடகோடியில் கடற்கரையோரமாய் இருப்பது கஞ்சம் ஜில்லா. இதன் வடக்கிலும் வடபேற்கிலும் பீசார், ஓரிஸ்ஸா ராஜ்யங்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாவுக்குத் தெற்கே விசாகபட்டணம் ஜில்லாவும் அதன் தெற்கே கோதாவரி ஜில்லாவும் அதன் தெற்கே கிருஷ்ணா ஜில்லாவும் உள்ளன. படத்தைப் பார்த்து இந்த ஜில்லாக்களுக்குக் கிழக்கிலும் பேற்கிலும் உள்ள எல்லைகளைத் தெரிந்துகொள்க.

#### i. ஏஜென்ஸி டிராக்ட்ஸ்.

**இயற்கையமைப்பு:**—கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி இந்த ஜில்லாக்களின் இயற்கையமைப்பைப் படத்தில் நன்றாய்க் கவனியுங்கள். இந்த ஜில்லாக்களில் கிழக்குத் தொடர்ச்சி மலை வடக்கிலிருந்து தெற்குமுகமாய் வியாபித்திருக்கின்றது. இத்தொடருக்குக் கிழக்கிலும் பேற்கிலும் மலையின்மேலும் இருக்கும் மேட்டுப்பிரதேசங்களுக்கு மலை நாடென்றும், இதற்கும் சமுத்திரத்திற்கும் இடையிலிருப்பதற்குச் சமவெளிப் பிரதேசமென்றும் பெயர். இந்த மலைநாட்டிற்கு ஏஜென்ஸி டிராக்ட்ஸ் என்றும் பெயர் உண்டு. கஞ்சம் ஜில்லாவில் இப்மலைநாட்டிற்கு மலையமலை என்று பெயர். இம் மலைநாடானது ஒன்றன்பக்கத்தில் ஒன்றாய் உயரமான மலைகளும் அதன் பக்கத்தில் பள்ளத்தாக்குகளும் அமைந்த பீடபூமி. இது பார்வைக்கு வெகு அழகாயிருக்கும். இம்மலைநாடுகள் பெரும்பாலும் பயங்கரமான காட்டுப்பிரதேசங்கள். இங்கு வசிக்கும் ஜனங்கள் இம்மலைச் சரிவுகளிலுள்ள மரஞ்செடிகளை



சென்னை
இராசதானி
1 அங்குலம்=72 மைல்
குறிப்பு
இருப்பு பாதை
பாதை
நதி
சென்னபட்டணம்
நிஜாம் ராஜ்யம்
இலங்கை
தீவு
கோதாவரி

வெட்டி அவற்றைக் கொளுத்தி அந்த இடங்களிலேதான் பயிரிடவேண்டும். அங்கே புலி, காடி, காட்டெருமை முதலிய பயங்கரமான மிருகங்கள் உண்டு. இக்காட்டெருமைகள் (பைஸன்) நமது ராஜதானியில் இம்மலை நாடுகளைத்தவிர வேறு எங்கும் இல்லை. இங்குள்ள காடுகளில் வேங்கை கருங்காலி முதலிய விலையுயர்ந்த பெரிய மரங்களும், மூங்கிலும உண்டாகின்றன. தேக்குமட்டும் விசேஷமாய்ப் பயிராவதில்லை. விசாகபட்டணத்திலுள்ள ஜயபுரத்தில் மாத்திரம்தான் கொஞ்சம் பயிராகிறது. சில விடங்களில் சவுக்குமரங்கள் வைத்துப் பயிராக்குகிறார்கள். இவை இங்கு வெகு சீக்கிரத்தில் பயிராகின்றன. இக்காடுகளில் தோல் பதனிடுவதற்கு வேண்டிய கடுக்காய் முதலிய வஸ்துக்களும் தேன், மெழுகு, அரக்கு முதலியவைகளும் அகப்படுகின்றன. இவைகளல்லாமல் புளியும் மஞ்சளும் கிடைக்கும்.

**சீதோஷ்ணஸ்திதி, மழை:**—இம்மலைநாடுகள் வசிக்க ஏற்றவையல்ல; ஜ்வரம் வரக்கூடிய பூமி; குளிர்காலத்தில் குளிர் அதிகமாயிருக்கும். மழை விசேஷமாய்க் கோடைக்காலத்திலேதான் பெய்யும். சில இடங்களில் 75 அங்குலமும் வேறு சில இடங்களில் 55 அங்குலமும் பெய்கிறது. இம்மலைகளில் பெய்யும் மழை அநேகம் சிற்றாறுகளாகி, கிழக்கு முகமாயும் தென்கிழக்கு முகமாயும் ஓடி வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றது. இநநதிகளில் முக்கியமானவை ருஷிகுல்யா, வம்சதாரை, லங்கூல்யா. ருஷிகுல்யா கஞ்சம் ஜில்லாவின் வட பாகத்தில் ஓடுகின்றது. இக்காட்டாறுகளின் ஜலத்தை அணைகட்டித் திருப்பி வயல்களுக்குக் கொண்டுபோகிறார்கள் இவ்வயல்களை மிகவும் கஷ்டப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகச் சமமாக்கி யிருக்கிறார்கள். இங்கே ஏரிகளும் உண்டு. இவற்றிலிருந்தும் வயல்களுக்கு ஜலம் பாய்ச்சுகிறார்கள். இப்பள்ளத்தாக்குகளில் நெல், கேழ்வரகு, பயறு, மஞ்சள் முதலியவை உற்பத்தியாகின்றன. இவைகளையும் காட்டில் கிடைக்கும் பொருள்களையும் சரியான சாலைகளில்லாமையால் மாடுகள்மீது ஏற்றியும் மனிதர்கள் சுமந்தும் கடற்கரைப் பிரதேசங்களுக்குக் கொண்டுபோய் விற்றுத் தங்களுக்கு வேண்டிய உப்பு, துணி முதலியவைகளை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இப்பிரதேசங்களில் பிரயாணம்செய்வது மிக

வும் கஷ்டம். மத்திய மாகாணத்திலிருந்து இந்நாட்டின் மூலமாய் விசாகபட்டணத்திற்கு இருப்புப்பாதை போட முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

இங்கு ஜனத்தொகை குறைவென்று முன்னமே சொன்னோம். இதன் விஸ்தீரணம் ஏறக்குறைய 20,000 சதுரமைல் இருக்கும்.

| ஏஜென்ஸி டிராக்ட்ஸ். | விஸ்தீரணம், சதுரமைல். | ஜனத்தொகை. |
|---|---|---|
| கஞ்சம் | 3,484 | 3,50,466 |
| விசாகபட்டணம் | 12,621 | 10,20,151 |
| கோதாவரி | 3,675 | 2,06,902 |

கோதாவரி ஏஜென்ஸியில்தான் ஜனத்தொகை மிகவும் குறைவு. ஒரு சதுரமைலுக்கு 56 பேர் வீதம் வசிக்கிறார்கள். இங்கு வசிக்கும் ஜனங்கள் விசேஷயாய்க் காட்டு மனிதர்கள். இவர்களில் சிலருக்கு காண்டர் என்றும், வேறு சிலருக்கு சவரர் என்றும் பெயர். இவர்கள் தேகதிடம் உடையவர்கள். பல ஓட்டிரர்களும் இங்கே இருக்கிறார்கள். இவர்களுக்கு அதிக நாகரிகம் இல்லை. ஆனால் இவர்களிடத்தில் பல நல்ல குணங்களைக் காணலாம். வில், வாள், தங்கி என்னும் கைக்கோடாலி முதலியவைகள் இவர்களுடைய முக்கியமான ஆயுதங்கள்.

இப்பிரதேசங்களில் அநேக ஜமீன்கள் உண்டு. இவைகளுள் விசாகபட்டணம் ஜில்லாவிலுள்ள ஜயபுரம் அதிக முக்கியமானது. இதனுடைய விஸ்தீரணம் 9,400 சதுரமைல். இங்கு விளைவு அதிகம். இந்த ஜயபுரம் சிறியபட்டணம். கஞ்சம் ஜில்லாவில் பர்லாகிமிடி, பெத்தகிமிடி, சின்னகிமிடி முதலிய அநேக ஜமீன்கள் இருக்கின்றன. பர்லாகிமிடிக்கு நவபாடாவிலிருந்து இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இங்கே இவ்வூர் அரசர் ஓர் ஆங்கில கலாசாலையையும், சமஸ்கிருத பாடசாலையையும், வைத்தியசாலையையும் ஏற்படுத்தி நடத்திவருகிறார். கோதாவரி ஏஜென்ஸியிலிருக்கும் பத்திராசலத்தில் பிரசித்தமான ஸ்ரீராமருடைய தேவாலயம் ஒன்றிருக்கிறது. இங்குள்ள ஜனங்கள் நாகரிகமற்ற படிப்பில்லாத மூர்க்கர்களாயிருப்பதால், நாகரிக

முள்ள ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சட்டங்கள் அவர்களுக்கு இல்லை. இந்தப் பிரதேசத்தில் ஸிவில், கிரிமினல் என்னும் இரண்டுவிதமான விவகாரத்தையும் நடத்துபவர் ஒருவரே. அவர் சென்னைக் கவர்னருக்கு ஏஜெண்டாகையால் இப்பிரதேசத்திற்கு ஏஜென்ஸி டிராக்ட்ஸ் என்ற பெயர்வந்தது.

## ii. சமவெளிப் பிரதேசம்.

இந்த ஜில்லாக்களில் சமுத்திரக்கரையை அடுத்தபாகம் மிகவும் செழிப்புள்ளது. ஆகையால் இங்கு அதிக ஜனங்கள் வசிக்கிறார்கள்.

| ஜில்லா. | விஸ்தீரணம். | ஜனத்தொகை. |
|---|---|---|
| கஞ்சம் | 4,896 | 22,21,000 |
| விசாகபட்டணம் | 4.600 | 21,71,000 |
| கோதாவரி | 2,545 | 14,46,000 |

ஏஜென்ஸி டிராக்ட்ஸின் விஸ்தீரணம் ஜனத்தொகை முதலியவற்றோடு சமவெளிப் பிரதேசத்தின் விஸ்தீரணம் ஜனத்தொகை முதலியவற்றை ஒப்பிட்டுப் பார்த்து வித்தியாசங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

**முக்கியமான நதிகள் :—ருஷிகுல்யா.** இதன் நீளம் 100 மைல். இந்நதியிலிருந்தும் இதன் உபநதியாகிய மகாநதியிலிருந்தும் இரண்டு கால்வாய்கள் வெட்டியிருக்கிறார்கள். 1,42,000 ஏகர் நிலங்கள் இவற்றால் பயிரிடப்படுகின்றன.

**வம்சதாரா :**—இது விசாகபட்டணம் ஜில்லாவில் மலைப் பிரதேசத்தில் உண்டாகி அங்கிருந்து கஞ்சம் ஜில்லாவில் புகுந்து வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. இதன் முகத்துவாரத்தின் அருகே கலிங்கபட்டணம் என்ற துறைமுகம் இருக்கிறது. இந்நதியின் நீளம் 145 மைல்.

**நாகாவளி** அல்லது **லங்கூல்யா :**—இதுவும் விசாகபட்டணத்தின் மலைநாட்டில் உண்டாகி, தென்கிழக்காய் ஓடி, கஞ்சம், விசாகபட்டணம் இந்த ஜில்லாக்களுக்கு எல்லையாகி, கிழக்குச் சமுத்திரத்தில் விழுகிறது. இதன் முகத்துவாரத்தில் **ஸ்ரீகாகுளம்** என்னும் துறைமுகம் இருக்கிறது. இதன் நீளம் 115 மைல்.

கோதாவரி நதியைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்நதிக்கு எங்கே அணைகட்டியிருக்கிறார்கள்? இந்நதியின் கிளைகளுக்கிடையில் பல தீவுகளிருக்கின்றன. இவற்றிற்கு லங்கைத்தீவுகள் என்று பெயர். இத்தீவுகளில் முக்கியமானது நகரவென்பது. இது மிகவும் செழிப்புள்ளது. இங்கு தென்னையும் வாழையும் விசேஷமாய்ப் பயிராகின்றன. கஞ்சத்திற்கு வடக்கே சில்கா ஏரி இருக்கிறது.

**சீதோஷ்ணஸ்திதி:**—சமவெளிப்பிரதேசம் கடற்கரையை அடுத்திருப்பதால் வாசம்செய்ய ஏற்றதாயிருக்கிறது. ஆகையால் பெரிய பட்டணங்களும் இங்கே ஏற்பட்டிருக்கின்றன. விசாகபட்டணத்தில் 50 அங்குலமும் காக்கிநாடாவில் 40 அங்குலமும் மழை பெய்கிறது. அடிக்கடி இந்தப் பக்கங்களில் காற்றுமழை யடித்து அதனால் சேதம் நேரிடுவதும் உண்டு நிலம் செழிப்பாயிருப்பதாலும் நல்ல நதிகள் ஓடுவதனாலும் பாய்ச்சலுக்கு வேண்டிய ஆதாரங்கள் ஏற்பட்டிருப்பதாலும் இங்கே நல்ல விளைவு உண்டாகிறது.

**விளைபோருள்:**—நெல் முக்கிய விளைபொருள். கேழ்வரகு கம்பு, பயறு முதலியனவும் விளைகின்றன. சில இடங்களில் கரும்பு பயிராகிறது. கோதாவரி ஜில்லாவில் சாமல்கோட்டையில் ராஜாங்கத்தார் கரும்புப் பயிரை விருத்திசெய்யும் முறையைக் கண்டறியத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இங்கு உண்டாகும் கரும்பு மிகவும் சிரேஷ்டமானது. கோதாவரி புகையிலைக்குப் பெயர்பெற்றது. இவைகளல்லாமல் தோட்டங்களில் காய்கறிகளும் கிச்சிலிப்பழம் முதலியவைகளும் உண்டாகின்றன. மாங்கனிஸ் என்னும் ஒருவகை உலோகமும் கிடைக்கிறது.

**கைத்தோழில்:**—விவசாயத்தைத் தவிர, துணி நெய்தல் முக்கியமான கைத்தொழில். பர்ஹாம்பூர் பட்டு உடைகளுக்கும் ஸ்ரீகாகுளம் நேர்த்தியான மஸ்லின் துணிக்கும் பெயர்பெற்றவை. இத்துணியின் நூலிழைகள் சிலந்தியின் நூலிழையைவிட மெல்லியவை. அஸ்காவில் சர்க்கரை செய்கிறார்கள். கடற்கரையில் உப்பு எடுக்கிறார்கள். இத்தொழில் முக்கியமாய் நவபாடா என்னுமிடத்தில் நடக்கிறது. விசாக

பட்டணத்தில் தந்தம், சந்தனமரம், செம்மரம் ஆகிய இவற்றால் அழகான பெட்டிகள் செய்கிறார்கள். சணல்நார் வேலை சிட்டிவலஸாவில் நடக்கிறது. காக்கிநாடாவின் வஸ்திரங்கள் நேர்த்தியாக இருக்கும். இவையல்லாமல், தங்க நகைகளும், வெள்ளி நகைகளும், பாத்திரங்களும்; பித்தளை, தாம்பிரம இவற்றால் ஆன பாத்திரங்களும் எல்லா இடங்களிலும் செய்கிறார்கள்.

போக்குவரவுக்குரிய சாதனங்கள் :—கடற்கரையோரமாய், சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் இருப்புப் பாதை செல்லுகிறது ஒரு வண்டிப்பாதையும் இருக்கிறது.

பாஷை :—இப்பிரதேசத்தில் பேசும் பாஷை தெலுங்கு. கஞ்சம் ஜில்லாவில் ஒட்டிரர்கள் ஒரியாபாஷை பேசுகிறார்கள்.


பட்டணங்கள்—1. கஞ்சம் ஜில்லா :—இந்த ஜில்லாவில் முற்காலத்தில் கஞ்சம் என்பது முக்கிய பட்டணமாயிருந்தது. இந்தப் பட்டணத்தில் ஜ்வரம் விசேஷமாய் உண்டானதால் பர்ஹாம்பூர் என்கிற பட்டணத்தை முக்கிய பட்டணமாக்கிவிட்டார்கள். ஆதலால் இது இப்போது ருஷிகுல்யாவின் முகத்துவாரத்தில் ஒரு சிறு கிராமமாக இருக்கிறது.

பர்ஹாம்பூரில் ஜில்லா ஜட்ஜி, எஞ்சினீர் முதலிய முக்கிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் இதுதான் பெரியது. இங்கே ஒரு கலாசாலை இருக்கிறது.

கலெக்டரும் போலீஸ் சூபரின்டென்டென்டும் சத்திரபுரம் என்னும் நகரில் இருக்கிறார்கள். இது கடலோரமாகவுள்ளது. இது தேகசௌக்கியத்துக்குத் தக்க இடம்.

ஸ்ரீகாகுளமும் அப்படியே. இது எந்த நதியின் முகத்துவாரத்திற்கருகில் இருக்கிறது? முற்காலத்தில் இது எதற்குப் பெயர் போனது? இது புகைவண்டி போகுமிடத்திற்கு 9 மைல் தூரத்திலிருப்பதால் வரவர க்ஷீணித்துக்கொண்டு வருகிறது.

கலிங்கபட்டணம் :—இதன் அருகில் எந்த நதி கடலில் விழுகிறது? சிலகாலம் மகம்மதியர்கள் இப்பட்டணத்தை ஆண்



THE SEA-SHORE. VIZAGAPATAM.—விசாகபட்டணத்தின் கடற்கரை.

டார்கள். அநேகம் பள்ளிவாசல்களும் வேறு பலவித கட்டிடங்களும் இங்கே இருக்கின்றன. கப்பல்கள் தங்க இங்கே கொஞ்சம் வசதியிருப்பதால் ஏற்றுமதி இறக்குமதி செய்கிறார்கள். இங்கே உப்பளம் ஒன்று உண்டு.

ஆஸ்கா:—இது ருஷிகுல்யாவும் மகாநதியும் சேருமிடத்தில் இருக்கிறது. இதன் அருகில் கரும்பு விசேஷமாகப் பயிராகிறது. ஆகையால் இங்கே கருப்பஞ்சாற்றிலிருந்து சர்க்கரையை ஏராளமாய் எடுக்கிறார்கள்.

ஸ்ரீகூர்மம்:—இது ஸ்ரீகாகுளத்திற்கு ஒன்பது மைல் தூரத்திலுள்ள விஷ்ணுஸ்தலம்.

2. விசாகபட்டணம் ஜில்லா:—விசாகபட்டணம் கிழக்குக் கரையிலுள்ள துறைமுகங்களெல்லாவற்றிலும் வசதியானது. இங்கே கிழக்குத்தொடர்ச்சி மலையானது கடலில் பிரவேசித்திருப்பதால் கப்பல்கள் ஒதுங்க இயற்கையான துறைமுகம் அமைந்திருக்கிறது. இம்மாதிரி கடலில் பிரவேசித்திருக்கும் மலைக்கு இங்கிலீஷில் டால்பின்ஸ் நோஸ் என்று பெயர். இப்பட்டணத்திற்கு மேற்கே சமுத்திரஜலம் எதிர்த்துவந்து தங்கியிருக்கிறது. கப்பல்கள் கரைக்கு அருகில் வந்து நிற்பதால் ஏற்றுமதி இறக்குமதி செய்வது சுலபமாயிருக்கிறது. இப்பட்டணத்தில் நட்சத்திர சாலையும் ஒரு கலாசாலையும் இருக்கின்றன. இதற்கு மூன்று மைல் வடக்கேயுள்ள வால்தேர் குளிர்ச்சியான இடம். இதில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் வசிக்கிறார்கள். விசாகபட்டணத்திற்கு வடமேற்கில் ஆறு மைல் தூரத்தில் சிம்மாசலம் என்னும் விஷ்ணுஸ்தலம் இருக்கிறது. இதற்கு அநேகர் யாத்திரையாகச் செல்கிறார்கள். இம்மலைச் சரிவில் பலாப்பழம், வாழைப்பழம், அன்னாசிப்பழம் முதலியவை விசேஷமாய் உண்டாகின்றன.

இந்தியாவிலுள்ள பெரிய ஜமீன்களில் ஒன்றாகிய 3,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள விஜயநகரம் சமஸ்தானத்துக்கு முக்கியபட்டணம் விஜயநகரம். இங்கேதான் அரசர் வசிக்கிறார். தெருக்களும் சாலைகளும் இங்கே அழகாக இருக்கும். நல்ல பாடசாலைகளும், வைத்தியசாலைகளும் இங்கே உண்டு. பொப்பிலி என்னும் ஜமீனுக்கு முக்கியபட்டணம் போப்பிலி.

3. கோதாவரி ஜில்லா:—காக்கிநாடா இந்த ஜில்லாவில் முக்கிய பட்டணமாயும் துறைமுகமாயும் இருக்கிறது. இங்கே கடல் ஆழமில்லாததால் கப்பல்கள் கடற்கரைக்குச் சிறிது தூரத்திலேயே தங்கவேண்டியிருக்கிறது. இதற்கும் ஸாமல் கோட்டைக்கும் 10 மைல் தூரம். இருப்புப்பாதை கிளை ஒன்று ஓடுகிறது. இது கால்வாய்களாலும் மற்ற ஊர்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது பித்தாபுரம் ஜமீனைச் சேர்ந்தது. பித்தாபுரம் ராஜா இங்கே ஒரு கலாசாலையை ஏற்படுத்தி நடத்திவருகிறார்.

அமலாபுரம்:—கோதாவரி டெல்டா மத்தியிலிருக்கிறது. இது காக்கிநாடாவுக்கு 12 மைல் தூரத்தில் இருக்கிறது.

ராஜமகேந்திரம்:— இது கோதாவரி நதியின் கரையிலிருக்கிறது. இங்கு ஜில்லா ஜட்ஜ் வசிக்கிறார். அரசாங்கத்தாரால் நடத்தப்படும் ஒரு கலாசாலை இங்கேயிருக்கிறது. சாமான்கள் படகுகளின் மூலமாய்க் கொண்டுவரப்பட்டு இங்கிருந்து பல ஊர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இங்கே சிறைச்சாலையிலுள்ள கைதிகளைக்கொண்டு ஜமக்காளம், பாதக்குறடு முதலியவைகளைச் செய்விக்கிறார்கள்.


## 4. கிருஷ்ணா ஜில்லா.

இதன் விஸ்தீரணம் 5,900 சதுரமைல். ஜனத்தொகை 20,00,000. இதனால் இது செழிப்புள்ள ஜில்லா என்றும் வசிக்க ஏற்றதென்றும் தெரிந்துகொள்ளலாம். படத்தைப் பார்த்து இதன் மேற்கெல்லை இன்னதென்று தெரிந்துகொள்க. இந்த ஜில்லாவின் மேற்குக் கோடியில் கிழக்கு மலைத்தொடர் சிறு குன்றுகளாகத் தாழ்ந்திருக்கிறது. இந்த இடத்தில் பூமி மேடாகவும் மற்ற இடங்களில் தாழ்ந்த சமவெளியாகவும் உள்ளது. இந்தப் பூமிக்கு அதிக மழை வேண்டியதில்லை. ஏனெனில் இதில் தரை காய்ந்துபோகாமல் எப்போதும் ஈரமாகவே யிருக்கும். வெளிப்பார்வைக்கு மண் வறண்டது போல் காணப்பட்டாலும் கீழே நீர்க்கசிவு இருந்துகொண்டேயிருக்கும். இந்த ஜில்லாவின் தெற்கே கிருஷ்ணா நதி ஓடுகின்றது. தெற்கே கிருஷ்ணா நதிக்கும் வடக்கே கோதாவரி நதிக்கும் நடுவில் டெல்டா இருப்பதால் கோதாவரிக் கால்வாயும் கிருஷ்ணா கால்வாயும் இதில் பாய்கின்றன. எல்லூர்

என்ற ஊரில் இந்த இரண்டு கால்வாய்களும் சேருகின்றன. கிருஷ்ணா நதிக்கு எங்கே அணைகட்டியிருக்கிறார்கள்? எங்கிருந்து டெல்டா ஆரம்பிக்கிறது? இந்த ஜில்லாவின் நடுவில் கொல்லேரி என்னும் ஏரி இருக்கிறது.

**சீதோஷ்ணஸ்திதி** :—வெயிற்காலத்தில் இந்த ஜில்லா அதிக உஷ்ணமாயிருந்தபோதிலும் மொத்தத்தில் சௌக்கியமான இடமென்றே சொல்லவேண்டும். இந்த ஜில்லாவில் மழை மிகவும் குறைவு; வருஷத்தில் 33 அங்குலங்கூடப் பெய்வதில்லை. அதுவும் கோடையில் அதிகமாகவும் மாரிக்காலத்தில் கொஞ்சமாகவும் பெய்கிறது. இங்கே சில சமயங்களில் புயலடிப்பதுண்டு.

**விளைபொருள்** :—இந்த ஜில்லா நிலவளமுள்ளதாயிருப்பதாலும் கோதாவரி நதியும் கிருஷ்ணா நதியும் பாய்வதாலும் நெல் ஏராளமாய் விளைகிறது. சோளம், கம்பு இவைகளும் விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன. இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் பருத்தி உண்டாகிறது. ஆனால், இது நல்ல பருத்தியன்று. புகையிலை, ஆமணக்கு, அவுரி முதலியவைகளும் பயிரிடப்படுகின்றன.





பெஜவாடாவிலிருந்து போகும் ரயில் மார்க்கம்

இங்கே ஆடுமாடுகள் விசேஷமாக உண்டு. இந்த ஜில்லாலேதான் பேர்பெற்ற கோலகொண்டா வைரச் சுரங்கங்க

ளிருந்தன. இந்த ஜில்லா முற்காலத்தில் கோலகொண்டா என்னும் மகம்மதிய ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. வைரங்களில் சிறந்த கோஹினூர் என்ற வைரக்கல் இங்கேதான் கிடைத்தது.

**கைத்தொழில்:**—துணி நெய்தல் முக்கியமான கைத்தொழில். கம்பளியும் நெய்கிறார்கள். மசூலிபட்டணம் (பந்தர்) சீட்டித்துணி இங்கேதான் செய்யப்படுகிறது. எல்லூர் ரத்தின கம்பளங்களுக்குப் பேர்பெற்றது.

**போக்குவரவுக்குரிய சாதனங்கள்:**—இந்த ஜில்லாவில் பெஜவாடா முக்கிய ரயில்வே ஜங்க்ஷன். இங்கிருந்து கிழக்கே மசூலிபட்டணத்திற்கும், தெற்கே சென்னைக்கும், தென்மேற்கில் குண்டக்கல்லுக்கும், மேற்கே ஹைதராபாத்துக்கும், வடக்கே கல்கத்தாவுக்கும் புகைவண்டிகள் போகின்றன. இதுதவிர இங்கிருந்து அநேகம் கால்வாய்களும் ஓடுகின்றன. நல்ல சாலைகளும் பல உள்ளன. ஆகையால் வர்த்தகம் சுலபமாய் நடக்கிறது. பெஜவாடாவிலிருந்து தோல் விசேஷமாய் ஏற்றுமதியாகிறது. இன்னும் இங்கிருந்து வெளியிடங்களுக்கு என்ன என்ன அனுப்புகிறார்கள்?



கிருஷ்ணாவின் பாலம். பெஜவாடா.

பாஷை:—இங்கு பேசும் பாஷை தெலுங்கு; தெலுங்கு பாஷை பேசும் ஜனங்களுக்கெல்லாம் சாதாரணமாய் ஆந்திரர்கள் என்று பெயர்.


முக்கிய பட்டணங்கள்:—மசூலிபட்டணம் முக்கிய நகரம். இதற்கு, பந்தர் என்றும் வேறொரு பெயர் உண்டு. இது சரித்திர சம்பந்தமாக மிகவும் பிரசித்திபெற்றது. முன்பு இது சிறந்த துறைமுகமாயிருந்தது. ஒருகாலத்தில் பெரும் புயலடித்து இப்பட்டணத்தின் பெரும் பாகத்தை அழித்துவிட்டது. இது வரவர க்ஷீணித்துக்கொண்டே வருகிறது. இது சீட்டித்துணிக்கும் ரத்தினக் கம்பளங்களுக்கும் பேர்பெற்றது. பெஜவாடா முக்கிய வர்த்தக ஸ்தலம். எல்லூரில் அரிசி குத்துவதற்கும் சணல்நார் வேலைசெய்வதற்கும் தகுதியான பல யந்திரசாலைகள் இருக்கின்றன. எல்லூரும் ஒரு வர்த்தக ஸ்தலம். கோதாவரி ஆற்றின் முகத்துவாரத்துக்கருகில் நரசாபுரம் இருக்கிறது. இவ்விடத்திலும் வர்த்தகம் நடக்கிறது.

## 5. குண்டூர் ஜில்லா.

இந்த ஜில்லாவானது கிருஷ்ணாவுக்குத் தெற்கே இருக்கிறது. இதனுடைய விஸ்தீரணம் 5,735 சதுரமைல்.

பொதுவாகச்சொல்லுமிடத்தில் இந்த ஜில்லா சமநிலமேயாகும். ஆயினும் மேற்கே சில குன்றுகளிருக்கின்றன. இவை கிழக்குத்தொடர்ச்சி மலையைச் சேர்ந்தவை. இந்த ஜில்லாவின் வடக்கில் கிருஷ்ணா நதி ஓடுகிறது. இந் நதியிலிருந்து பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவின் பெரும்பாகத்தின் விளைவுககு இந்தக் கால்வாய்களே ஆதாரமானவை. கடற்கரை ஓரத்தைத்தவிர மற்றப் பாகங்களில் வெயிற்காலத்தில் வெயில் அதிகமாகவும் குளிர்காலத்தில் மழை அதிகமாகவும் இருக்கின்றன. கடற்கரை ஓரத்தில் அதிகமாகவும் உள்நாட்டில் குறைவாகவும் மழை பெய்கிறது.

இந்த ஜில்லாவில் சில இடங்களில் நிலத்தின் பூசாரம் நன்றாயிருப்பதால் அங்கே நெல், சோளம், பருத்தி, ஆமணக்கு முதலியவை விசேஷமாகப் பயிராகின்றன. தெனாலி தாலூகா அரிசிக்குப் பிரசித்தமானது. எல்லாத் தாலூகாக்




Emery Walker sc.

களையும்விட இத்தாலுகா மிகவும் செழிப்பாயிருப்பதால் இங்குள்ளவர்கள் தனவந்தர்களாக இருக்கிறார்கள். கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஓரத்தில் காடுகள் அதிகமாக இருக்கின்றன. பலநாடு தாலுகாவில் காட்டின் விஸ்தீரணம் அதிகம். இக்காடுகளில் கிருஷ்ணாநதி டெல்டாவிலுள்ள ஆடுமாடுகள் ஏராளமாய் மேய்கின்றன. இந்நாட்டில் பசுக்கள் செவ்வையாக வளர்ந்திருக்கும். இந்த ஜில்லாவின் தென்பாகத்திலிருக்கும் ஓங்கோல் நகரானது மாடுகளுக்குப் பெயர்பெற்றது. இவைகளைத்தான் நெல்லூர் மாடுகளென்று சொல்வார்கள்.

முக்கியமான கைத்தொழில் துணிநெய்தல். குண்டூரில் பஞ்சைப் பண்படுத்தி நூற்கும் யந்திரங்களும், நெல்குத்தும் யந்திரங்களும் இருக்கின்றன.

ஜனத்தொகை 17,00,000. முக்கியமாய் வழங்கும் பாஷை தெலுங்கு.

பட்டணங்கள்—குண்டூர் பட்டணமானது இந்த ஜில்லாவின் வடக்கில் இருக்கிறது. கலெக்டர் கச்சேரியும் முக்கியமான மற்ற உத்தியோகசாலைகளும் இங்கேதான் உள்ளன. இங்கு பஞ்சு வர்த்தகம் விசேஷமாக நடப்பதால் பல பஞ்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பட்டணம் ஆரோக்கியமானது. இதனருகில் மங்களகிரி என்கிற ஒரு புண்ணிய ஸ்தலம் உண்டு.

மற்றொரு முக்கியபட்டணம் ஓங்கோல் என்பது. இங்கே மாட்டுச்சந்தை கூடுகிறது. இதில் விற்பனைக்கு வரும் மாடுகளில் சில 700 அல்லது 800 ரூபாய் விலைபெறக்கூடியவைகளாயிருக்கின்றன. அமராவதி என்கிற பட்டணம் சரித்திரத்தால் பிரசித்திபெற்றது. இங்கே பௌத்த ஸ்தூபிகள் அதிகமாக உண்டு. சில ஸ்தூபிகளை, சென்னபட்டணத்திலுள்ள பொருட்காட்சிச் சாலையிற் பார்க்கலாம்.

தெனாலி :—இது நெல்பயிருக்குப் பெயர்போனது. தெனாலி தாலுகாவில் விளையும் அரிசி, சென்னபட்டணத்திற்கும், இன்னும் இதர இடங்களுக்கும் இங்கிருந்து ஏராளமாய் அனுப்பப்படுகிறது.

# கிழக்குக் கடற்கரையில் உள்ள மத்திய ஜில்லாக்கள்.


## 1. நெல்லூர் ஜில்லா.

குண்டூர் ஜில்லாவின் தென்பாகத்தில் இந்த ஜில்லா இருக்கிறது. இதன் விஸ்தீரணம் 8,000 சதுரமைல்.

இந்த ஜில்லாவுக்கு மேற்கே கிழக்குத்தொடர்ச்சி மலை போகிறது. இதன் உயரமான சிகரம் உதயகிரி. உதயகிரி காடுகளுக்குப் பெயர்பெற்றது. கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் சமுத்திரத்துக்கும் மத்தியிலுள்ள பிரதேசம் விஸ்தாரமான சமபூமி. இந்த ஜில்லாவின் முக்கியமான நதி பெண்ணையாறு. இங்கே இந்நதிக்கு ஸங்கம், நெல்லூர் என்ற இடங்களில் அணைகட்டி ஜலத்தைக் கால்வாய்களில் திருப்பிச் சாகுபடி செய்ய உபயோகிக்கிறார்கள். டெல்டாவில் பூசாரம் அதிகமாகையால் நெல் நன்றாக விளைகிறது. நெல்லூர் அரிசியைச் சென்னபட்டணத்திலும் வேறு பல இடங்களிலும் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள்.

உள்நாட்டில் மழை குறைவு. ஆகையால் அந்த இடத்தில் சோளம் பயிராகிறது. நெல்லூர் முற்காலத்தில் அவுரிக்குப் பேர்பெற்றது. இங்கே சில குடித்தனக்காரர்கள் செவ்வையாகப் பசுக்களை வளர்த்து மற்ற ஜில்லாக்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த ஜில்லா துணிநெய்தலுக்குப் பேர்பெற்றது. வேங்கடகிரி என்கிற பட்டணத்தில் உயர்ந்த சரிகை வஸ்திரங்கள் நெய்கிறார்கள். இந்த ஜில்லா அபிரகத்திற்குப் பேர்பெற்றதென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்த ஜில்லாவில் இருப்புப்பாதை கொஞ்சதூரந்தான் பரவியிருக்கிறது. கூடூர் ஜங்க்ஷனிலிருந்து தென்னிந்தியா இருப்புப்பாதையானது தென்மேற்காய் ஓடி, சித்தூர் ஜில்லாவுக்குப் போகிறது. கிழக்குக்கரை ஓரமாய் ஓடும் கால்வாயின் பெயரென்ன?

இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 13,28,000. ஸ்ரீஹரிக்கோட்டை என்னும் தீவில் ஏனுதிகள் என்னும் நாகரிகமற்ற



NELLORE TOWN HALL—நெல்லூர் டவுன் ஹால்.


ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்கள் இத்தேசத்துப் பூர்விகக் குடிகளில் ஒருவகையார். அவர்களுடைய பழக்க வழக்கங்கள் வெகு விசித்திரமாயிருக்கும். இங்கே முக்கியமாய்ப் பேசும் பாஷை தெலுங்கு.

பட்டணங்கள் : — பெண்ணையாற்றின் கரையிலுள்ள பழைய பட்டணமாகிய நெல்லூர், ஜில்லா கலெக்டர் வசிக்கும் தலைமை நகராக உள்ளது. இது சரித்திரப் பிரசித்திபெற்றது. பல தெலுங்கு வித்வான்கள் வசித்திருந்த இடம். இந்த ஊரில் டௌன் ஹால் மிகவும் அழகானது. வெங்கடகிரி ஜமீன்தார் வசிக்கும் ஒரு அழகான பட்டணம். உதயகிரி சரித்திரப் பிரசித்திபெற்ற இடம். இங்கே பழைய கோட்டைகளும், கிலமான தேவாலயங்களும், மண்டபங்களும், குளங்களும் அதிகமாக இருக்கின்றன.

## 2. சென்னபட்டணம் ஜில்லா.

இந்த ராஜதானியின் பிரதான நகரமாகிய சென்னபட்டணம் கடலோரமாய் 9 மைல் நீளமும் உள்நாட்டில் $3\frac{1}{2}$ மைல் அகலமும் உள்ளது. இதன் விஸ்தீரணம் எவ்வளவு? கிழக்கே கடலும் மற்றப் பக்கங்களில் செங்கற்பட்டு ஜில்லாவும் இதைச் சூழ்ந்திருக்கின்றன. இப்பொழுது சென்னபட்டணம் இருக்கிற இடம் ஆங்கிலேயருக்கு 1639-ஆம் வருஷம் ஸ்ரீரங்கராயர் என்கிற சந்திரகிரி அரசரிடமிருந்து கிடைத்தது. ஸெண்ட் ஜார்ஜு கோட்டை இந்நகரத்தின் மத்திய இடம். இதில் ராணுவ உத்தியோகசாலைகளிருக்கின்றன. இதற்கு வடக்கில் அதிக ஜனநெருக்கமுள்ளதாய் ஒரு சதுரமைல் பரப்புள்ள பட்டணமென்று வழங்குகிற ஜார்ஜ டவுன் இருக்கிறது. ஜார்ஜ நம்முடைய சக்கரவர்த்தியின் பெயரல்லவா? அவருடைய பெயரை இதற்கு ஏன் கொடுத்திருக்கிறார்கள்? இதில் நாணயசாலைகள் (பாங்குகள்), ஹைகோர்ட்டு, வர்த்தகசாலைகள், கடல்தீர்வை வாங்கும் கஸ்டம்ஸ் ஹவுஸ், அநேகம் கடைத்தெருக்கள் முதலியன இருக்கின்றன. கடலில் இரும்பினாலான வாராவதியும் கப்பல் ஒதுங்கும் இடமும் கட்டப்பட்டிருக்கின்றன. கூவம், அடையாறு என்னும் இரண்டு சிற்றாறுகள் இந்நகரத்தில் ஓடுகின்றன. இவ்

விரண்டிலும் உஷ்ணகாலத்தில் ஜலம் கிடையாது. இந்நகரத்தின் வடமேற்கில் ஏழுமைல் தூரத்திலுள்ள புழலேரியிலிருந்து நல்லஜலம் கொண்டுவரப்பட்டு எங்கும் உபயோகிக்கிறது. இது சென்னைத் துரைத்தனத்தாரும் சென்னை ராணுவ உத்தியோகஸ்தர்களும் இருக்கும் தலைமை நகரமாயிருப்பதால், சகல உத்தியோகசாலைகளும் இங்கே அமைக்கப்



ஹைகோர்ட்டு, சென்னை.

பட்டிருக்கின்றன. நம்முடைய கவர்னர் வசிக்குமிடம், கவர்ன்மெண்டு ஆபீசு, போர்டு ஆபீசு ஆகிய இவை இங்கேதான் உள்ளன. இவ்விடத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கும் நியாயஸ்தலங்களுக்குத் தலைமை நியாயஸ்தலமான ஹைகோர்ட்டு இருக்கிறது. பட்டாளம் கோட்டைக்குள் இருக்கிறது. இப்பட்டணத்தில் நீங்கள் பார்க்கவேண்டிய இடங்கள் பல உண்டு. முக்கியமானவை பீபில்ஸ் பார்க், மியூஸியம், மீன்சாலை என்பன. திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் என்னும் இரண்டும் சென்னையில் தேவாலயங்களுக்குப் பெயர் பெற்றவை. சகலவிதமான கலாசாலைகளும் சென்னையில் இருக்கின்றன. இங்கேயுள்ள சர்வகலாசங்கத்தில் சென்னை யூனிவெர்ஸிடி ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் கலாசாலைகளின் படிப்புகளைப்பற்றி ஏற்பாடு செய்கிறார்கள். மயிலாப்பூரில் ஸெண்ட் தோம் என்கிற ஒரு மாதாகோவில் உண்டு. இது கிறிஸ்தவ

புண்ணிய புருஷரான ஸெண்ட் தோம் என்பவரைப் புதைத்த இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கற்சிலைகளை இச்சென்னையில் அதிகமாகப் பார்க்கலாம். அவைகளில் முக்கியமானவை விக்டோரியா, ஏழாம் எட்வார்டு, ஐந்தாம் ஜார்ஜ், ஸர் தாமஸ் மன்ரோ, டாக்டர் மில்லர், நீல்துரை, ஜட்ஜ் முத்துசாமி ஐயர், ஜட்ஜ் போடாம், லார்ட் ரிப்பன், கனம் வி. கிருஷ்ண சாமி ஐயர் ஆகிய இவர்களுடைய சிலைகளே.

ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளின் விலைமதிப்பால் இந்தியாவின் துறைமுக நகரங்களுள் சென்னபட்டணத்தை மூன்றாவதாகச் சொல்லலாம். உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களுடனும் இங்கிருந்து வியாபாரம் நடக்கிறது. கப்பல் ஒதுங்குமிடம் நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருக்கிறது.

இப்பட்டணத்தின் ஜனத்தொகை 5,18,000. இத்தொகையில் 100-ல் 78 பங்கு ஹிந்துக்கள், 12 பங்கு மகம்மதியர், 10 பங்கு கிறிஸ்தவர். இவ்விடத்தில் பேசப்படும் பிரதான பாஷை தமிழ். அநேக ஜனங்கள் தெலுங்கும் பேசுகிறார்கள். இந்துஸ்தானியும் இங்கிலீஷும் சில பாகங்களில் வழங்குகின்றன.

## 3. செங்கற்பட்டு ஜில்லா.

இது சென்னபட்டணத்துக்குத் தெற்கேயுள்ளது. இதனுடைய விஸ்தீரணம் 3,070 சதுரமைல்.

இந்த ஜில்லா பெரும்பாலும் சமபூமியாய் இருக்கிறது. இங்கே மலைகள் விசேஷமாக இல்லை. இங்குள்ள பல சிற்றாறுகளில் முக்கியமானவை பாலாறு, அடையாறு, கூவம். இவை கோடைக்காலத்தில் வறண்டுபோகின்றன. இந்த ஜில்லாவில் புழலேரி, பழவேற்காட்டேரி என்கிற ஏரிகள் இருக்கின்றன சமுத்திரத்துக்கு அருகில் உள்ள இடத்தில் மழை அதிகம். மேற்கே போகப்போக மழை குறைவாக இருக்கும் கோடைக்காலத்தில் அதிக மழை பெய்வதில்லை.

ஜலாதாரத்துக்குப் பல ஏரிகள் உண்டு. சம்பரம்பாக்கம் ஏரி மிகவும் பெரியது. ஜில்லாவின் தென்பாகத்தில் பூமி சாரமுள்ளது நெல், கேழ்வரகு, வேர்க்கடலை, எள்ளு முதலிய தானியங்கள் பயிராகின்றன. சமுத்திரக்கரை ஓரத்தில் சவுக்குமரங்கள் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. இந்த

ஜில்லாவில் நூல் துணிகளும், பட்டு வஸ்திரங்களும் சிலாக்கியமானவை. காஞ்சீபுரம் நல்ல வஸ்திரங்களுக்கு மிகவும் பிரசித்திபெற்றது.

இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 14,00,000. பெரும்பான்மையோர் ஹிந்துக்கள். இங்கே வழங்கும் பாஷை தமிழ்; சிலர் தெலுங்கும் பேசுகிறார்கள்.

பட்டணங்கள் :—சென்னபட்டணத்துக்கு அருகிலுள்ள சைதாப்பேட்டை, ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம். செங்கற்பட்டு இதற்கு இரண்டாவது. இதில் ஜில்லா ஜட்ஜின் கோர்ட் இருக்கிறது.


காஞ்சீபுரத்தை இந்தியாவிலுள்ள ஏழு புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாக ஹிந்துக்கள் கொண்டாடுகிறார்கள். இதில் பல தேவாலயங்கள் உண்டு. இது மிகவும் புராதன நகரம். இது சரித்திரப் பிரசித்திபெற்றது. இந்த ஜில்லாவில் காஞ்சீபுரத்தைத் தவிர வேறு புண்ணிய ஸ்தலங்களும் உண்டு. இவைகளில் ஸ்ரீபெரும்பூதூர் என்பது ராமாநுஜர் அவதரித்த இடம். செங்கற்பட்டுக் கருகில் பக்ஷிதீர்த்தம் என்று வழங்குகிற திருக்கழுகுன்றம் என்னும் சிவஸ்தலம் இருக்கிறது. இதன் சமீபத்தில் கடலோரமாக உள்ளமகாபலிபுரம்சரித்திரப் பிரசித்தியுள்ளது. இதிலுள்ள சிற்பவேலைகள் பார்க்கப் பார்க்க ஆச்சரியமாக விருக்கும். இது முற்காலத்தில் பிரசித்தி பெற்ற துறைமுக நகரமாக விருந்தது.

மதுராந்தகம், திருஎவ்வுளூர் (திருவள்ளூர்), பூவிருந்தவல்லி ஆகிய இவை புண்ணிய ஸ்தலங்கள். பறங்கிமலையில் பட்டாளமிருக்கிறது.


## 4. தென்ஆற்காடு ஜில்லா.

இது செங்கற்பட்டுக்குத் தெற்கே இருக்கிறது. இதனுடைய விஸ்தீரணம் 4,200 சதுரமைல்.

மேலேசொன்ன ஜில்லாவைப்போல இது சமவெளியான இடம். மேற்கிலும், வடமேற்கிலும், குன்றுகள் உண்டு. இங்குள்ள செஞ்சிக்கோட்டை முற்காலத்தில் பட்டாளங்கள் தங்குமிடமாக இருந்தது. முக்கியமான நதி தென்பெண்ணையாறு இதுதவிர வெள்ளாறு தென்பாகத்திற் சென்று பறங்




CONJEEVERAM.—காஞ்சீபுரம்.



PONDICHERRY — புதுச்சேரி.

கிப்பேட்டைக்கு அருகே கடலில் விழுகிறது. அங்கங்கேயுள்ள கிணறுகள், கால்வாய்கள், ஊற்றுக்கள், ஏரிகள் இவைகள் மூலமாய் விவசாயம் நடக்கிறது. கொள்ளிடத்தின் ஜலத்தையும் வெள்ளாற்றின் ஜலத்தையும் சிதம்பரத்தில் விவசாயத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்த ராஜதானியில் பெரியதான வீராணத்தேரி இந்த ஜில்லாவிலேதான்




Emery Walker sc.

இருக்கிறது. பாலூர் என்னுமிடத்தில் விவசாய அபிவிருத்திக்காக ஒரு ஸ்டேஷனை ஏற்படுத்தி அங்கே நூதனமான பயிர் முறைகளைக் காண்பிக்கிறார்கள்.

வேர்க்கடலை விசேஷமாக விளைகிறது. சிதம்பரம் தாலூகாவில் நெல் விசேஷமாக விளைகிறது ; எள்ளு, கரும்பு ஆகிய இவை முக்கியமான பயிர்கள். நெல்லிக்குப்பத்தில் சர்க்கரை செய்கிறார்கள் ; பண்டுருட்டியில் மண்ணினால் பிரதிமைகளும் பாத்திரங்களும் செய்கிறார்கள். சில விடங்களில் பட்டு நெய்தலும் உண்டு. சென்னபட்டணத்திலிருந்து தஞ்சாவூருக்குப் போகிற தென் இந்தியா இருப்புப்பாதை இந்த ஜில்லாவில் தென் திசையாய்ப் போகிறது. விழுப்புறம் ஸ்டேஷனில் இரண்டு கிளைப்பாதைகள் தொடங்கி ஒன்று கிழக்கே புதுச்சேரிக்கும், மற்றொன்று வடமேற்கே வேலூருக்கும் போகின்றன.

ஜனத்தொகை 24,00,000. பெரும்பான்மையோர் ஹிந்துக்கள் ; முக்கியமான பாஷை தமிழ்.

பட்டணங்கள் :— கூடலூர் முக்கியபட்டணம். தென் பெண்ணையாறு, கடிலம் என்ற இரண்டு நதிகள் இங்கே சேருகிறபடியால் கூடல் **ஊர்** என்ற பெயர் இதற்கு உண்டாயிற்றென்று சொல்லுகிறார்கள். இவ்விடத்தில் சேண்ட் டேவிட் கோட்டை இருந்தது. இது ஒரு துறைமுக பட்டணம். இங்கிருந்து வேர்க்கடலை ஏற்றுமதியாகிறது. செங்கற்பட்டு ஜில்லாவைப்போல இதிலும் புண்ணிய ஸ்தலங்கள் உண்டு. முக்கியமானது சிதம்பரம். இங்குள்ள நடராஜமூர்த்தியின் தேவாலயம் உலகப் பிரசித்தியானது. இதற்குச் சமீபத்திலுள்ள காட்டுமன்னார்கோவில் ஒரு விஷ்ணு ஸ்தலம். **செஞ்சி** சரித்திரப் பிரசித்தியான இடம். இக்கோட்டை கட்டியிருக்கிற மாதிரி மிகவும் ஆச்சரியமானது. தேசிங்குராஜன் கதை இந்தக் கோட்டையைப்பற்றித்தான் வழங்குகிறது. பரங்கிப் பேட்டை வியாபார ஸ்தலம்.

திருக்கோயிலூர் பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ள ஒரு அழகான பட்டணம். இதில் ஒரு விஷ்ணுவாலயமும், ஒரு சிவாலயமும், ஒரு வீரசைவமடமும் இருக்கின்றன.

**விழிப்புரம்**:—இங்கே தென் இந்தியா இருப்புப்பாதையின் அநேக கிளைகள் சந்திக்கின்றன. ஒருபெரிய வியாபார ஸ்தலம்.

இங்கு தொழிலைக் கற்பிக்கும் பாடசாலையும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன.


திண்டிவனம்:—திண்டிவனம் என்பது திந்திருணிவனம் (புளியங்காடு) என்னும் வார்த்தையிலிருந்து சிதைந்திருக்கலாம் என்று சிலர்சொல்லுகிறார்கள். இங்கே ஒரு சிங்காரத்தோட்டமும், அதில் ஒரு அழகான ஜைனவிக்கிரகமும் இருக்கின்றன. பாதிரிமார்களால் நடத்தப்பட்டுவரும் ஒரு ஹைஸ்கூல் இங்கே இருக்கிறது.

புதுச்சேரி கடற்கரையி லிருக்கிறது. இந்தியாவில் இது தான் பிரெஞ்சுக்காரருடைய முக்கியமான பட்டணம். இவ்விடமிருந்து பிரான்சுக்கு வேர்க்கடலை ஏற்றுமதியாகிறது. இந்தப் பட்டணம் பார்ப்பதற்கு மிக அழகானது. ஒருவித ஆச்சரியமான கிணறுகள் இங்கே அநேகம் உண்டு. இம்மாதிரியான கிணறுகள் நமது ராஜதானியில் இவ்விடத்திலும் காரைக்காலிலும் தவிர வேறு எவ்விடத்திலுமில்லை.

## 5. தஞ்சாவூர் ஜில்லா.

இது தென் ஆற்காட்டுக்குத் தெற்கே உள்ளது. இதனுடைய விஸ்தீரணம் கிட்டத்தட்ட 3,725 சதுரமைல் இருக்கும்.

இந்த ஜில்லா முழுவதும் சமவெளிப் பிரதேசம். இதில் விசேஷபாகம் காவேரி டெல்டா. இதைத் தென் இந்தியாவின் தோட்டம் என்றும், நெற்களஞ்சியம் என்றும் சொல்வதுண்டு. காவேரிநதி ஓடும் இடங்களிலும் அதன் பிரிவுகள் உள்ள இடங்களிலும் தென்னந்தோப்புகளும் வாழைத் தோட்டங்களும் நிரம்பியிருக்கின்றன. வருஷத்தில் வேண்டிய அளவு மழை பெய்கிறது. இந்த ஜில்லா உஷ்ணம் அதிகமாக இருந்தபோதிலும் ஆரோக்கியமானது. முக்கியமான ஆறு காவேரி. இந்த ஆற்றின் கிளையாகிய கொள்ளிடம் இந்த ஜில்லாவுக்கும் தென் ஆற்காட்டுக்கும் மத்தியில் சென்று பரங்கிப்பேட்டைக்கு அருகே கடலில் விழுகின்றது. காவேரியிலும் கொள்ளிடத்திலும் பல அணைகள் கட்டியிருப்பதால் ஆற்றுநீர் சிறிதும் சேதமாகாமல் பல கால்வாய்களின் வழியாகப் பாய்ந்து பலவகைப் பயிர்களையும்



TANJORE TEMPLE.—தஞ்சாவூர்க் கோவில்.

நன்றாய் விளைவிக்கின்றது. காவேரிஜலம் பாயும் நிலங்களில் வண்டல் வருஷந்தோறும் சேருகிறபடியால் இங்கே நிலங்களுக்கு எருப்போடுவது அதிக அவசியமில்லை; நெல் விளைவு அதிகம்.

கேழ்வரகு, துவரை, வரகு, கம்பு ஆகிய புன்செய்ப் பயிர்கள் சொற்பமாய்ப் பயிரிடப்படுகின்றன. இந்த ஜில்லாவில் மங்கைநல்லூர் என்னுமிடத்தில் விவசாயச்சாலையை ஏற்படுத்தி நூதனமான பயிர் முறைகளைக் கற்பிக்கிறார்கள். விவசாயம் அதிகமாக இருக்கிறபடியால் ஆடுமாடுகள் மேய்வதற்கு ஏற்ற இடமில்லை. அதனால் இந்த ஜில்லாவில் நல்ல மாடுகள் இல்லை. நிலங்களை உழுவதற்கு ஏற்ற மாடுகளை வெளி ஜில்லாவிலிருந்து வாங்கி வருகிறார்கள். இந்த ஜில்லாவில் செய்யப்படும் பித்தளைப்பாத்திரம், பட்டுவஸ்திரம், கம்பளம், நெட்டி சாமான்கள் ஆகிய இவைகள் பெயர்பெற்றவை. முக்கியமான ஏற்றுமதிப்பொருள் அரிசி.

ஜனத்தொகை 23,60,000. இந்த ஜில்லாவில் சில மகம்மதியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பேசுவது தமிழ். வர்த்தகத்தில் இவர்களுக்கு அதிக ஊக்கமுண்டு.

பட்டணங்கள்:—பிரதான பட்டணம் **தஞ்சாவூர்**. இது சரித்திரத்தில் பிரசித்திபெற்றது. இது முற்காலத்தில் சோழ அரசர்களுக்கு ராஜதானியாக இருந்தது. இது ஒரு புண்ணிய ஸ்தலம். இங்கே அழகான தேவாலயங்களுண்டு. அவற்றுள் ஒன்றான பிரகதீசுவரர் கோவிலில் ஒரு பெரிய நந்தி இருக்கிறது. இந்தக் கோவிலின் விமானம் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். தஞ்சாவூர் நகரத்தில் முன்பு பல விதமான சித்திரவேலைகள் செய்துகொண்டிருந்தார்கள் இப்போதும் தஞ்சாவூர் பட்டுச்சேலைக்குப் பிரசித்தியானது. தாம்பிரத்திலும், பித்தளையிலும் அநேகவிதமான பாத்திரங்கள், தட்டுக்கள், ஆயுதங்கள் முதலியன செய்கிறார்கள். இவைகளை அங்கேயுள்ள பழைய அரண்மனையிலும் சென்னபட்டணத்திலுள்ள பொருட்காட்சிச் சாலையிலும் பார்க்கலாம். தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள புஸ்தகசாலையில் பழைய புஸ்தகங்கள் பல இருக்கின்றன. இதற்கு ஸரஸ்வதிமால் என்று பெயர்.

கும்பகோணம் காவேரிக் கரையிலிருக்கிறது. இது ஒரு பெரியபட்டணம். இது ஜில்லாவின் செழிப்பான பாகத்தில் இருக்கிறது. இங்கே பல தேவாலயங்கள் உண்டு. பித்தளைப் பாத்திரங்களுக்கும், ஈயப் பாத்திரங்களுக்கும் இது பிரசித்தி பெற்றது. இவ்விடத்தில் மகா மகம் குளமொன்று இருக்கிறது. பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதடவை மாசிமாதத்தில் சிறந்த உத்ஸவம் இங்கே நடக்கிறது. அக்காலத்தில் லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் வந்து ஸ்நானம் செய்கிறார்கள். இங்கே கவர்ன்மெண்டு கலாசாலையும் இரண்டு பெரிய ஹை ஸ்கூல்களும் உண்டு.

நாகபட்டணம்:—இது முக்கியமான துறைமுக பட்டணம். இது மிகவும் புராதனமானது. இங்கேயிருந்து அரிசி, புகையிலை, சுருட்டு, மஞ்சள், தோல் முதலியவைகள் ஏற்றுமதியாகின்றன. இதற்கு அருகில் உள்ள நாகூர் ஒரு பெரிய மகம்மதிய ஸ்தலம். நாகபட்டணத்துக்கு வடக்கேயுள்ள துறைமுகப் பட்டணமாகிய தரங்கம்பாடி முற்காலத்தில் டேன்சுகாரரால் உண்டாக்கப்பட்டு, பிறகு ஆங்கிலேயரால் விலைக்கு வாங்கப்பட்டது. இது சிலகாலம் இந்த ஜில்லாவின் முக்கியபட்டணமாயிருந்தது.

மன்னார்குடி ஒரு விஷ்ணு ஸ்தலம். இதில் பெரிய கலாசாலையொன்றும், ஹை ஸ்கூலொன்றும் இருக்கின்றன.

மாயூரம் (மாயவரம்) என்கிற பட்டணம் காவேரிக்கரையில் இருக்கிறது. இதுவும் ஒரு புண்ணிய ஸ்தலம். இங்கிருக்கும் ஹை ஸ்கூல் பிரசித்தமானது. சேலைகளுக்குப் பிரசித்தியான கூறைநாடு இப்பட்டணத்துக்கு அருகில் உள்ளது.

சீர்காழி (சீயாழி) இந்த ஜில்லாவில் பிரசித்தியான பட்டணம். இதுதான் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் அவதரித்த ஸ்தலம். இங்கே இரண்டு ஹை ஸ்கூல்கள் இருக்கின்றன. இவ்விடத்தில் கோரைப்பாய் செய்கிறார்கள்.

தஞ்சாவூருக்கு ஆறு மைல் வடக்கே திருவையாறு என்ற ஒரு புண்ணிய ஸ்தலம் இருக்கிறது. இதன் சமீபத்தில் கொள்ளிடம், காவேரி, குடமுருட்டி, வெட்டாறு, வெண்

ணுறு என்னும் ஐந்து ஆறுகள் ஓடுவதால் ஐயாறு என்னும் பெயர் இதற்கு வந்தது. இங்கிருக்கும் ஸம்ஸ்கிருத பாடசாலை யும் ஹை ஸ்கூலும் பெயர்பெற்றவை.

திருவாரூர் (திருவாலூர்) என்கிற பட்டணம் ஒரு முக்கிய மான புண்ணியஸ்தலம். இந்த ஊரில் கமலாலயம் என்னும் அழ கான பெரிய குளமும் அதன் கரையில் கோவிலும், கோவிலைச் சார்ந்த தேரும் பெயர்பெற்றவைகள். இங்கே ஒரு பெரிய ஹை ஸ்கூல் இருக்கிறது.

கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கு மிடையிலுள்ள பாபநாசத்திலும், தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள பிறையாற் றிலும் ஹை ஸ்கூல்க ளிருக்கின்றன.

## 6. இராமநாதபுரம் ஜில்லா.

இது தஞ்சாவூருக்குத் தெற்கே இருக்கிறது. இதனு டைய விஸ்தீரணம் 4,800 சதுரமைல். இதில் இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்களும், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாக் களும் சேர்ந்திருக்கின்றன.

இந்த ஜில்லா முழுவதும் சமவெளிப் பிரதேசம். இதன் மத்தியில்தான் வைகைநதி ஓடிக் கடலில் விழுகிறது. ஜில்லா வின் பாசனத்துக்கு இது மிகவும் உபயோகப்படுகிறது. இது கடலில் விழும் இடத்துக்கு ஆற்றங்கரை யென்று பெயர். இது இராமநாதபுரத்துக்குக் கிழக்கேயுள்ளது. இந்நதியில் வரு ஷத்தில் ஒருமாதம்மட்டும் மிகுதியாக ஜலம் ஓடுமேயல்லாமல் மற்ற மாதங்களில் ஜலம் இராது. ஜில்லாவின் கிழக்கிலும் தென்கிழக்கிலும் பாக்ஸ் ஜலசந்தியும், மன்னார் வளைகுடாவும் இருக்கின்றன. இதன் அருகிலிருக்கும் இராமேசுவரத்தைப் பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். மன்னார்குடா இந்த ஜில்லாவுக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியில் இருக்கிறது. இங்கிருக்கும் மசூதியை 300–வருஷங்களுக்கு முன் தஞ் சாவூர் அரசர் கட்டினதாகச் சொல்லுகிறார்கள்.

கடற்கரை ஓரத்தில் மழை அதிகம். அந்த மழை குளிர் காலத்தில்தான் பெய்கிறது. இந்த ஜில்லா தஞ்சாவூரைப் போல அவ்வளவு செழிப்பானதில்லை. வைகைக்கரை ஓரத்தில் நெல், பருத்தி, கேழ்வரகு முதலியவைகள் பயிராகின்றன.

ஜனத்தொகை 16,00,500. வழங்கும் பாஷை தமிழ்.

**பட்டணங்கள்:** — இந்த ஜில்லாவின் கலெக்டர், ஜட்ஜ் முதலானவர்கள் மதுரையில் இருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் **இராமநாதபுரம்** தான் பெரிய பட்டணம். இதையே முக்கியபட்டணமாக்க உத்தேசித்திருக்கிறார்கள். இங்கே ஜமீன்தார் வசிக்கிறார். இவருக்கு ஸேதுபதிராஜா என்ற பட்டம் உண்டு. இவர் இங்கே வசிக்கும் மறவர் என்னும் ஜாதியாருடைய தலைவர். **இராமேசுவரம்** இதற்குச் சமீபத்தில் இருர்கிறது. இது ஒரு யாத்திரை ஸ்தலம். இதற்கு இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக யாத்திரை செய்கிறார்கள். **ஸ்ரீவில்லிபுத்தூர்** ஒரு முக்கிய புண்ணிய ஸ்தலம். இங்குள்ள சூட்டிக்கொடுத்த நாச்சியார் அல்லது ஆண்டாள் என்கிற பாகவதியினுடைய தேவாலயம் பெயர்பெற்றது. இதற்கு, சாத்தூர் ரயில்ஸ்டேஷனில் இறங்கிப் போகவேண்டும். சாத்தூருக்கும், ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் மத்தியில் **சிவகாசி** இருக்கிறது. இம்மூன்று பட்டணங்களிலும் ஹை ஸ்கூல்கள் இருக்கின்றன.

வைகைநதியின் கரையிலிருக்கும் **பரமகுடி** சரிகைத்துணிகளுக்குப் பிரசித்திபெற்றது. **விருதுப்பட்டி**யின் பக்கத்தில் பஞ்சு ஏராளமாய்ப் பயிராகிறபடியால் இங்கே பஞ்சு யந்திர சாலை இருக்கிறது. இங்கேயும் ஒரு ஹை ஸ்கூல் இருக்கிறது.

**தேவகோட்டை** நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் இருக்கிற இடம். இவர்கள் வியாபாரத்தில் மிக்க ஊக்கமுள்ளவர்கள். பற்பல தேவாலயங்களைப் புதுப்பித்து இராமேசுவரம் போகும் பிரயாணிகளின் சௌகரியத்துக்காகத் தென்னிந்தியா முழுவதிலும் அங்கங்கே அன்ன சத்திரங்கள் கட்டி வேறு பலவிதமான தருமங்களையும் இவர்கள் செய்து வருகிறார்கள்.

**சிவகங்கை** ஜமீன் இந்த ஜில்லாவிலேதான் இருக்கிறது. இவ்விடத்தில் பித்தளையால் பிரதிமைகள் செய்துகொண்டிருந்தார்கள். பூமி செழிப்புள்ளது. சிவகங்கையிலும் ஹை ஸ்கூல் ஒன்று இருக்கிறது.

## திருநெல்வேலி ஜில்லா.

இந்த ஜில்லா இராமநாதபுரத்துக்குத் தெற்கே இந்த ராஜதானியின் தென்கோடியில் இருக்கிறது. இதனுடைய விஸ்திரணம் 4,354 சதுரமைல்.

இந்த ஜில்லாவானது மேற்குத்தொடர்ச்சி மலைமுதல் கடல் வரையில் நீண்டுள்ள சமபூமி. இதன் பக்கத்தில் இருக்கிற மேற்குத்தொடர்ச்சி மலை 3,000 அடிமுதல் 5,000 அடிவரையில் உயரமுள்ளது. இதில் உள்ள முக்கியமான குன்றுக்கு அகஸ்தியமலை யென்று பெயர். இங்குள்ள நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி இந்த ஜில்லா வழியாக ஓடி, கடைசியாகக் கடலில் விழுகின்றன. இவற்றுள் முக்கியமான நதி தாம்பிரபரணி. இது பாபநாசம் என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது. இந்த ஜில்லா மொத்தத்தில் தேக சௌக்கியத்துக்கு ஏற்றதென்று சொல்லலாம். சமுத்திரக்கரையில் குறைவாயும் உள்ளேயிருக்கும் மலையடிவாரத்தில் அதிகமாகவும் மழை பெய்கிறது. தாம்பிரபரணியின் ஜலத்தைச் சாகுபடி செய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

முக்கியமான விளைபொருள் நெல். இங்கே உண்டாகும் பருத்தி நல்லதாக இருக்கும். கம்பு, சோளம், ஆமணக்கு முதலியவை விசேஷமாக விளைகின்றன. இந்த ஜில்லாவில் கோயில்பட்டி என்னும் ஊரில் விவசாய அபிவிருத்திக்காக ஓர் இடத்தை ஏற்படுத்தி நூதன முறைகளைக் கற்பிக்கிறார்கள். ஜில்லாவின் தென்பாகம் செம்மணல் பாய்ந்த இடமானதால் பனைமரங்கள் விசேஷமாக உண்டாகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள காடுகளில் தேக்கு, கருங்காலி, வேங்கை முதலிய விலையுயர்ந்த மரங்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாவின் அருகில் கடலில் முத்துச்சிப்பி எடுக்கிறார்கள். சேரமாதேவி, பத்தமடை இந்தக் கிராமங்களில் மிகவும் சிறந்த கோரைப்பாய் நெய்கிறார்கள். அம்பாசமுத்திரத்துக்கடுத்த கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர் ஆகிய இக்கிராமங்களில் மலையாளத்தில் விசேஷமாய் உபயோகப்படும் முண்டுகளை நெய்கிறார்கள். இந்த ஜில்லாவிலுள்ள மாட்டு வண்டிகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கும்.

இங்கேயிருந்து அரிசியும் மிளகாயும் இலங்கைக்கு ஏராளமாய் ஏற்றுமதியாகின்றன.

ஜனத்தொகை 18,00,000. ஜனங்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள். கிறிஸ்தவர்களும் இங்கே மிகுதியாக உண்டு. இங்குள்ள மகம்மதியர்கள் லப்பை ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமிழ் பேசுகிறார்கள்.

தாம்பிரபரணி ஓரத்திலுள்ள **திருநெல்வேலி** இந்த ஜில்லாவின் ஒரு முக்கிய பட்டணம். இங்கே ஒரு சிவாலயம் இருக்கிறது. தாம்பிரபரணியின் கிழக்குக்கரையி லிருந்து இரண்டு மைல் தூரத்தில் பாளையங்கோட்டை என்னும் முக்கிய பட்டணம் இருக்கிறது. திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும் நடுவில் தாம்பிரபரணிககு ஒரு வாராவதி கட்டப்பட்டிருக்கிறது. இதுதான் இந்த இரண்டு பட்டணங்களையும் ஒன்றாகச் சேர்க்கிறது. ஜில்லாவின் முக்கியமான கச்சேரிகள் எல்லாம் பாளையங்கோட்டையில் அமைந்திருக்கின்றன. கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு இது முக்கிய பட்டணம். இங்கே செவிடர்களுக்கும் ஊமைகளுக்கும் கல்வி கற்பிப்பதற்கு ஒரு கலாசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**தூத்துக்குடி** ஒரு துறைமுக நகரம். இங்கே நடக்கும் வியாபார மிகுதியினால் இது சென்னை ராஜதானியின் இரண்டாவது துறைமுகநகரமாக மதிக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து இலங்கைக்குக் கப்பல்கள் தினந்தோறும் ஓடிக்கொண்டிருக்கின்றன. தென்காசிக்கு அடுத்தக்**குற்றாலமும்**, **அம்பாசமுத்திரத்**துக்கு அடுத்த **பாபநாசமும்** சிறந்த சிவஸ்தலங்கள்.

மேலே சொல்லப்பட்ட **பத்தமடை**, **அம்பாசமுத்திரம்**, **கோபாலசமுத்திரம்** ஊர்களில் ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. தாம்பிரபரணியாற்றின் கரையில், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி என்ற விஷ்ணு ஸ்தலங்கள் இருக்கின்றன. இங்கேயும் ஸெகெண்டரி பாடசாலைகள் இருக்கின்றன.

**மெய்ஞ்ஞானபுரமும்**, **நாஸரத்தும்** கிறிஸ்தவ கிராமங்கள். ஒரு ஸெகண்டரி பாடசாலையும், பெண்களுக்காக ஒரு ஹைஸ்கூலும், இரண்டு போதனமுறைக் கலாசாலைகளும், இரண்டு சித்திர கலாசாலைகளும் இருக்கின்றன.


# மேற்குக்கடல் ஓரத்திலிருக்கும் ஜில்லாக்கள்

## 1. மலையாளம் ஜில்லா.

இதுவரையில் சொன்ன ஜில்லாக்களுக்குக் கிழக்கே சமுத்திரம் இருப்பதுபோல் மலையாளம் ஜில்லாவுக்கு மேற்கே சமுத்திரமிருக்கிறது. இதன் வடக்கேதான் தென்கன்னடம் ஜில்லா இருக்கிறது. படத்தைப்பார்த்து இந்த ஜில்லாவுக்குக் கிழக்கு எல்லை இன்னதென்று சொல்லுக. இதன் விஸ்தீரணம் 5,800 சதுரமைல்.

இந்த ஜில்லாவின் அகலம் வடக்கே 20 மைலும் தெற்கே 60 மைலும் இருக்கிறது. கடலோரத்தில் இந்த ஜில்லாவின் விஸ்தீரணம் 150 சதுர மைல் இருக்கும்; லட்சத்தீவு என்பது இதனுடன் சேர்ந்திருக்கிறது. இந்த ஜில்லாவில் மேற்குத் தொடர்ச்சிமலை இருக்கிறது. இம்மலையானது சிலவிடங்களில் 3,000 அடியும் சில விடங்களில் 8,000 அடியும் உயர்ந்திருக்கிறது. இந்த ஜில்லாவின் கிழக்கெல்லை மத்தியில் நீலகிரி இருக்கிறது. நீலகிரிக்குத் தெற்கேயுள்ள பாலக்காட்டுக் கணவாய் இந்த ஜில்லாவைச் சேர்ந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையின்மீதுள்ள பீடபூமிக்கு வயநாடு என்று பெயர். இது சராசரி 3,000 அடி உயரமிருக்கும். படத்தைச் சரியாகப் பார்த்தால் இது மைசூர் பீடபூமியின் ஒரு பாகமாகத் தோன்றும். இந்த ஜில்லாவில் முக்கியமான நதி பொன்னணி. இது மேற்கேயிருக்கும் ஆனைமலையில் உற்பத்தியாகிப் பாலக்காட்டுக் கணவாய் வழியாய் ஓடி, பொன்னணி என்னும் துறைமுகப்பட்டணத்தில் கடலோடு கலக்கின்றது இது பெரிய நதியானபோதிலும் முக்கியமான நதி வெய்யூர் என்பது. கடலோரமாய் அமைந்திருக்கிற தொடர்ச்சியான கழிகளுக்கும் கடலுக்கும் இடையில் நீண்ட அகலமற்ற நிலவெளி இருக்கிறது. இதன் அகலம் எவ்விடத்திலும் கால் மைலுக்கு மேல் இல்லை.

இந்த ஜில்லாவின் நிலம் ஈரமானது; ஆயினும் தேகத்துக்கு ஆரோக்கியமான பிரதேசந்தான். ஆனால் மலை அடிவாரத்திலும் வயநாட்டுப் பீடபூமியிலும் பிப்ரவரிமாதம் முதல்



FORT ST. ANGELS, CANNANORE.—கண்ணனூரிலுள்ள ஸெண்ட் என்ஜெல்ஸ் கோட்டை.

ஜூன் வரையில் ஜனங்களுக்கு ஜ்வரம் வருவதுண்டு. இந்த ஜில்லாவில் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் மழை அதிகமாகப் பெய்கிறது. இங்கே பெய்வதுபோல் கிழக்குக் கடல் ஓரத்திலிருக்கும் ஜில்லாக்களில் அதிகமான மழை பெய்யாது. சிலவிடங்களில் 150 அங்குலம் பெய்வதுண்டு. மேற்குத்தொடர்ச்சி மலையின் மேற்கே மழை அதிகமாகப் பெய்வதற்கு என்ன காரணம்? இம்மலைக்குக் கிழக்கே 20 அங்குலங்கூடப் பெய்வதில்லை. பாலக்காட்டுக் கணவாயின் சமீபத்தில் மலையின் உயரம் குறைந்திருப்பதால் மழை மிகவும் குறைவாக இருக்கிறது. மொத்தத்தில் இந்த ஜில்லாவில் சராசரி வருஷத்தில் 116 அங்குலம் மழை உண்டு. இதனால் தான் இங்கே பஞ்சமில்லை.

முக்கிய விளைபொருள் நெல். காப்பிக்கொட்டை வயநாடு தாலுகாவிலும், மிளகும் இஞ்சியும் மற்ற இடங்களிலுள்ள பல தோட்டங்களிலும் உண்டாகின்றன. கடற்கரையில் உள்ள இடம் மணல் பாய்ந்த இடமானதால் எண்ணிறந்த தென்னந்தோப்புகள் அங்கே யிருக்கின்றன. இங்கேயுள்ள காடுகள் வெகு விஸ்தாரமாயும் மிக்க பலன் தரத்தக்கனவாயுமிருக்கின்றன. தேக்கு, பலா முதலிய மரங்கள் ஏராளமாகப் பயிராகின்றன. **கள்ளிக்கோட்டை** என்னும் பட்டணம் கைத்தொழிலுக்குப் பிரசித்தியாயிருந்தது. காலிகோ என்னும் துணி முன்னாளில் இங்கேதான் நெய்யப்பட்டு வந்தது. **கள்ளிக்கோட்டையிலும் கண்ணனூரிலும்** இப்போது சட்டைத்துணிகள் நெய்கிறார்கள்.

ஜனத்தொகை 30,00,000. இதில் ஏறக்குறைய முக்காற்பங்கு ஜனங்கள் ஹிந்துக்கள்; மற்றவர் விசேஷமாய் மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் ஆவார்கள். இங்குள்ள மகம்மதியர்களுக்கு மாப்பிள்ளைகள் என்று பெயர். பிராமணர்களுக்கு நம்பூரிகள் என்று பெயர். சூத்திரர்களில் மேற்குலத்தாருக்கு நாயர்கள் என்று பெயர். பஞ்சமகுலத்தாரைத் தீயர் என்று சொல்லுவார்கள். மலையாளிகள் நடை உடை பாவனைகளில் மற்ற ஹிந்துக்களுக்குப் பலவிதங்களில் வேறுபட்டிருக்கிறார்கள். நம்பூரிமார்களில் மூத்தகுமாரன்மாத்திரம் கலியாணம் செய்துகொள்ளவும் குடும்ப சொத்தை அடையவுங்கூடும்; மற்றக் குமாரர்களுக்கு இவ்விதமான பாத்தியதை இல்லை.

மற்றப் பிராமணர்களுடைய வழக்கத்துக்கு நேர்விரோதமாக, இவர்கள் பெண்களில் சிலர் வெகுகாலம்வரையிலும், சிலர் ஆயுள்நாள் முழுவதும் விவாகம் செய்துகொள்ளாமலே இருந்துவிடுகிறார்கள். நாயர்மாரில் ஸ்திரீகளுக்கு விசேஷ கௌரவமுண்டு. இந்த நாட்டில் ஒருவன் சொத்துக்குப் பாத்தியஸ்தர்கள் அவன் சொந்தப் பிள்ளைகளல்ல; அவனுடைய சகோதரியின் பிள்ளைகளே அவனுக்கு உத்தரக்கிரியை செய்து அவன் சொத்தையடையும் பாத்தியமுள்ளவர்கள். மற்ற இடங்களிலுள்ள ஹிந்துக்கள் தலைக்குப் பின்புறம் குடுமி வைத்திருக்க, இந்நாட்டிலுள்ளவர்கள் தலையின் உச்சியில் குடுமிவைத்து அதை நெற்றியில் தொங்கும்படி விடுகிறார்கள். இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை மலையாளம்.


பட்டணங்கள் : — இந்த ஜில்லாவில் பல பட்டணங்கள் உண்டு. இவைகளில் முக்கியமானது **கள்ளிக்கோட்டை.** இது முற்காலத்தில் ஸாமொரின் ராஜ்யத்தின் ராஜதானியாயிருந்தது. இது பெரிய துறைமுகப்பட்டணம். இங்கிருந்து காப்பிக்கொட்டை ஏற்றுமதியாகிறது. மரங்களை அறுக்கும் யந்திரங்களும் ஓடு செய்கிற யந்திரங்களும் இங்கே உண்டு. கள்ளிக்கோட்டைக்கு வடக்கிலுள்ள தலைச்சேரியானது வடமலையாளத்தின் ஜில்லா ஜட்ஜ் வசிக்குமிடம். இதுவும் ஒரு துறைமுகப்பட்டணம்; இங்கிருந்து மிளகும் காப்பிக்கொட்டையும் இஞ்சியும் ஏற்றுமதியாகின்றன.

தலைச்சேரிக்கு வடக்கிலிருக்கும் துறைமுகநகரமாகிய **கண்ணனூர்** சிறந்த ராணுவஸ்தலம். உள்நாட்டுப் பட்டணங்களில் பாலக்காடு, ஒரு பெரிய பட்டணம். இங்கே கோரைப்பாய் நெய்கிறார்கள். இது மரத்துக்கு மிகவும் பெயர் பெற்றது.

## 2. தென்கன்னடம் ஜில்லா.

படத்தைப்பார்த்து இந்த ஜில்லாவின் எல்லைகளைச் சொல்லுக. இதனுடைய விஸ்தீரணம் 4,021 சதுரமைல்.

மலையின்மேல் பெய்கிற மழையினால் அநேக பள்ளத்தாக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே உள்ள ஆறுகளில் ஒன்றாவது நூறு மைலுக்கு மேற்பட்டில்லை. இவைகளில் முக்



JAIN STATUE OF GUMTARAJ.

கும்தராஜ் என்னும் ஜைன விக்கிரகம்.

கியமானது நேத்திராவதி. மலையாளம் ஜில்லாவைப்போல் நதிகளின் முகத்துவாரங்களில் தொடர்ச்சியான கழிகள் ஏற்பட்டிருக்கின்றன. சீதோஷ்ணஸ்திதியும் அதைப்போலவே இருக்கிறது. உள்நாட்டில் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில வெயில் அதிகம். கோடைக்காலத்தில் மழை ஏராளமாகப் பெய்கிறது. மலையின் நடுவிலுள்ள பள்ளத்தாக்குகள் செழிப்பானவை. விவசாயத்துக்கு வேண்டிய சௌகரியங்கள் இருப்பதால் அது நன்றாக நடக்கிறது. நெல் அதிகமாக விளைகிறது. கடற்கரையில் உள்ள இடம் மணலாக இருப்பதால் தென்னந்தோப்புகள் அங்கே அதிகம் உண்டு

உள்நாட்டில் பாக்குமரம் செழிப்பாய் வளர்கின்றது. பசுக்கள் மிகவும் குறைவாக உள்ளன. காடுகள் ஏராளமாக உண்டு. அங்கே தேக்கு, கருங்காலி, பலா முதலிய உயர்ந்த மரங்களிருக்கின்றன. நேத்திரவாதியின் கரையிலுள்ள களிமண்ணை ஓடு செய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். மங்களூரிலும் உடுப்பியின் பக்கத்திலும் ஏராளமாக ஓடு செய்கிறார்கள். இதன் சமீபத்தில் அமந்தீவி தீவில் தேங்காய் நாரினால் பலவிதமான வேலைசெய்கிறார்கள். காப்பி, தேங்காய், கொப்பரை, அரிசி, வாசனைத்திரவியங்கள், மரம் முதலியவை இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. மங்களூர் முக்கிய துறைமுகப்பட்டணம். நேத்திராவதியும் இன்னொரு நதியும் ஐந்து மைல் அகலம் வியாபித்திருக்கின்றன. இங்கே பேஸல் மிஷன் கிறிஸ்தவர்களும் வேறு கிறிஸ்தவர்களும் வித்தியாசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஜில்லாவுக்கு முக்கியபட்டணம் மங்களூர். இது மேற்குக்கரையில் தென்னிந்தியா இருப்புப்பாதை முடியுமிடம். இந்த ஜில்லாவில் வேறு பெரிய பட்டணங்களில்லை.


உடுப்பி ஸ்ரீகிருஷ்ணன் கோவிலுக்குப் பிரசித்தியானது. மத்வாசாரியர் இக்கோவிலைக் கட்டினவர்.

குந்தாபுரம் சப்கலெக்டர் வசிக்குமிடம்.

## உள்நாட்டு ஜில்லாக்கள்.

மேலே சொல்லப்பட்ட ஜில்லாக்கள் கடலோரத்திலிருக்கின்றன. உள்நாட்டு ஜில்லாக்களுக்கும் சமுத்திரத்திற்கும் தூரம் அதிகம். இந்த உள்நாட்டு ஜில்லாக்கள் மைசூர் பீடபூமியைச் சுற்றி இருக்கின்றன. கடற்கரை ஓரமாய் இருக்கும் ஜில்லாக்களுக்கும் உள்நாட்டிலுள்ள ஜில்லாக்களுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. உள்நாட்டு ஜில்லாவின் பீடபூமி சமுத்திரமட்டத்திற்கு அதிக உயரத்தில் இருக்கிறது. பள்ளத்தாக்குகள் அங்கங்கே இருக்கின்றன நீலகிரி ஜில்லா மைசூர் பீடபூமிக்கு நேர் தெற்கேயிருக்கிறது. சேலம், கோயம்புத்தூர் இவ்விரண்டு ஜில்லாக்களும் மைசூர் பீடபூமி

# மத்தியதேசம்



மைல் காட்டும் ஸ்கேல்
20 10 0 20 40 60 80 100
76°
80°
12°
அரபிக்கடல்
வங்காளக்குடாக்கடல்
தென்காணடகம்
வடகாணடதேசம்
நேத்திராவதி
மேற்குமலைத்தொடர்
கிழக்குமலைத்தொடர்
பாலாறு
தென்பெண்ணை
ஜவ்வாதுமலை
சேர்வராயமலை
பசைமலை
வெள்ளாறு
கொள்ளிடம்
காவேரி
நீலகிரி
பொன்னனி ஆறு
நொய்யல் ஆறு
அமராவதி
ஆனைமலை
கோடைக்கானல் சிகரம்
ரங்கம்
பிளிகிரி
600
2000
6000
Emery Walker sc.


யின் தென்கிழக்கே இருக்கின்றன. இவ்விரு ஜில்லாக்களுக்கும், இராமநாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கும் நடுவில் திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்கள் இருக்கின்றன. கோயம்புத்தூரும், சேலமும் விசேஷமாய மேட்டுப் பூமியாகவும் திருச்சிராப்பள்ளியும், மதுரையும் பள்ளத்தாக்காகவும் இருக்கின்றன. மைசூர் பீடபூமிக்கு நேர்கிழக்கில் சித்தூர், வடஆற்காடு என்னும் ஜில்லாக்கள் இருக்கின்றன. இயற்கையமைப்பை யனுசரித்துப் பார்த்தால் சித்தூர் ஜில்லா மைசூர் பீடபூமியைச் சேர்ந்ததாய்க் காணப்படும். வடஆற்காடு ஜில்லாவின் கிழக்கிலும் தெற்கிலும் செங்கற்பட்டும், தென்னாற்காடும் இருக்கின்றன.

பல்லாரி, அனந்தபுரம் ஜில்லாக்கள் மைசூர் பீடபூமியின் வடக்கிலும் வடகிழக்கிலும் இருக்கின்றன. இவைகளுக்கும் கடற்கரை ஜில்லாவாகிய நெல்லூருக்கும் இடையில் கடப்பை, கர்நூல் என்னும் ஜில்லாக்களிருக்கின்றன. மைசூர் பீடபூமியைச் சுற்றியிருக்கிற ஜில்லாக்களைச் சொல்லுக. கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் ஆகிய இந்த ஜில்லாக்களுக்கு மொத்தமாய் என்ன பெயரிட்டிருக்கிறார்கள் ? இவைகள் மைசூரைப்போன்ற பீடபூமி.

## 1. நீலகிரி ஜில்லா.

மலைகளின் நடுவேயிருக்கும் ஜில்லா நீலகிரி. இது மலைநாடு. இந்த ராஜதானியிலுள்ள ஜில்லாக்களில் இது மிகச் சிறியது. இதன் விஸ்தீரணம 1,009 சதுரமைல்.

இந்த ஜில்லாவானது கிழக்குத்தொடர்ச்சி மலையும் மேற்குத்தொடர்ச்சி மலையும் சேருமிடத்தில் இருக்கிறது. இதன் உச்சியை ஒரு சிறிய பீடபூமி என்று சொல்லலாம். இதன் உயரம் சராசரி 6,500 அடியிருக்கும். இதில் உன்னதமான சிகரங்கள் உண்டு. இவைகளில முக்கியமானது தொடபெட்டா; இதன் உயரம் 8,642 அடி. வயநாடு பீடபூமிக்கு இந்த ஜில்லா பீடபூமி தாழ்வானதன்று. இதன் உயரம் 3,000 அடி. தென்மேற்குப் பாகத்தில் குண்டா என்னும் மலைவரிசை இருக்கிறது. அதில் மாயாறு என்னும் நதி உற்பத்தியாகி வடக்கே ஓடி, காவேரியின் உபநதியாகிய பவானியில் கலக்கிறது.




OOTACAMUND SHOWING ELK HILL.—உதகமண்டலத்திலுள்ள எல்க் குன்று.

• இந்த ஜில்லா ஐரோப்பியர்களுக்கு ஆரோக்கியமுள்ளது. இங்கே சீதோஷ்ணஸ்திதி சீமையைப்போல் இருக்கும். ஆகையால் உதகமண்டலம், குன்னூர், வெல்லிங்

டன், கோடைகிரி (Kotagiri) முதலிய இடங்களில் அநேகர் வீடுகள் கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். இவ்விடங்களில் உன்னதமானது உதகமண்டலம். தேக சௌக்கியத்துக்காகக் கோடைக்காலத்தில் சமநிலங்களில் வசிக்கிறவர்கள் மேற்படி இடங்களுக்குப் போகிறார்கள். நம்முடைய ராஜாங்கத் தலைவரான கவர்னரும் வேறு சில உத்தியோகஸ்தர்களும் வருஷத்தில் ஆறுமாதகாலம் இங்கே வசிக்கிறார்கள். வெயில் என்பது இங்கே தெரியாது. இராத்திரிகாலத்தில் குளிர் அதிகம். குளிர்காலத்தில் இரவில் ஜலம் பனிக்கட்டியாக மாறும். இங்கே பெய்யும் மழை கிட்டத்தட்ட வருஷத்தில் 65 அங்குலம் இருக்கும். வயநாட்டை அடுத்த பீடபூமியில் வருஷத்தில் 160 அங்குலத்திற்குக் குறையாமல் மழை பெய்யும். இந்த மலைநாட்டில் காப்பி, தேயிலை, சிங்கோனா ஆகிய இவைகள் விசேஷமாக விளைகின்றன. இவையல்லாமல் கோதுமை, கேழ்வரகு, பார்லி இவைகளும் கொஞ்சமாக விளைகின்றன. நெல் விளைவு குறைவாக இருக்கும். இங்கே வளரும் செடிகள் கீழ்நிலங்களில் உண்டாகிறவைகள் போலிரா. இந்த மரங்களில் முக்கியமானவை சிங்கோனா செடியும், யுக்லெப்டிஸ் செடியும். சிங்கோனாவிலிருந்து நடுவட்டம் என்னும் கிராமத்தில் கொயினா என்னும் மருந்தை எடுத்து, துரைத்தனத்தார் மிகவும் குறைந்தவிலைக்கு விற்கிறார்கள். யுக்லெப்டிஸிலிருந்து வைத்தியத்துக்கு ஏற்ற ஒரு தைலம் செய்கிறார்கள். இங்கே உருளைக்கிழங்கு வெகு செழிப்பாய் விளைகிறது. பசுக்கள் அதிகமாய் இல்லை. இங்கே வசிக்கும் காட்டு ஜாதியாராகிய தோடர்கள் எருமைகளை வளர்க்கிறார்கள். இவைகள் பால் நிறையக் கொடுக்கும். இவைகளுடைய கொம்பு அகன்று வளைந்திருக்கும். இங்கே காடுகள் ஏராளமாக உண்டு. காடுகளில் தேக்கு, மூங்கில், சந்தனமரம் இவை அதிகமாக வளர்கின்றன. இம்மலைகளில் உலோகங்கள் அதிகமாக உண்டென்று சொல்லுகிறார்கள். இந்த ஜில்லாவில் 4 அல்லது 5 இடங்களில் சாராயம் (Beer) செய்கிறார்கள். அடிவாரத்திலுள்ள மேட்டுப்பாளையத்திலிருந்து மலைக்கு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது.

ஜில்லாவின் ஜனத்தொகை 1,18,000. அநேகர் ஹிந்துக்கள். பிராமணர்களின் தொகை மிகவும் குறைவு. தோடர்,




தோடர்கள்.

பாடகர் என்பவர்கள் இந்த ஜில்லாவைத்தவிர வேறு எந்த இடங்களிலும் இல்லை. இவர்கள் ஆசாரம், மதம் முதலியவற்றில் ஹிந்துக்களைப்போலில்லை. இவர்களே மலைநாட்டில் வாசம்செய்து ஆண்டுவந்தவர்கள். குன்னூர் பார்ப்பதற்கு மிக அழகாயிருக்கும். இது சுதேசியர்களுக்கு மிகவும் ஆரோக்கியமான இடம். கோடைகிரி என்பதும் ஆரோக்கியமான இடந்தான். உதகமண்டலத்தைச்சுற்றி நான்கு மலைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகிய எல்க் மலையை 95-ஆம் பக்கத்தில் பார்க்கலாம். அதைப் பார்த்தால் நீலகிரி இம்மாதிரியிருக்கிறது என்று தெரியவரும். மலைச்சரிவுகளில் கட்டியிருக்கும் வீடுகளையும் பார்க்கலாம்.

## 2. கோயம்புத்தூர் ஜில்லா.

இந்த ஜில்லா நீலகிரி, மலையாளம் ஜில்லாக்களுக்குக் கிழக்கே இருக்கிறது. இதன் விஸ்தீரணம் 7,196 சதுர மைல். நீங்கிரி என்னும் மலை இந்த ஜில்லாவுக்கும் மலையாளம் ஜில்லாவுக்கும் மத்தியிலிருக்கிறது. ஆனைமலை ஜில்லாவின் தென்மேற்கில் இருக்கிறது. கோயம்புத்தூருக்கும் மைசூ



AGRICULTURAL COLLEGE, COIMBATORE.—கோயம்புத்தூரிலுள்ள கிருஷித்தொழில் கலாசாலை.

ருக்கும் மத்தியில் 11 மைல் விஸ்தீரணமுள்ள பிளகிரி ரங்கன் மலை என்னும் ஒரு மலை இருக்கிறது.

இம்மலை கிழக்குத்தொடர்ச்சி மலையின் தென்கோடியி லுள்ளது. இம்மலைக்கு அடுத்தபாகம் பீடபூமி; இப்பீட பூமியில் கொள்ளேகால் என்பது மிகவும் உயர்ந்த பாகம். இது காவேரி நதிக்கரையிலிருக்கிறது. ஜில்லாவின் மத்திய பாகம் சமவெளி. மேற்கிலிருந்து கீழ்ப்பாகம் தாழ்வாக இருக்கிறது.

ஜில்லாவுக்கு வடக்கிலும் கிழக்கிலுமாக ஓடுகிற காவேரி நதியானது இதற்கும் மைசூர் சேலம் ஜில்லாக்களுக்கும் மத்தி எல்லையாக இருக்கிறது. சிவசமுத்திரம் என்பது இந்த ஜில் லாவைச் சேர்ந்தது. இந்த ஜில்லாவில் காவேரிநதியில் கலக் கிற பவானி, நோய்யல், அமராவதி என்னும் மூன்று உபநதி கள் உண்டு.

பவானியில் எப்போதும் ஜலம் இருக்கும் இது மலையா ளம் ஜில்லாவில் உற்பத்தியாகிறது. மேற்கிலிருந்து கிழக்கே ஓடி, பவானி என்னும் பட்டணத்தில் காவேரியோடு கலக் கிறது. நொய்யல்ஆறு மிகவும் சிறியது. வருஷத்தில் கொஞ்ச காலந்தான் இதில் ஜலம் ஓடும். இது நீலகிரி ஜில்லாவில் உற்பத்தியாகிறது. இது கோயம்புத்தூருக்குச் சமீபமாக ஓடிக் காவேரியில் கலக்கிறது. அமராவதி ஆனைமலையில் உற் பத்தியாகிறது. பழனிமலையிற் பெய்கிற மழைஜலம் இதில் விழுந்து ஓடுகிறது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஓடிக் காவேரியில் சேர்கிறது.

இந்த ஜில்லாவின் மலை அடிவாரம் ஜ்வரபூமி. அநேகம் பிரதேசங்கள் தேகத்துக்கு ஆரோக்கியமாயிருக்கும். ஆனை மலையின்மேல் குளிர் மிகவும் அதிகமாயிருக்கும். இதற்கு என்ன காரணம்? கொள்ளேகாலில் குளிர் அதிகமாக இராது. இந்த ஜில்லாவில் இவ்வளவு ஆரோக்கியமான இடம் வேறு இல்லை.

இந்த ஜில்லாவில் சராசரி 26 அங்குலம் மழை பெய்கி றது. பள்ளத்தாக்கில் மழை மிகவும் கொஞ்சம். கொள்ளே கால் உயரமாயிருக்கிறபடியால் கோடைக்காலத்தில் அங்கே மழை அதிகம். காவேரியின் ஜலம் சில பாகங்களில் விவசா

யத்துக்கு உபயோகப்படுகிறது. அமராவதியின்மேல் அணை கட்டி விசேஷமாக அதன் ஜலத்தைப் பாய்ச்சலுக்கு வருஷந் தோறும் உபயோகப்படுத்துகிறார்கள். பவானி நதியின்மேல் இரண்டு நிரந்தரமான அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவில் அநேகம் ஏரிகளும் கிணறுகளும் உண்டு. இவைகளே நீர்ப்பாய்ச்சலுக்கு ஆதாரமானவை.

கம்பு, சோளம் இவை விசேஷமாகவும் அடுத்தபடியாக, துவரை கேழ்வரகு முதலியனவும் பயிராகின்றன. நெல் விளைகிற இடம் கொஞ்சம். சில இடங்களில் பருத்தியும் கரும்பும் உண்டாகின்றன. புகையிலை அநேகமாக ஜில்லா முழுவதும் பயிராகிறது. மலைநாட்டில் காப்பி பயிராகிறது. கொள்ளேகால் பட்டுக்குப் பிரசித்திபெற்றது. பட்டுப்பூச்சிக்கு ஆதாரமான முசுக்கட்டை (மல்பெரி) என்னும் செடி இங்கேதான் பயிராகிறது.

காடுகள் விசேஷமாக உண்டு. அங்கே யானைகள் அதிகமாக உள்ளன. மாடுகள் மேய்வதற்கும் இந்தக் காடுகள் உபயோகப்படுகின்றன. தேக்கு, சந்தனமரம், செம்மரம் முதலிய விலையுயர்ந்த மரங்கள் ஏராளமாய் விளைவதல்லாமல், ஆவாரம்பட்டை, கடுக்காய், தேன், மெழுகு இவைகளும் அகப்படுகின்றன. விவசாயக் கல்வி கற்பதற்காக ஒரு கலாசாலையும் காட்டுவிஷயமான கல்வி கற்பதற்கு ஒரு கலாசாலையும் இங்கே உள்ளன.

இந்த ஜில்லா ஆடுமாடுகளுக்குப் பிரசித்தியானது. காங்கயம் பசுக்களைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். திருப்பூரிலும் அதன் சுற்றுப்பக்கங்களிலும் குதிரைகளை வளர்க்கிறார்கள். வருஷந்தோறும் இங்கே குதிரைச்சந்தை நடக்கும். குறும்பாடும், செம்மறியாடும் வளர்க்கப்படுகின்றன. குறும்பாட்டுக்கு முகம் கறுப்பாயிருக்கும். செம்மறியாட்டை மாமிசத்துக்குமாத்திரம் உபயோகப்படுத்துகிறார்கள். இரும்பு அங்கங்கே கொஞ்சம் அகப்படுகிறது. பொட்டியுப்பும் சில இடங்களில் அகப்படும்; அதை எருவாக உபயோகப்படுத்துகிறார்கள்.

நெசவுத்தொழில் ஜில்லாவில் மிகுதியாக நடக்கிறது. கொள்ளேகாலில் பட்டுத்துணியும், பவானியில் ஜமக்காளமும்

நெய்கிறார்கள். கோயம்புத்தூரில் துணிநெய்யும் யந்திரசாலைகள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் தோல் வியாபாரம் அதிகம். இதற்கு என்ன காரணம்? கோயம்புத்தூரிலும் மேட்டுப்பாளையத்திலும் தோல் யந்திரசாலைகள் உள்ளன.

ஜனத்தொகை 21,0",000. இந்த ஜில்லாவின் வடபாகத்தில் கன்னடமும் மற்ற இடங்களில் தமிழும் வழங்குகின்றன. தெலுங்கு பாஷையும் அநேக கிராமங்களில் பேசப்படுகின்றது.

பட்டணங்கள் :— ஜில்லாவின் முக்கிய பட்டணம் கோயம்புத்தூர். இது தேகத்திற்கு மிகவும் சௌக்கியமுள்ளது. நீலகிரி ஒரு பக்கமும் ஆனைமலை மற்றொரு பக்கமும் இருப்பதால் இது பார்ப்பதற்கு அழகாயிருக்கும். இங்கே தோலைப் பதனிட்டு அநேகவிதமான சாமான்களைச் செய்கிறார்கள். காப்பியைச் சுத்தம் செய்வதற்கும் பொடி பண்ணுவதற்கும் இங்கே யந்திரசாலைகள் இருக்கின்றன. ஒரு காலேஜும் மூன்று ஹை ஸ்கூல்களும் உண்டு. காலேஜும் அதைச் சேர்ந்த ஹை ஸ்கூலும் இப்போது ஸர்காராரைச் சேர்ந்தது. இதற்குச் சமீபத்தில் ராஜாங்கத்தார் ஏற்படுத்தின விவசாய காலேஜும், காட்டிலாகா காலேஜும் இருக்கும் இடங்களில் சிறு பட்டணங்கள் உண்டாயின.

ஈரோடு :—காவேரிக்குச் சமீபத்திலிருக்கிறது. திருச்சிராப்பள்ளியிலிருந்து வரும் சிறிய இருப்புப்பாதை வண்டித்தொடரும் சென்னையிலிருந்து வரும் பெரிய இருப்புப்பாதை வண்டித்தொடரும் இவ்விடத்தில் சந்திக்கின்றன. இங்கே இரண்டு ஹை ஸ்கூல்கள் உண்டு.

மேட்டுப்பாளையம் :—சென்னபட்டணத்திலிருந்து வருகிற பெரிய புகைவண்டி இங்கே நின்றுவிடுகிறது. இது நீலகிரியின் அடிவாரத்திலிருக்கிறது. குன்னூர், உதகமண்டலம் முதலிய இடங்களுக்குப் போவதற்கு இங்கேதான் சிறிய இருப்புப்பாதை ஆரம்பிக்கிறது.

உடுமலைபேட்டை :— பருத்தித்துணி வியாபாரத்திற்கு இது பிரசித்திபெற்றது. இங்கே வியாபாரிகள் அநேகர் இருக்கிறார்கள். காவேரியும் பவானியும் சேருகிற இடத்தில் இருக்

கும் பவானி நகரத்தில் சங்கமேசுவரர் கோயில் மிக்க பெயர் பெற்றது.

திருப்பூர் :—பவானி தாலூகாவில் நொய்யலாற்றின் மேலிருக்கிறது. இங்கே மிளகாய், பருத்தி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவை விசேஷமாய்ப் பயிராகின்றன. பித்தளைப் பாத்திரங்களும் தாம்பிரப் பாத்திரங்களும் அதிகமாய்ச் செய்யப்படுகின்றன. இதன் அருகில் அவிநாசி என்னும் கிராமத்தில் ஒரு பெரிய தேவாலயம் உண்டு.

கோபிசெட்டி பாளையம் : இது ஈரோட்டிற்கு 23 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ஜில்லாவுக்குள்ள நன்செய் நிலங்கள் இங்கேதான் இருக்கின்றன. இங்கே இருக்கும் குடிகள் பணக்காரர்கள். ஒரு ஹை ஸ்கூல் இங்கே உண்டு.

போத்தனூர் :—இது கோயம்புத்தூருக்கு 4 மைல் தூரத்திலிருக்கும் ஒரு ரயில்வே ஜங்க்ஷன். வெற்றிலையும்வேர்க்கடலையும் முக்கிய விளைபொருள்கள். இதற்கு 7 மைலில் பேரூர் என்கிற சிறந்த சிவஸ்தலம் இருக்கிறது. இதற்கு மேலைச்சிதம்பரம் என்றும் பெயர். இங்கே மார்கழி மாதத்தில் வருஷந்தோறும் உத்ஸவம் நடக்கும்.

போத்தனூரிலிருந்து பொள்ளாச்சிக்கு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது இது ஒரு பெரிய வர்த்தகஸ்தலம். இங்கே. ஸெகண்டரி பாடசாலை ஒன்று இருக்கிறது. பொள்ளாச்சியிலிருந்து உடுமலைப்பேட்டை என்கிற பட்டணத்திற்கு மோடார்வண்டி போகிறது.

தாராபுரம் :—இது திருப்பூர் ரயில் ஸ்டேஷனுக்கு 30 மைலில் அமராவதிக் கரையில் இருக்கிறது. இதுவும் ஒரு பெரிய வர்த்தகஸ்தலம். இங்கே ஒரு ஹை ஸ்கூல் இருக்கிறது

## 3. சேலம் ஜில்லா.

சேலம் ஜில்லாவைச் சுற்றி மைசூர் ராஜ்யமும், வடஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் இந்த ஜில்லாக்களும் இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 6,830 சதுரமைல்.

இந்த ஜில்லாவின் வடபாகம் மைசூர் பீடபூமியைச் சேர்ந்தது. தென்பாகம் கர்நாடக சமவெளியைப்போன்றது.

மைசூர் பீடபூமியைச் சேர்ந்த பாலகாட் மிகவும் உயர்ந்த பிரதேசம். இதன் உயரம் 3,000 அடி. அதற்குத் தாழ்ந்த பிரதேசத்துக்கு, பாரமகால் என்று பெயர். இங்கே பள்ளத் தாக்குகள் இருக்கின்றன. ஜில்லாவின் மத்தியில் தென் கிழக்கு மூலையிலிருந்து வடமேற்காக மலைகள் ஓடுகின்றன. இதன் அடியிலேதான் பாலகாட் இருக்கிறது. அங்கே நாமக்கல், திருச்செங்கோடு, சங்கதுர்க்கம் என்கிற மலைச் சிகரங்கள் இருக்கின்றன. ஜில்லாவின் மத்தியிலுள்ள மலைக்கு, சேர்வராயன்மலை என்று பெயர். இதன் பெரிய சிகரம் 5,400 அடி உயரமுள்ளது. இந்தச் சிகரத்திலிருக்கும் பிரதான பட்டணமாகிய ஏற்காட்டில் ஐரோப்பியர்கள் சௌக்கியத்துக்காக வசிக்கிறார்கள். ஜில்லாவின் வடகிழக்கிலுள்ள மலைக்கு ஜவ்வாதுமலை என்று பெயர்.

முக்கியநதி காவேரி. இது ஜில்லாவின் மேற்கிலும் தெற்கிலும் எல்லையாகக் கோயம்புத்தூருக்கும் இந்த ஜில்லாவுக்கும் மத்தியில் ஓடுகிறது. மைசூரில் உற்பத்தியாகிவருகிற பெண்ணையாறு இந்த ஜில்லாவின் வடபாகத்தில் ஓடி, தென் ஆற்காட்டில் பிரவேசிக்கிறது. வெள்ளாறும் இந்த ஜில்லாவில் ஓடுகிறது.

மைசூர் பீடபூமியைச்சேர்ந்த நாடு தேகத்துக்கு ஆரோக்கியமானது. பள்ளத்தாக்கில் உஷ்ணம் அதிகமாய் இருக்கும். தாழ்ந்த மலைப்பிரதேசத்தில் ஜ்வரம் உண்டாகும். இந்த ஜில்லாவில் மழை அதிகம் இல்லை.

கிணறுகளே ஜில்லாவில் விவசாயத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன. ஏரிகளும் அநேகம் உண்டு. பெண்ணையாற்றின் ஜலம் சாகுபடிக்குச் சிறிது உபயோகப்படுகிறது.

சேர்வராயன்மலையில் காப்பி ஏராளமாய் விளைகிறது. கேழ்வரகும், கம்பும் முக்கிய விளைபொருள்கள். எள்ளும் ஆமணக்கும் சில இடங்களில் பயிராகின்றன. காடுகள் அதிகமாக இருக்கிறபடியால் விவசாயத்துக்கு உபயோகப்படாமல் இருக்கிற நிலம் அதிகம் உண்டு. ஆனால் ஆடுமாடுகள் விசேஷமாய் இருக்கின்றன. மைசூர் பீடபூமியைச்சேர்ந்த ஒசூர் தாலூகாவில் புல் ஏராளமாய் அகப்படுகிறது. ஆனதால் அங்கே பசுக்கள் விசேஷம். குதிரைகளையும் வளர்க்கிறார்கள்.

காடுகளில் சந்தனமரங்கள் விசேஷமாக் வளர்கின்றன. ஜவ்வாது மலையிலும் சந்தனமரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஜில்லாவின் கிழக்கே புளியமரங்கள் உயரமாகவும் செழிப்பாகவும் உண்டாகின்றன. சேலம் மாம்பழத்துக்குப் பேர்பெற்றது. இங்கே மேலான இரும்பு அகப்படுகின்றது. ஆனால் அதைச் சுத்தம்செய்ய விறகு மிகுதியாகவேண்டும். அவைகள் இல்லாமையால் இரும்பு உபயோகப்படாமலிருக்கிறது. ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் கிராமத்திலும் துணி நெய்தல் முக்கிய கைத்தொழிலாக இருக்கிறது. சிறந்த ஜமக்காளம் சேலம் சிறைச்சாலையில் செய்யப்படுகிறது. இப்பட்டணத்தில் செய்யப்படும் வெட்டுக்கருவிகள் தென் இந்தியாவில் மிகவும் சிறந்தவை.

ஜில்லாவின் ஜனத்தொகை 17,66,000. வழங்கும் பாஷை தமிழ். ஆனால் வடக்கே ஓசூர் தாலுகாவில் பெரும்பான்மையோர் கன்னடம் பேசுகிறார்கள்.

**பட்டணங்கள் :** — முக்கியபட்டணம் சேலம். இதைச் சுற்றிச் சேர்வராயன்மலை இருக்கிறது. ஜில்லா உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் இங்கும் இதன் பக்கத்திலும் வசிக்கிறார்கள். இங்கே துணி நெசவு வேலை மிகுதியாய் நடக்கிறது. இங்கே ஒரு முனிஸிபல் காலேஜும் மிஷன் ஹை ஸ்கூலும் உண்டு.

ஓசூர் என்பது பங்களூருக்கு 24 மைல் தூரத்திலிருக்கிறது. ஐரோப்பியர்கள் வசிப்பதற்கு ஏற்ற இடம். இது சில காலம் ஜில்லாவிற்கு முக்கிய பட்டணமாயிருந்தது. இதன் சமீபத்தில் உள்ள கோட்டை திப்பு ஸுல்தானால் கட்டப்பட்டது.

**நாமக்கல் :** — இது இப்போது மறுபடியும் இந்த ஜில்லாவில் சேர்ந்திருக்கிறது. நாமக்கல் மலையடிவாரத்திலுள்ள நாமகிரி அம்மன்கோயில் பிரசித்தமானது. இம்மலை 200 அடி உயர்ந்து பார்வைக்கு வெண்மையாயிருக்கும். இந்த மலையின்மேல் கோட்டை ஒன்று இருக்கிறது. இந்த ஊரில் கமலாலயம் என்னும் குளமும், ஹை ஸ்கூல் ஒன்றும் இருக்கின்றன. நெய் வியாபாரம் விசேஷமாய் நடக்கிறது.

• தர்மபுரி:—இது தர்மபுரி தாலூகாவின் முக்கியபட்டணம். இங்கே நல்லெண்ணெய் விசேஷமாய் அகப்படுகிறது. ஸர் தாமஸ் மன்றோ என்னும் கவர்னர் ஏற்பாடுசெய்த தோட்டமும் குளமும் இங்கே இருக்கின்றன.

கிருஷ்ணகிரி: — திருப்புத்தூரிலிருந்து இந்த ஊருக்கு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. திராக்ஷையும் மாம்பழமும் இங்கே விசேஷம்.

திருச்செங்கோடு:—இது ஒரு பெரிய சிவஸ்தலம்.

## 4. மதுரை ஜில்லா.

இந்த ஜில்லாவுக்கு வடக்கே திருச்சிராப்பள்ளியும் தென்கிழக்கில் இராமநாதபுரமும் மேற்கே திருவாங்கூர் ராஜ்யமும் இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 4,500 சதுரமைல்.

ஜில்லாவில் பெரும்பாகம் சமபூமி. மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பாகமாகிய **பழனிமலை** மேற்குப்பக்கத்தில் இருக்கிறது. இதன் சிகரம் 7,700 அடி. வேறொரு பாகமாகிய கோடைக்கானல் ஐரோப்பியர்கள் வசிப்பதற்குச் சுகமான இடம். இம்மலைத்தொடர்ச்சிக்குக் கிழக்கேயுள்ளது **சிறுமலை.** இதன் உயரம் 3,500 அடி. ஜில்லாவின் பிரதான நதி **வைகையாறு.** இந்த நதியைப்பற்றி இராமநாதபுரத்தில் சொல்லியிருக்கிறோம். இந்நதி இந்த ஜில்லாவில் பிரவேசமாகும் இடமும், ஜில்லாவுக்குள் ஓடுகிற வழிக்கு இரண்டு பக்கங்களிலுமுள்ள இடங்களும் மேட்டுநிலங்கள். இது ஓடும் இடம் முழுவதும் பள்ளத்தாக்காகவுள்ளது. பழனி மலையில் பெய்யும் மழைஜலம் முழுவதும் இந்த நதியில் விழுவதால் ஜலம் இதில் மிகுதியாக உண்டு. ஆனால் வருஷத்தில் சிலகாலந்தான் இதில் ஜலம் இருக்கும். மதுரைக்கு மேற்கே இந்நதிக்கு ஒரு பெரிய அணைகட்டி ஜலத்தைப் பல கால்வாய்களின் வழியாகக் கொண்டுபோய் நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.

• மேற்குத்தொடர்ச்சி மலையின் மேல்பாகத்தில் **பெரியாறு** என்னும் நதி உற்பத்தியாகி அரபிக்கடலில் விழுகிறது. இந்த நதியில் ஒரு பெரிய அணைகட்டி இதிலுள்ள ஜலத்தைக்


குழாய்கள் மூலமாக ஒரு ஏரிக்குக் கொண்டுபோய் ஏரியி லிருந்து ஜலத்தை வைகைநதியில் விடுகிறார்கள். இந்த ஏரி யானது மேற்குத்தொடர்ச்சி மலையின் கிழக்கே உள்ளது. முன்பு வெகுகாலமாகச் சாகுபடியே யில்லாத நிலங்களில் இந்த ஜலம் பாய்ந்து மிக்க செழிப்பை உண்டாக்குகிறது. பாசனவிஷயமாகச் செய்திருக்கும் இந்த ஏற்பாடானது மிக வும் ஆச்சரியப்படத்தக்கது. பெரியாற்றின் பாய்ச்சல்முறை இந்த ஜில்லாவில்தான் இருக்கிறது. சமவெளிப் பிரதேசங் களில் இந்த ஜில்லா உஷ்ணமாயும் வறட்சியாயும் அசௌக் கியமாயும் உள்ளது. இங்கே நல்ல மழை இல்லை.

நெல், சோளம் இவை முக்கியமான விளைபொருள்கள். பருத்தியும், கொள்ளும், ஆமணக்கும் கொஞ்சம் விளைகின் றன. திண்டுக்கல்லில் நல்ல புகையிலை உண்டாகின்றது. பழனிமலையில் காப்பிக்கொட்டையும் ஏலக்காயும் விளைகின் றன. மேய்வதற்குச் சௌகரியங்கள் இருக்கிறபடியால் ஆடு மாடுகளை விசேஷமாய் வளர்க்கிறார்கள். சிறுமலை வாழைப் பழத்திற்குப் பெயர்பெற்றது.

ஜில்லாவில் இரும்பு விசேஷமாக அகப்படுகின்றது. தலைக்குட்டைகளும், சரிகை வஸ்திரங்களும், பட்டுச்சரி கைப் புடைவைகளும் மதுரையிலும் திண்டுக்கல்லிலும் நெய் யப்படுகின்றன. திண்டுக்கல் சுருட்டுக்கும், அழகான வெண் கலப் பாத்திரங்களுக்கும், பித்தளைப் பாத்திரங்களுக்கும் பிரசித்திபெற்றது.

ஜில்லாவின் ஜனத்தொகை 19,30,000. வழங்கும் பாஷை தமிழ்.

பட்டணங்கள்:—ஜில்லாவின் பிரதான பட்டணமாகிய **மதுரை** தென் இந்தியாவின் பெரிய பட்டணங்களில் ஒன்று. ஆதிகாலம் முதல் இது தென்னாட்டில் சிறந்த பட்டணமாயும் அநேக நூற்றாண்டுகளாக, பாண்டிய அரசர்களின் ராஜதானி யாயும் இருந்தது. கஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்ற வசனத்திற்கேற்ப மதுரையிலுள்ள மீனாட் சியம்மை கோயில் இந்தியாவில் மிகவும் பிரசித்திபெற்ற தேவாலயங்களில் ஒன்று. இது 350-அடி அகலமும் 750-அடி



DINDIGUL ROCK—திண்டுக்கல் மலை.

நீளமும் உள்ளது. இதற்கு நான்கு கோபுரங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று 150-அடி உயரமானது. ஆலயத்துக்குள் ஆயிரக்கால் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதில் செய்திருக்கும் சிற்பவேலைகள் மிகவும் அற்புதமானவை. இப்பட்டணத்தில் பார்க்கவேண்டிய வேறொரு கட்டிடம் **திருமலைநாயகன் மால்.** இதை நேரில் பார்த்தாலொழிய இதன் அழகு சொல்லில் அடங்காது. இவையன்றி அழகான தெப்பக்குளம் ஒன்றிருக்கிறது. இக்குளத்தின் நடுவில் உள்ள அழகான நீராழி மண்டபமும் அதைச் சுற்றியிருக்கும் சிறிய தோட்டமும் பார்க்க வெகு ஆனந்தத்தை உண்டாக்கும். இங்கே வருஷத்திற்கொருமுறை லட்சத்தீபம் வைக்கிறார்கள். மதுரைக்கு அருகே மலையடிவாரத்தில் அழகர்கோவில் இருக்கிறது. இம்மலைமேலிருக்கும் அழகர் சன்னிதி பேர்பெற்றது.

**திண்டுக்கல்** பெரிய வர்த்தகஸ்தலம். இங்கிருந்து தோல், காப்பிக்கொட்டை, புகையிலை முதலியன ஏற்றுமதி செய்யப் படுகின்றன. இதில் 1,223 அடி உயரமுள்ள பாறையின்மீது கட்டப்பட்ட கோட்டையொன்று மிகவும் பலமாக உள்ளது.

**கோடைக்கானல்** மலையின்மீதுள்ள பட்டணம்; இதற்கு அம்மைநாயகனூர் ஸ்டேஷனிலிருந்து போகவேண்டும். நீலகிரியைப்போல் கோடைக்கானலில் குளிர் அவ்வளவு அதிகம் இல்லை என்கிற காரணத்தால் உதகமண்டலத்தைவிட இது தேகத்திற்கு ஆரோக்கியமானது என்று சிலர் நினைக்கிறார்கள். இதன் உயரம் எவ்வளவு? உயரத்தில் நீலகிரி பெரியதா, இது பெரியதா?

**போடி நாயகனூர்:**—இப்பெயருள்ள ஜமீனின் பிரதானபட்டணம். தேனியாற்றின்கரையில் உள்ளது. இப்பட்டணம் வரவர விருத்தியடைந்து வருகிறது.

**பெரிய குளம்:**—நீலகிரியின் அடிவாரத்தில் மேட்டுப்பாளையம் இருப்பதுபோல் இம்மலையின் அடிவாரத்தில் **பெரிய குளம்** என்னும் பட்டணம் இருக்கிறது. போடி நாய்கனூருக்கு 15 மைல் தூரத்திலுள்ளது. மிகவும் அழகானபட்டணம். இதிலுள்ள சிவாலயத்தைச்சேர்ந்த திருக்குளம் மிக

வும் பெரியதாகையால் ஊருக்கே பெரியகுளம் என்ற பெயர் வந்தது.

பழனி:—பழனிமலையில் இது முக்கியமான சுப்பிரமணிய ஸ்தலம். இங்கே வர்த்தகம் அதிகமாய் நடக்கிறது.


## 5. திருச்சிராப்பள்ளி ஜில்லா.

இது சேலத்துக்கும் தென் ஆற்காட்டுக்கும் தெற்கே இருக்கிறது. கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் ஜில்லாக்களும் புதுக்கோட்டை ராஜ்யமும் இதைச்சுற்றி இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 4,270 சதுரமைல்.

இந்த ஜில்லாவின் வடமேற்கில் பச்சைமலை இருக்கிறது. தென்மேற்கிலும் சில குன்றுகள் உண்டு. மற்றப் பாகம் சமவெளிப் பிரதேசம். ஜில்லாவின் முக்கிய நதி காவேரி. இது மேற்கிலிருந்து கிழக்குமுகமாக ஓடுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 11—மைல் தூரத்தில் இது இரண்டாகப் பிரிகிறது. பிரிந்தபிறகு வடகிழக்காக, திருச்சிராப்பள்ளிக்கும் தஞ்சாவூருக்கும் மத்தி எல்லையாய் ஓடும் கிளைக்கு கொள்ளிடம் என்று பெயர். மற்றக் கிளையானது தென்கிழக்காய்த் திரும்பித் திருச்சிராப்பள்ளிக்குச் சமீபமாய் ஓடித் தஞ்சாவூர் ஜில்லாவில் அநேகம் பிரிவுகளாகப்பிரிந்து பாய்ந்து கடலில் விழுகிறது. இவ்விரண்டு கிளைநதிகளுக்கும் இடையிலுள்ள தீவிற்கு ஸ்ரீரங்கம் என்று பெயர். வெள்ளாறு இந்த ஜில்லாவிற்கும் தென் ஆற்காட்டுக்கும் இடையில் ஓடுகிறது.

இது சென்னை ராஜதானியிலுள்ள உஷ்ணம் மிகுந்த ஜில்லாக்களில் ஒன்றாக இருந்தாலும் பெரும்பாலும் தேகசௌக்கியமுள்ளதாகவே இருக்கிறது. இங்கே மழை சராசரி வருஷத்தில் 43 அங்குலம் பெய்கிறது. இந்த ஜில்லா நீர்வளமுள்ளது. காவேரியிலும் கொள்ளிடத்திலும் அப்போதைக்கப்போது பிரவாகம் வருகிறது. இந்நதிகளில் அங்கங்கே அணைகள் கட்டி ஜலத்தைக் கால்வாய்களில் திருப்பி, பயிரிடுவதற்கு உபயோகிக்கிறார்கள்.

காவேரியும் கொள்ளிடமும் பாயும் இடங்களில் நெற்பயிர், சோளம், பருத்தி, கேழ்வரகு, புகையிலை, அவுரி முதலிய



THE ROCK AND (THEPPAKULAM) TANK, TRICHINOPOLY.—திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையும் குளமும்.

பயிர்களும் விளைகின்றன. மேட்டுப்பாகங்களில் வேர்க்கடலையைப் பயிரிடுகிறார்கள்.

ஜில்லா ஆடுமாடுகளுக்குப் பேர்போனதன்று. இங்குள்ள காடுகளில் தேக்கும், சந்தனமரமும், மூங்கிலும் சிறிதளவு உண்டாகின்றன. இங்கே உலோகங்கள் விசேஷமாகக் கிடைப்பதில்லை. வைஷ்ணவர்கள் உபயோகிக்கும் நாமக்கட்டி செய்கிற மண் இங்கு விசேஷமாய்க் கிடைக்கிறது.

முக்கியமான கைத்தொழில் துணிநெய்தலும், சுருட்டுச் செய்தலும். சுருட்டுக்கள் செய்வதற்கு வேண்டிய புகையிலை திண்டுக்கல்லிலிருந்து வருகிறது. இந்த ஜில்லாவில் சடையினால் விதம்விதமான பொருள்கள் செய்கிறார்கள்.

ஜில்லாவின் ஜனத்தொகை 18,00,000. வழங்கும் பாஷை தமிழ்.

பட்டணங்கள்:—காவேரியாற்றின் கரையிலுள்ள திருச்சிராப்பள்ளி பிரதான பட்டணமாயும் சரித்திரப் பிரசித்திபெற்றதாயும் இருக்கிறது. எதிர்ப்புக்கத்தில் காணப்படுகிற திருச்சிராப்பள்ளியிலுள்ள மலையானது 275 அடி உயரமுள்ளது. இதன் உச்சியில் ஒரு சிறிய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. இப்பாறை பார்க்க மிக நேர்த்தியாயிருக்கும். இப்பாறையினடியில் ஒரு குளம் இருக்கிறது. இதற்கு, தெப்பக்குளம் என்று பெயர். சென்னபட்டணத்திற்கு அடுத்தபடி இரண்டு கலாசாலைகள் இங்கு பாதிரிமார்களாலும், மற்றொரு கலாசாலை சுதேசஸ்தர்களாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஸெண்ட் ஜோஸப் கலாசாலை பெரியது.

திருச்சிராப்பள்ளிக்கு 2 மைல் வடக்கே உள்ள ஸ்ரீரங்கம் சிறந்த விஷ்ணுஸ்தலம். தென்னிந்தியாவிலுள்ள ஆலயங்கள் எல்லாவற்றிலும் இது மிகவும் பெரியது. இந்தக் கோவிலுக்கு ரங்கநாதர் கோவில் என்று பெயர். இதற்கு அரை மைல் தூரத்தில் ஜம்புகேசுவரர் கோவில் என்னும் பெரிய சிவாலயம் ஒன்று இருக்கிறது.

காவேரியும் அமராவதியும் கூடுமிடத்திற்குச் சமீபத்தில் கீருவூர் (கரூர்) இருக்கிறது. இது ஆலயத்திற்குப் பேர்போனது. இதில் 5 அடி உயரமுள்ள லிங்கம் ஒன்றிருக்கிறது. இதில் கைத்தொழிற் கலாசாலை ஒன்று உண்டு. இங்கு

அநேகம் சாலைகள் கூடுகிறபடியால் இப்பட்டணம் வியாபாரத்திற்கு மிகவும் தகுதியாக இருக்கிறது. இங்கே ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

**குழித்தலை** :—இது காவேரியின் கரையில் இருக்கிறது. இதன் சுற்றுப்பக்கங்களில் நெல் செழிப்பாய்ப் பயிராகிறது. இங்கும் ஒரு ஹைஸ்கூல் உண்டு.

**முசிறி** :—இது காவேரிக்கரையில் குழித்தலைக்கு எதிராக இருக்கிறது. இங்கே தாசில்தார், டிப்டி கலெக்டர் இவர்களுடைய கச்சேரிகள் இருக்கின்றன. லோயர் ஸெகன்டரி பாட்சாலையும் ஒன்று இருக்கிறது.

முசிறி தாலூகாவில் **துறையூர்** பெரிய பட்டணம். இது மலைகளுக் கருகிலிருப்பதால் பார்வைக்கு அழகாயிருக்கும்.

**காட்டுப்புத்தூர், லால்குடி** என்னும் பட்டணங்களில் ஹைஸ்கூல்கள் உண்டு. **உடையார்பாளையம்** ஜமீன்தார் இருக்குமிடம். இங்கே ஜமீன்தாருடைய அரண்மனை பிரசித்தி பெற்றது. இதனருகே **கங்கைகோண்ட சோழபுரம்** என்கிற பட்டணம் பிரசித்திபெற்றது. கங்கைகொண்ட சோழன் அல்லது ராஜேந்திர சோழன் என்னும் அரசன் இதை ஸ்தாபித்தபடியால் இதற்கு இப்பெயர் வந்தது. இவனுடைய பிதாவாகிய ராஜ ராஜ சோழன்தான் தஞ்சாவூரிலிருக்கும் பிரசித்தி பெற்ற ஆலயத்தைக் கட்டினவன். ராஜேந்திர சோழனும் தன் தகப்பன் தஞ்சையில் கட்டிவைத்ததைப்போல் ஒரு தேவாலயத்தைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிவைத்தான். இத்தேவாலயம் மிகவும் பேர்பெற்றது. **அரியலூர்** (இங்கே ஒரு லோயர் ஸெகன்டரி ஸ்கூல் இருக்கிறது). **பெரும்புலியூர்** (பெரம்பலூர்), **சமயபுரம்** இவைகள் இந்த ஜில்லாவில் சரித்திரப்பிரசித்தி பெற்றவைகள்.

## 6. வட ஆற்காடு ஜில்லா.

இதன் விஸ்தீரணம் 4,920 சதுரமைல். பாலாற்றின் கரையில் **ஆற்காடு** என்ற நகரம் இருக்கிறது. அது முற்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற பெரிய பட்டணமாயிருந்தது. வடக்கேயுள்ளதற்கு வட ஆற்காடு ஜில்லா என்றும், தெற்கேயுள்ளதற்குத் தென் ஆற்காடு ஜில்லா என்றும் பெயர்.

• வடஆற்காடு ஜில்லாவிலுள்ள பிரசித்தியான மலைகளில் ஜவ்வாதுமலை தென்மேற்கிலிருக்கிறது. இது சேலம் ஜில்லாவிலும் பரவியிருக்கிறது. இதன் உயரம் 3,000 அடி. இதற்கும் கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் மத்தியிலேதான் பாலாறு ஓடுகிறது.


பாலாற்றின் உபநதியாகிய செய்யாறு என்பது ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி இந்த ஜில்லா வழியாய் ஓடி, செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள வாலாஜாபாத்துக்கு அருகில் பாலாற்றில் கலக்கிறது. செய்யாறு, பாலாறு இவ்விரண்டும் வருஷத்தில் அநேக காலம் நீர் வறண்டிருக்கும். பாலாற்றில் மழைக்காலங்களில் வெள்ளம் அதிகமாக வரும். அதனால் அதன் கரையிலுள்ள ஊர்களுக்கு அபாயம் நேரிடுவதுண்டு. இந்நதிகளில் அணைக்கட்டுகள் கட்டி அவற்றின் ஜலத்தைக் கால்வாய்களில் திருப்பிப் பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள்.

இந்த ஜில்லாவில் அநேகம் பெரிய ஏரிகள் உண்டு. அவற்றுள் மாவண்டூர் ஏரி மிகவும் பெரியது. வருஷம் முழுவதும் ஜலமிருக்கும். கரை இரண்டு மலைகளுக்கு நடுவில் போடப்பட்டிருக்கிறது. இம்மலைகளுள் ஒன்றில் குகைகள் இருக்கின்றன. அநேகம் பெரிய கிணறுகளும் உண்டு.

இந்த ஜில்லாவின் சமவெளிப் பிரதேசத்தில் உஷ்ணம் அதிகமாயும் மேட்டுப் பிரதேசங்களில் மைசூர் பீடபூமியைப் போல் குளிர் அதிகமாயும் இருக்கும். ஜவ்வாதுமலைக்கு அடுத்தபாகத்தில் விஷஜ்வரமுண்டு.

வருஷத்தில் சராசரி 37 அங்குலம் மழை பெய்கிறது. இங்கு நிலம் பெரும்பாலும் செழிப்புள்ளது. செய்யாறு, பாலாறு இவற்றின் பாய்ச்சல்களினால் நெல் விளைகிறது. ஆற்காட்டில் கரும்பைப் பயிரிடுகிறார்கள். மணிலாக்கொட்டை (நிலக்கடலை), கம்பு, கேழ்வரகு, எள்ளு முதலியவைகளும் பயிரிடப்படுகின்றன. ஜவ்வாது மலையில் கஞ்சா பயிரிடப்படுகிறது. அது மயக்கங் கொடுக்கக்கூடிய வஸ்து. குடியாத்தமும், வேலூரும் மாம்பழத்திற்குப் பேர்பெற்றவை.

ஜவ்வாதுமலையில் பெரிய காடுகள் உண்டு. அவற்றில் சந்தனமரம், கருங்காலி, தேக்கு முதலிய விலையுயர்ந்த மரங்



VELLORE FORT.—வேலூர்க் கோட்டை.

கள் உண்டாகின்றன. குடியாத்தம் ஆடுகளுக்குப் பேர்பெற்றது. ஆரணி வஸ்திரங்களுக்குப் பேர்பெற்றது. வேலூரி லுள்ள சிறைச்சாலையில் ஜமக்காளம் நெய்கிறார்கள். வந்தவாசி கோரைப்பாய்க்குப் பேர்பெற்றது. இந்த ஜில்லாவில் தோல் வியாபாரமும் நடக்கிறது. இந்த வியாபாரம் செய்யும் மகம்மதியர்கள் தமிழ் பேசுகிறார்கள். தோல் வியாபாரத்துக்குக் குடியாத்தம் மத்திய ஸ்தானமாயிருக்கிறது. ஜில்லாவின் ஜனத்தொகை 20,000,000.

**பட்டணங்கள்** :—வேலூர் இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இது பாலாற்றின் கரையிலிருக்கிறது. வேலூரில் உள்ள கோட்டையும் அதனுள் இருக்கும் தேவாலயமும் பெயர் பெற்றவை. இக்கோட்டைக்குள் நமது ராஜதானியில் போலீஸ் இன்ஸ்பெக்டர், ஸப் இன்ஸ்பெக்டர் இந்த வேலைகளுக்குப் பழக்கும் ஒரு பாடசாலை இருக்கிறது. வேலூருக்கு நான்கு மைல் தூரத்தில் **காட்பாடி** என்கிற ஒரு பெரிய ரயில்வே ஜங்க்ஷனிருக்கிறது. சென்னையிலிருந்து பங்களூருக்கும் மங்களூருக்கும்போகும் வண்டிகள் இந்த ஜங்க்ஷன் வழியாய்ப் போய், தென்மேற்கே யிருக்கும் ஜோலார் பேட்டை என்கிற ஜங்க்ஷனில் பிரிகின்றன. காட்பாடியிலிருந்து ஒரு கிளை விழுப்புரம் வழியாகப் புதுச்சேரிக்கும், மற்றொன்று சித்தூர் வழியாக ரேணுகுண்டாவுக்கும் போகின்றன. **அரக்கோணம்** ஜங்க்ஷனும் இந்த ஜில்லாவிலேதான் இருக்கிறது.

இந்த ஜில்லாவில் சரித்திரப் பிரசித்தியான பட்டணங்கள் அநேகம் உண்டு. அவற்றுள் முக்கியமானது **ஆற்காடு**. இது கிட்டத்தட்ட நூறு வருஷங்களுக்குமுன் மிகவும் பிரசித்தி பெற்ற கர்நாடக நவாபுகளின் ராஜதானியாயிருந்தது. இந்த நவாபுகளின் சந்ததியார் இப்போதும் சென்னபட்டணத்தில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு ராஜாங்கத்தார் உபகாரச்சம்பளம் கொடுத்துவருகிறார்கள். இந்தியாவில் ஆங்கிலேய அரசாட்சிக்கு அஸ்திவாரம்போட்ட **கிளைவ்** இந்த ஆற்காட்டில் நடந்த சண்டையில்தான் கியாதிபெற்றார். **வந்தவாசி**யில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் அநேக யுத்தங்கள் நடந்தன. **ஆம்பூ**ரானது சேலத்துக்குப் போகும் கணவாயின் தலைப்பிலிருக்கிறது. இக்கணவாயில் அநேக யுத்தங்கள் நடந்

தன. இங்கே நடந்த யுத்தத்தில்தான் ஐரோப்பியர்கள் முதல்முதல் இந்தியாவில் போர்க்களத்தில் நின்று யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள்.

சோலிங்கபுரமும், திருவண்ணுமலையும் புண்ணிய ஸ்தலங்கள். திருவண்ணுமலையில் கார்த்திகை தீபம் விசேஷம்.

வாணியம்பாடியிலும் திருப்புத்தூரிலும் மகம்மதியர்கள் விசேஷமாக உண்டு. பாலாறு வாணியம்பாடியைச் சுற்றி ஓடுகிறது. திருப்புத்தூர் துவரம்பருப்புக்கும் வெல்லத்துக்கும் பேர்பெற்றது. இதில் முனிஸிபல் ஹை ஸ்கூல் ஒன்று இருக்கிறது. வாணியம்பாடியில் மகம்மதியர்கள் விசேஷ பணத்தைச்செலவழித்து ஒரு ஹை ஸ்கூல் கட்டி இருக்கிருர்கள். இதை ஒரு கலாசாலையாக விருத்திபண்ண பிரயத்தனங்கள் நடந்து வருகின்றன.


இந்த ஜில்லாவில் ராணிப்பேட்டையில் மாட்டெலும்பிலிருந்து ரஸாயன உரமானது பாரி அண்டு கம்பெனியாரால் எடுக்கப்படுகிறது.

செய்யாற்றின்கரைக்கு அருகில் உள்ள திருவத்தியூரில் டிப்டி கலெக்டர் கச்சேரி யிருக்கிறது. இங்கே இப்போது பெரிய ஸெகன்டரி ஸ்கூல் ஸ்தாபித்து இருக்கிருர்.

## 7. சித்தூர் ஜில்லா.

ஆரணி:—இது ரயில் ஸ்டேஷனுக்கு சற்று தூரத்திலுள்ளது. இங்கே ஒரு ஹை ஸ்கூல் இருக்கிறது. சரித்திரப் பிரசித்தமான பழைய கோட்டை ஒன்று இங்கே இருக்கிறது.

இதன் விஸ்தீரணம் 5,675 சதுரமைல். கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பாகமாகிய நகரிமலை இந்த ஜில்லாவில் இருக்கிறது. இதன் உயரம் 2,000 அடி. மிகப் பிரசித்தியான திருப்பதிமலையும் கிழக்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பாகந்தான். இம்மலைகளுக்கு இடையிலுள்ள கணவாய் ஒன்று கடப்பை ஜில்லாவுக்குப் போகிறது. இதன் வழியாய்த்தான் சென்னையிலிருந்து பம்பாய்க்கு இருப்புப்பாதை செல்லுகிறது. இந்த ஜில்லாவில் மைசூர் பீடபூமிக்குப்போக



THE FORT OF CHANDRAGIRI.—சந்திரகிரிக் கோட்டை.

அநேகம் கணவாய்களிருக்கின்றன. சில இடங்களில் இந்த ஜில்லா நீர் வறண்டு இருக்கிறது.

ஜில்லாவின் சில இடங்களில் 40 அங்குலமும் வேறு சில இடங்களில் 33 அங்குலமும் மழை பெய்கிறது. கோடைக் காலத்தில் பீடபூமியிலும், மழைக்காலத்தில் சமவெளிப் பிரதேசங்களிலும் மழை பெய்யும்.

**விளைபொருள்கள்:**—நெல், கேழ்வரகு, கம்பு இவைகளே முக்கியமான விளைபொருள்கள். இந்த ஜில்லாவில் கிணறுகள் அதிகமாக உண்டு. தோட்டங்களில் கரும்பு விசேஷமாய்ப் பயிரிடுகிறார்கள். மாம்பழமும் கிச்சிலிப்பழமும் அதிகமாக அகப்படுகின்றன. சித்தூரும், சந்திரகிரியும் மாம்பழத்திற்கும் கார்வேட்நகரம் கிச்சிலிப்பழத்திற்கும் பிரசித்திபெற்றவை.

புங்கனூர் ஜாதிப்பசுக்கள் இந்த ஜில்லாவில் வளர்க்கப் படுகின்றன. சந்திரகிரியிலும் பலவனேரியிலும் காடுகள் விஸ்தாரமாயிருக்கின்றன. இக்காடுகளில் சான்டர்ஸ் என்னும் செடி பயிராகிறது. இதிலிருந்து சிவப்புச் சாயம் எடுக்கிறார்கள். **நாராயணவனம்** என்னும் இடத்தில் நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்கிறார்கள். **திருப்பதியில்** செம்மரத்தினால் அழகான பிரதிமைகள் முதலியவை செய்கிறார்கள்.

ஜில்லாவின் ஜனத்தொகை 12,40,000. தெலுங்கு பாஷை பேசப்படுகிறது.

**பட்டணங்கள் :**—**சித்தூர்** இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இது மிகவும் சிறியது. இங்கே ஜில்லா கலெக்டரும் ஜட்ஜும் வசிக்கிறார்கள். இந்த ஜில்லாவின் பட்டணங்களில் தேகசௌக்கியமுள்ளது மதனபல்லி. இப்பட்டணம் சமுத்திர மட்டத்திற்கு 2,250 அடி உயரத்திலிருக்கிறது. இருமலினால் (க்ஷயம்) கஷ்டப்படுகிறவர்கள் இங்கேபோய் வசித்தால் குணமடைவார்கள். இந்த ரோகத்திற்குச் சிகித்ஸை செய்ய ஓர் ஆஸ்பத்திரி இங்கே இருக்கிறது. மதனபல்லிக்கி ஏழு மைல் தூரத்தில் இருப்புப்பாதை செல்லுகிறது.

இந்த ஜில்லாவின் புண்ணிய ஸ்தலங்களில் **திருப்பதி** முக்கியமானது. தென் இந்தியாவிலுள்ள தேவாலயங்களில் இதுதான் மிக்க ஐசுவரியமுள்ளது. **காளஹஸ்தியும், திருத்தணியும்** சிவஸ்தலங்கள். காளஹஸ்தியை, தக்ஷிண கைலாஸம் என்று சொல்லுகிறார்கள்.

## தக்ஷிண பீடபூமியிலுள்ள ஜில்லாக்கள்.

1. கடப்பை, 2. கர்நூல், 3. அனந்தபுரம், 4. பல்லாரி.


தக்ஷிண பீடபூமியிலிருக்கும் ஜில்லாக்கள் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் என்பவைகளே.

இந்த நான்கு ஜில்லாக்களும் தக்ஷிண பீடபூமியைச் சேர்ந்தவை. இங்கிருக்கும் மலைகளுக்கு நடுவில் நதிகள் ஓடுகின்றன. ஆதலால் இவைகளின் இயற்கை அமைப்பு ஏறக்குறைய ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. சீதோஷ்ண ஸ்திதியும் ஒரேமாதிரிதான். வெயிற்காலத்தில் உஷ்ணம் அதிகமாயும் குளிர்காலத்தில் குளிர் அதிகமாயுமிருக்கும். இவ்விடங்களில் மழை நன்றாகப் பெய்வதில்லை. நன்செய் நிலங்கள் அதிகமாயில்லாமையால் நெல் சொற்பமாய்த்தான் விளைகிறது. புன்செய்த் தானியங்களாகிய கேழ்வரகு, சோளம் முதலியவைகளும், பருத்தியும் நன்றாகப் பயிராகின்றன. கைத்தொழிலும் வியாபாரமும் அதிகமாயில்லை. ஜனத்தொகை மிகவும் குறைவு. இந்த நான்கு ஜில்லாக்களும் எல்லா விதங்களிலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன.

**பட்டணங்கள்:**—1. **கடப்பை ஜில்லா**: முக்கிய பட்டணம் **கடப்பை.** இது வடபெண்ணையாற்றுக்குக் கொஞ்ச தூரத்திலிருக்கிறது. இப்பட்டணத்தைச் சுற்றி மூன்று மலைகள் இருக்கின்றன. இது மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்காகவும் ஜ்வர பூமியாகவு மிருப்பதால் இங்கிருந்து முக்கியமான கச்சேரிகளை வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்ற பிரயத்தனம் முன்பு நடந்தது. ஆனால் இங்கு நல்ல ஜலம் வருவதற்கு வேண்டிய அனுகூலங்கள் தேடப்பட்டிருப்பதால் இப்போது ஜ்வரம் குறைந்திருக்கிறது.


**ஜம்மல மடுகு** என்பதும் மேற்சொன்ன வடபெண்ணையாற்றிற்குச் சமீபத்திலேயே இருக்கிறது. இது பிரசித்தி பெற்ற வர்த்தகஸ்தலம். இதில் நெய், பருத்திநூல் முதலியன மிகுதியாகக் கிடைக்கும்.

2. **கர்நூல்**:—முக்கிய பட்டணம் **கர்நூல்.** துங்கபத்திராவுக்கும் **ஸிந்திரி** என்னும் நதிக்கும் மத்தியில் இப்பட்டண




TIPPU'S ROCK, BELLARY.—பல்லாரியிலுள்ள திப்புவின் மலை.

மிருக்கிறது இது தேகசௌக்கியமுள்ள இடம். இதன் வழியே கடப்பை கர்நூல் கால்வாய் ஓடுகிறது. இதிலிருந்து இப்பட்டணத்திற்குக் குழாய் மூலமாய் நல்ல ஜலம் கொண்டு



SRI SAILAM TEMPLE---ஸ்ரீ சைலம் கோவில்.

வரப்பட்டிருக்கிறது. பங்கனபல்லி என்னும் சிறிய சுதேச ராஜ்யம் இந்த ஜில்லாவில்தானிருக்கிறது. அதற்கு பங்கன பல்லி முக்கியபட்டணம்.



PENUKONDA HILL.—பெனுகொண்டா மலை.

நந்தியால் பருத்திக்கும் தானியத்திற்கும் மத்திய வர்த்தக் ஸ்தலமாயிருக்கிறது இங்கே அரக்கினல் சில விநோதப் பொருள்கள் செய்கிறார்கள்.

பத்திகோண்டா என்னுமிடத்தில் ஸர் தாமஸ் மன்ரூே என்பவர் இறந்துபோனார். இவர் முதலில் ராணுவத்தில் பற்பல சம்பளங்களில் அமர்ந்து குடித்தனக்காரர்களுக்கு உபகாரங்கள் செய்தவர். இவரை இந்த ஜில்லாக்களிலுள்ள ஜனங்கள் பிதாவென்றே அழைப்பது வழக்கம். இவ்வூரில் இவர் பெயரால் ஒரு குளமும் ஒரு புளியங்தோப்பும் வைத்திருக்கிறார்கள்.

அகோபிலம், ஸ்ரீசைலம் என்ற இரண்டு புண்ணியஸ்தலங்கள் நல்ல மலையிலிருக்கின்றன. இவற்றுள் அகோபிலம் விஷ்ணுஸ்தலம்; ஸ்ரீசைலம் சிவஸ்தலம்.

3. பல்லாரி ஜில்லா:—முக்கியபட்டணம் பல்லாரி. இந்நான்கு ஜில்லாக்களிலுமுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் இதுதான் பெரியது. இதில் கோட்டை ஒன்று உள்ளது; இதில் ஒரு பட்டாளம் வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய வர்த்தகஸ்தலம்.

ஹாஸ்பேட்:—இதை, பல்லாரிக்கு இரண்டாவதாய்ச் சொல்லலாம். இங்கு வெல்ல வியாபாரம் அதிகம். இப்பட்டணத்திற்கு அருகில் துங்கபத்திரா நதிக்கரையில் ஹம்பி என்னும் நகரம் இருக்கிறது. சரித்திரப் பிரசித்தியான விஜயநகர ராஜ்யத்திற்கு இதுதான் முக்கிய பட்டணமாயும் முற்காலத்தில் ஒன்பது சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயும் இருந்தது. அழிவுற்ற கோட்டைகளை இப்போதும் இங்கே பார்க்கலாம்.

அதோனி:—துங்கபத்திரா, கிருஷ்ணா இந்த இரண்டு நதிகளுக்கும் மத்தியிலிருப்பதால் இது மிகவும் செழிப்பானது. இது சாய ஜமக்காளங்களுக்குப் பேர்போனது. இதைச் சுற்றிப் பருத்தி விசேஷமாய் விளைவதால் இங்கு பருத்தியைச் சுத்தம்செய்து இறுக்கிக் கட்டும் யந்திரங்கள் இருக்கின்றன.

4. அனந்தபுரம் ஜில்லா:—அனந்தபுரமே முக்கிய பட்டணம். அனந்தபுரத்தை முக்கிய பட்டணமாக்கினவர் ஸர் தாமஸ் மன்ரூே என்பவர். அவர் உத்தியோகசாலையை இன்றைக்கும் இந்த ஊரில் பார்க்கலாம். இதற்கு மன்ரூே ஹால் என்று பெயர். குத்தி என்னும் பட்டணத்தில் மலைக்கோட்டைகளிருக்கின்றன.

தர்மாவரம்:—ரயில்வே ஜங்க்ஷன். இங்கிருந்து அனந்தபுரத்தின் வழியே குண்டக்கல்லுக்கும், பங்களூருக்கும், சித்தூருக்கும் இருப்புப்பாதை போகிறது. பெரிய ரயில்வே ஜங்க்ஷனாகிய குண்டக்கல்லும் இந்த ஜில்லாவில்தானிருக்கிறது.

### கேள்விகள்.

1. தமிழ்நாட்டில் தென்னைமரம், பனைமரம் எங்கே விசேஷமாக இருக்கின்றன? அவைகளால் நமக்குஎன்ன பிரயோஜனம்?

2. எள்ளு விசேஷமாகப் பயிராகும் ஜில்லாக்கள் எவை? இதை நாம் எப்படி உபயோகப்படுத்துகிறோம்? (திருநெல்வேலி, இராமநாதபுரம், சேலம், விசாகபட்டணம், கோதாவரி, அனந்தபுரம், தென் ஆற்காடு ஜில்லாக்கள்.)

3. கீழே சொல்லப்பட்டுள்ள வஸ்துக்கள் நமது ராஜதானியில் எங்கெங்கே அகப்படுகின்றன? அவைகளை நாம் எப்படி உபயோகிக்கிறோம்? மிளகாய், காப்பி, தேயிலை, புகையிலை சிங்கோனு, பட்டு, ஆவாரம், கடுக்காய்.

4. துணிகள் நெய்வதற்குப் பெயர்போன பட்டணங்கள் ஐந்தையும் சொல்லவும்? தோல் பதம் செய்வதென்றால் என்ன? அது எங்கெங்கே நடக்கிறது? இந்த இடங்களில் தோல் பதனிட என்ன சௌகரியங்கள் இருக்கின்றன?

5. நமது ராஜதானியில் சரித்திரப்பிரசித்தமான பட்டணங்கள் பத்தைச் சொல்லவும். ஒவ்வொன்றையும்பற்றி மூன்று வாக்கியங்களுக்கு மேற்படாமல் சரித்திரம் எழுதுக.

6. ஹிந்துக்களுக்காவது, மகம்மதியர்களுக்காவது உள்ள முக்கியமான புண்ணியஸ்தலங்கள் பத்து சொல்லவும். அவை எந்த ஜில்லாக்களில் இருக்கின்றன? நமது ராஜதானியில் பெரிய நதிக்கரைகளில் உள்ள பெரிய பட்டணங்கள் பத்து சொல்லவும். ஐந்து இருப்புப்பாதை ஜங்க்ஷன்களைச் சொல்லி ஒவ்வொன்றிலிருந்தும் எங்கெங்கே இருப்புப்பாதை மார்க்கம் செல்லுகின்றனவென்று சொல்லவும்.

7. சங்கராசாரியர், ராமாநுஜர், மத்வாசாரியர், வித்தியாரண்ணியர், வேதாந்த தேசிகர், நம்மாள்வார், திருவள்ளுவர், கம்பர், நந்தன் இவர்களைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தமிழ்நாட்டில் கலாசாலைகள் எங்கெங்கே இருக்கின்றன?

# மூன்றும் பாகம்.

## இந்தியா.

இதுவரையில் சென்னை ராஜதானியைப்பற்றி நாம் கொஞ்சம் தெரிந்துகொண்டோம். இந்தியா தேசத்தின் ஒரு பாகமாகிய இந்த ராஜதானியானது இத்தேசத்தின் தெற்கிலும் தென்கிழக்கிலும் இருக்கிறது.

சென்னை ராஜதானியின் விஸ்தீரணம் என்ன? இந்தியாவின் மொத்த விஸ்தீரணம் 17,70,000 சதுரமைல். சென்னை ராஜதானியைக்காட்டிலும் இது எத்தனைமடங்கு பெரியது? இந்தியாதேசத்தில் முப்பத்தொருகோடியே ஐம்பதுலக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். படத்திலிருந்து இதன் உருவத்தைத் தெரிந்துகொள்க. வடபாகம் விசாலமாயும் தென்பாகம் குறுகியும் இருக்கின்றன. கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் இந்துமகா சமுத்திரமும் மேற்கில் அரபிக்கடலும் உள்ளன.

இமயமலை :—வடபாகத்தில் மலைகள் வடமேற்கிலிருந்து தென்கிழக்காக ஓடுகின்றன. இம்மலைகளுக்கு ஹிமாலய பர்வதம் என்று பெயர். உலகத்திலிருக்கும் மலைகளில் எல்லாம் இதுவே மிக முக்கியமானது. இவ்வளவு உயரமான மலை உலகத்தில் வேறு எங்கும் இல்லை. சமுத்திர மட்டத்திலிருந்து மேலே போகப்போக, குளிர் அதிகமாய் இருக்கும் என்று இதற்குமுன் மேலே சொல்லியிருக்கிறோம். பனிக்கட்டி எப்போதும் இருக்கும்படி அவ்வளவு உயரத்தில் இம்மலை இருக்கிறது. இமயமலை என்றால் 'பனிமலை' என்று அர்த்தம். இம்மலையில் ஏறக்குறைய 5, 6 மைல் உயரமுள்ள சிகரங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் உயரமானது எவரஸ்டு. இதன் உயரம் 29,000 அடி. இது உலகத்திலுள்ள சிகரங்களுக்கெல்லாம் உன்னதமானது. வடமேற்கிலிருந்து தென்கிழக்காக மலைகள் ஓடுவதைப் பார்க்க. இந்த மலைகளில் கைபர்கணவாய் இருக்கிறது. இதன்வழியாக இத்தேசத்திலிருந்து வெளித்தேசங்களுக்குப் போக முடியும். ஆனால் வழி மிகவும் கஷ்டமானது.

இமயமலைக்குக் கிழக்கிலும் வடக்கேயிருந்து தெற்கே மலைகள் ஓடுகின்றன. இம்மலைகள் உள்ள நாடு இந்தியா தேசத்தின் **முதற்பாகம்.** மலை அடிவாரத்தில் கிழக்குப் பாகத்தில் மழை அதிகம். மேற்கே போகப் போக மழை குறைவு. ஆனால் காடுகள் விஸ்தாரமாய் இருக்கின்றன. சகலவிதமான பல விருக்ஷங்களும் தேக்கு முதலிய மரங்களும் இங்கே ஏராளமாய் உண்டாகின்றன. ஜனத்தொகை மிகவும் குறைவு. கோடைக்காலத்தில் ஐரோப்பியருக்கு வாசஞ்செய்வதற்கு ஏற்ற இடங்கள் இங்கே இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது **சிம்லா.** இங்கேதான் நமது ராஜப்பிரதிநிதி கோடைக்காலத்தில் வசிக்கிறார்.

இந்தியாவின் இரண்டாவது பாகம் **கங்காசிந்து மைதானம்.** இமயமலைக்குத் தெற்கே அநேக வருஷங்களுக்குமுன் பெரிய சமுத்திரம் இருந்ததாகத் தெரிகிறது. இம்மலையிலிருந்து ஜலத்தோடு அடித்துக்கொண்டுவந்த மணலினால் சமுத்திரம் தூர்ந்துபோய்ப் பெரிய பள்ளத்தாக்காகிவிட்டது. இப்பள்ளத்தாக்கு வங்காளத்திலிருந்து அரபிக்கடல்வரையில் பரவியிருக்கின்றது இது மத்தியில் ஏறக்குறைய 1,000 அடி உயரத்திலிருக்கிறது. இதற்குக் கிழக்கிலிருக்கும் பள்ளத்தாக்கு மேற்குப் பள்ளத்தாக்கைக்காட்டிலும் பெரியது. இதில் **கங்காநதி** ஓடுகிறது. இது ஹிந்துக்களுக்கு ஒரு புண்ணியநதி. இது ஹிமாலயத்தில் உற்பத்தியாகிறது. இதற்கு அநேக உபநதிகள் உண்டு. அவைகளில் **யமுனை** மிகவும் பேர்பெற்றது. இமயமலையில் உற்பத்தியாகும் **பிரமபுத்திரா**வும் கங்கையில் சேர்ந்து கடலில் விழுகிறது. இந்தப் பள்ளத்தாக்கில் மழை அதிகம். நிலவளம் மிகவும் சாரமாயிருக்கும். நெல், சணல் முதலியவை இங்கு ஏராளமாய் உற்பத்தியாகின்றன. ஆகையால் அநேக ஜனங்கள் இங்கு வசிக்கிறார்கள். **கல்கத்தா, காசி** முதலிய பெரிய பட்டணங்கள் இந்நதிக்கரையில் இருக்கின்றன.

மேற்குப் பள்ளத்தாக்கில் **சிந்துநதி** ஓடுகின்றது இதுவும் இமயமலையில் உற்பத்தியாகி மலைநாடு வழியாய் ஓடிப் பள்ளத்தாக்கில் சேருகிறது. இந்தப் பள்ளத்தாக்கில் ஐந்து உபநதிகள் வந்து இதில் கலக்கின்றன. இந்த ஐந்து நதிகளும் ஓடும்




இடத்திற்கு, பஞ்சாப் என்று பெயர். மேற்குப் பள்ளத் தாக்கில் மழை மிகவும் கொஞ்சம். அது ஒரு பெரிய வனாந் தரம். இந்நதி இங்கு ஓடாவிட்டால் ஜனங்கள் குடியிருக்கமாட் டார்கள். இந்த வனாந்தரத்தில் இந்த நதி ஓடி அரபிக்கடலில்

விழுகின்றது. இதன் முகத்துவாரத்தில் இருக்கும் கராச்சி என்னும் துறைமுகப்பட்டணம் மிகவும் முக்கியமானது. மேலேசொன்ன கங்காசிந்து மைதானத்தைத்தவிர, கிழக்குச் சமுத்திரக்கரையிலும், மேற்குச் சமுத்திரக்கரையிலும் பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. சென்னை ராஜதானியிலிருக்கும் இப்பள்ளத்தாக்கைப்பற்றி மேலே சொல்லியிருக்கிறோம். அம்மாதிரியான பள்ளத்தாக்குகள் இந்த ராஜதானிக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இருக்கின்றன என்பதைப் படத்தைப் பார்த்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம். மேற்குப் பள்ளத்தாக்கில்தான் பம்பாய் என்னும் துறைமுகப்பட்டணம் இருக்கிறது.

பீடபூமி:—கங்காசிந்து மைதானத்திற்குத் தெற்கில் மலைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றிற்கு விந்தியபர்வதம் என்று பெயர். இவ் விந்தியபர்வதம் இமயமலையைப்போல் அவ்வளவு உயரமானதன்று. இதற்குத் தெற்கே வேறொரு பர்வதம் இருக்கிறது. இதற்கு, சாத்பூராமலை என்று பெயர். இதன் மேற்கு நுனியிலிருந்துதான் மேற்குத்தொடர்ச்சிமலை ஆரம்பிக்கிறது. கிழக்குத்தொடர்ச்சிமலையும் மேற்குத்தொடர்ச்சி மலையும் எங்கே சேருகின்றன?

வடக்கே விந்தியபர்வதம், கிழக்கே கிழக்குத்தொடர்ச்சி மலை, மேற்கே மேற்குத்தொடர்ச்சி மலை இவற்றின் மத்தியில் இருக்கும் முக்கோண வடிவுள்ள பாகத்திற்கு, தக்காணபீடபூமி என்று பெயர் இந்தப் பீடபூமியின் தெற்கேயிருக்கும் மைசூர் மிகவும் மேடானது. சென்னை ராஜதானியின் தக்ஷிணஜில்லாக்களும் ஹைதராபாத்து என்னும் ராஜ்யமும் இந்தப் பீடபூமியைச் சேர்ந்தவைகள். விந்தியபர்வதத்திற்கு வடக்கே ஒரு சிறிய பீடபூமி உண்டு. அதற்கு மால்வா அல்லது மத்திய இந்திய பீடபூமி என்று பெயர். இதுவும் முக்கோண வடிவுள்ளது. இந்தப் பீடபூமியானது மேற்குப்பக்கத்தில் உயர்ந்தும் கிழக்கே வரவரத் தாழ்ந்தும் இருக்கிறது. ஆனால் சென்னை ராஜதானியைப்போலவே இங்கு ஓடும் நதிகளும் மேற்கேயிருந்து கிழக்கே செல்லுகின்றன. சென்னை ராஜதானிக்கு வடக்கே ஓடும் நதிகளில் மகாநதி முக்கியமானது. இந்தப் பீடபூமியில் அநேகமாய் நதிகள் மேற்கேயிருந்து கிழக்கே

ஓடினபோதிலும் நர்மதா, தபதி என்னும் இரண்டு நதிகளும் கிழக்கிலிருந்து மேற்கே ஓடி அரபிக்கடலில் விழுகின்றன. விந்தியபர்வதத்திற்குத் தெற்கே நர்மதா ஓடுகிறது. இதுவும் ஒரு புண்ணிய நதி. சாத்பூராமலைக்குத் தெற்கே தபதிநதி ஓடுகிறது.

பர்மா:—இது வங்காளத்திற்குக் கிழக்கில் இருக்கிறது. ஆங்கிலேயர் இதை ஜயித்திருப்பதனால் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறதேயொழிய உண்மையில் இது இந்தியாவுடன் சேர்ந்ததன்று. பர்மாதேசத்தில் அநேக மலைகள் வடக்கேயிருந்து தெற்கே பரவியிருக்கின்றன. இம்மலைகளின் மத்தியில் அநேக நதிகள் ஓடுகின்றன; இவற்றுள் முக்கியமானது ஐராவதி. இத்தேசத்தில் நெல் ஏராளமாய்ப் பயிராகின்றது. ரங்கூன் இதற்கு முக்கியபட்டணம்.

அப்பியாசம்.

இந்து தேசத்தின் படத்தை வரைந்து அதில் பின் வருபனவற்றைக் காட்டவும்:—

வங்காளவிரிகுடா; அரபிக்கடல், இமயமலை, விந்தியமலை, கிழக்குத் தொடர்ச்சிமலை, மேற்குத் தொடர்ச்சிமலை, நீலகிரி, கங்கா சிந்துசமவெளி, தக்ஷிணபீடபூமி, மைசூர்பீடபூமி, ராஜபுதன பாலைவனம், நர்மதை, தபதி, மஹாநதி, பொம்பாய், கராச்சி, கல்கத்தா, சிம்லா, காசி, ராமேசுவரம்.


## நான்காம் பாகம்.

### கண்டங்கள், சமுத்திரங்கள்.

இந்தியாதேசம் ஆசியா கண்டத்தின் ஒரு பாகம். அநேக தேசங்கள் சேர்ந்தது ஒரு கண்டம். படத்தைப் பார்த்தால் ஆசியா கண்டம் இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ளலாம். ஆசியா கண்டத்திற்குத் தெற்கே இந்துமகாசமுத்திரம் இருக்கிறது. இந்தச் சமுத்திரத்தில் ஆசியா கண்டத்தின் தென்பாகம் அநேக இடங்களில் உள்ளிட்டிருக்கிறது. மூன்றுபக்கம் தண்ணீரினால் சூழப்பட்ட பூபாகத்திற்கு, தீபகல்ப

மென்று பெயர். இம்மாதிரியான தீபகல்பங்கள் ஆசியாகண்டத்தின் தெற்கில் மூன்று இருக்கின்றன. அவற்றுள் நாமிருக்கும் இந்தியாதேசம் மத்தியிலிருக்கும் தீபகல்பம். ஆசியா கண்டத்திற்கு மேற்கே ஐரோப்பா என்ற கண்டமொன்றிருக்கிறது அது ஆசியா கண்டத்தோடு சேர்ந்திருக்கிறது. அது ஆசியாவின் ஒரு தீபகல்பம்போல் இருக்கும். அதன் வடக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று புறங்களிலும் தண்ணீர் நிறைந்திருக்கிறது. இவ்விரண்டு கண்டங்களும் உண்மையில் ஒரே கண்டந்தான். இவற்றிற்கு யூரேஷியா என்று பெயர்.

யூரேஷியாவைச் சுற்றிலும் பெரிய சமுத்திரங்களிருக்கின்றன. இவைகள் மகா சமுத்திரங்கள். இந்த ஜலபாகங்கள் எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதைப் படத்தில் கவனிக்க. வடக்கேயிருக்கும் சமுத்திரத்திற்கு ஆர்டிக் மகா சமுத்திரம் (உத்தர மகாசமுத்திரம்) என்று பெயர். இது நமது தேசத்திற்கு வடக்கே வெகுதூரத்திலிருக்கிறது. பூமத்திய ரேகைக்கு இது வெகு தூரத்திலிருப்பதால் இங்கே வெயில் மிகவும் குறைவாயிருக்கும். ஆகையால் இச்சமுத்திரம் வருஷத்தில் பெரும்பாகம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். யூரேஷியாவிற்குக் கிழக்கே பஸிபிக் மகாசமுத்திரம் இருக்கிறது. உலகத்திலுள்ள ஜலபாகங்களில் இதுதான் மிகவும் பெரியது. சில இடங்களில் இந்தச் சமுத்திரம் ஆறு மைல் ஆழமிருக்கும். இம்மகாசமுத்திரத்திற்கு அப்புறம் ஆசியாவுக்கு எதிரில் பெரிய பூபாகம் இருக்கிறது. அந்தப் பூபாகத்திற்கும் ஆசியாவுக்கும் இடையில் சிலவிடங்களில் இந்தச் சமுத்திரத்தின் அகலம் 12,000 மைல் இருக்கும். இது எவ்வளவு பெரியதென்பதை நீங்களே ஊகித்தறியலாம். உலகத்திலுள்ள பூபாகங்கள் எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தாலும் இச்சமுத்திரம் கொள்ளும். இச்சமுத்திரமும் உத்தர மகாசமுத்திரமும் வடகிழக்கில் ஒன்றாய்ச் சேருவதைப் பாருங்கள். இச்சமுத்திரங்கள் கூடுமிடம் மிகவும் நெருக்கமாயிருக்கிறது. இதற்கு வெகு சமீபத்தில் இருபுறங்களிலும் நிலங்கள் இருப்பதைப் பார்க்க. இவைகளில் முன்னே சொன்ன யூரேஷியா ஒன்று. மறுபுறம் இருக்கும் பூபாகத்திற்கு அமெரிகா கண்டம் என்று பெயர். இவ்விருகண்


ஆப்பிரிக்கா
தென் அமெரிக்கா
வட அமெரிக்கா

டங்களும் இங்கே இவ்வளவு சமீபத்திலிருந்தும் தெற்கே போகப்போக அகன்றுள்ளன.

யூரேஷியா கண்டத்திற்கு மேற்கேயிருக்கும் ஜலபாகத்திற்கு **அட்லாண்டிக் மகாசமுத்திரம்** என்று பெயர். இதுவும் உத்தரமகாசமுத்திரமும் வடபாகத்தில் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கின்றன. இது பஸிபிக் சமுத்திரம்போல் அவ்வளவு பெரியதன்று. ஆனல் பஸிபிக் சமுத்திரத்தைவிட இதில் வர்த்தகம் மிகுதியாய் நடப்பதால் இது முக்கியமானது. ஆசியா கண்டத்திற்கு எதிரில் பஸிபிக் சமுத்திரத்திற்கப்பால் அமெரிகா இருப்பதுபோல், ஐரோப்பா கண்டத்திற்கெதிரிலும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திற்கு அப்புறமும் அமெரிகா கண்ட மிருக்கிறது. அமெரிகா கண்டத்திற்குக் கிழக்கே அட்லாண்டிக்கும் மேற்கே பஸிபிக்கும் இருக்கின்றனவென்று நீங்கள் இப்போது தெரிந்துகொண்டிருப்பீர்கள். படத்தைப் பார்த்தால் மாத்திரம் இவ்விஷயம் விளக்கமாய் ஏற்படாது. உங்கள் உபாத்தியாயர் உங்களுக்கு குளோப் (பூமி உருண்டை) என்பதைக் காண்பிப்பார். அதைக் கையில் வாங்கிக்கொண்டு நன்ருகக் கவனித்தால் இவற்றையெல்லாம் சுலபமாய் நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஐரோப்பாவிற்கு மேற்கே இருக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பூபாகத்திற்குச் சமீபத்தில் தீவுகளிருப்பதைப் பார்க்க. இவைகளுக்கு **பிரிட்டிஷ் தீவுகள்** என்று பெயர். இந்தியா தேசத்திற்கு வடகிழக்கே ஜப்பான் தீவுகளிருப்பதுபோல் வடமேற்கே பிரிட்டிஷ் தீவுகளிருக்கின்றன. இத்தீவுகளிலிருப்பவர்களே நமது தேசத்தை யாள்பவர்கள். நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜும் சக்கரவர்த்தினியாகிய மேரி ராணியும் இங்கேதான் வசிக்கிருர்கள்.

ஐரோப்பா கண்டத்திற்குத் தெற்கேயிருக்கும் சிறிய ஜலபாகத்தைப் பாருங்கள். இதற்கு **மத்தியதரைக் கடல்** (மெடிடெரேனியன் சமுத்திரம்) என்று பெயர். இது அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஒரு பாகம். பூமிக்கு மத்தியில் இருப்பதாக நினைத்து. சிலர் இதற்கு இப்பெயரிட்டார்கள். ஆசியா கண்டத்தின் தென்பாகம் இந்துமகா சமுத்திரத்தில் தீபகல்பங்களாக வியாபித்திருப்பதுபோல் ஐரோப்பாவின் தென்பாகமும் தீபகல்பங்களாக இம்மத்தியதரைக் கடலில்

வியாபித்திருக்கின்றது. அங்கிருப்பதுபோல் இங்கும் மூன்று தீபகல்பங்கள் இருக்கின்றன.

மத்தியதரைக் கடலுக்குத் தெற்கேயிருக்கும் பெரிய நில பாகத்தைப் பாருங்கள். இதற்கு ஆபிரிகா கண்டமென்று பெயர். இக்கண்டமானது வடகிழக்கில் ஆசியா கண்டத்துடன் சேர்ந்திருப்பதைப் படத்தில் கவனிக்க. இவ்விரு கண்டங்களும் சேருமிடத்திற்கு, **சூயஸ் பூசந்தி** என்று பெயர். இப்பூசந்தி மிகவும் குறுகலானது. இதன் இரண்டு பக்கங்களிலும் சமுத்திரங்க ளிருக்கின்றன. இதற்குத் தெற்கேயிருப்பது இந்துமகா சமுத்திரத்தின் ஒரு பாகமாகிய **சேங்கடல்** (ரெட்ஸீ). மறுபுறத்திலிருக்கும் மத்தியதரைக் கடலையும் இச்செங்கடலையும் ஒரு கால்வாயினால் சம்பந்தப் படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு **சூயஸ் கால்வாயென்று** பெயர். இது மிகவும் முக்கியமான கால்வாய். இதன் உபயோகம் சொல்லில் அடங்காதது. நமது தேசத்தினின்று பிரிட்டிஷ் தீவுகளுக்குப் போகவேண்டுமானால் இக்கால்வாயின் மூலமாய்த்தான் மத்தியதரைக் கடலுக்குப் போய் அங்கிருந்து போகவேண்டும். இக்கால்வாய் வெட்டினபிறகு ஆபிரிகா கண்டம் ஒரு தீவுபோல் ஆகிவிட்டது. இதற்கு வடக்கே மத்தியதரைக் கடலும், கிழக்கே சூயஸ் கால்வாயும் இந்துமகா சமுத்திரமும், மேற்கே அட்லாண்டிக் சமுத்திரமும் இருக்கின்றன.

அட்லாண்டிக் சமுத்திரத்தின் கிழக்கே வடபாகத்தில் ஐரோப்பா கண்டமும், தென்பாகத்தில் ஆபிரிகா கண்டமும், மேற்கே அமெரிகா கண்டமும் இருக்கின்றன. நமது தேசத்திற்குத் தெற்கே இந்துமகா சமுத்திரத்தினருகில் நிலம் முக்கோண வடிவமாயிருப்பதுபோல் ஆபிரிகா கண்டத்திற்குத் தெற்கேயும் நிலப்பாகம் முக்கோண வடிவமாயிருக்கிறது. இங்கேதான் இந்துமகா சமுத்திரமும் அட்லாண்டிக் சமுத்திரமும் சேருகின்றன. இவ்விதமுள்ள ஜலபாகங்கள் தெற்கே வெகுதூரம் பரவியிருக்கின்றன. தென்கோடியில் இதற்கு, **தக்ஷிண மகாசமுத்திரம்** (அண்டார்டிக்) என்றுபெயர். இதுவும் மிகப் பெரியதொரு நீர்ப்பிரிவு. இதுவும் வடசமுத்

திரத்தைப்போல் பூமத்தியரேகைக்கு வெகுதூரத்திலிருப்பதால வருஷத்தில் விசேஷபாகம் தண்ணீர் பனிக்கட்டியாய் உறைந்திருக்கும். சூயஸ் கால்வாய் வெட்டுவதற்குமுன் ஐரோப்பியர்கள் தங்கள் தேசத்திலிருந்து அட்லாண்டிக் வழியாக ஆபிரிகாவின் தென்கோடிக்கு வந்து அங்கிருந்து வடகிழக்காக இந்தியாதேசத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு வருவதற்கு அக்காலத்தில் ஆறுமாதம் பிடிக்கும். இப்போது இந்தியாவிலிருந்து சூயஸ்கால்வாய் மூலமாய்க் கப்பல் மார்க்கமாகவே மூன்று வாரங்களில் இங்கிலாந்துசேரலாம்.

ஆபிரிகா கண்டத்தின் பூர்வீகக் குடிகள் நாகரிகமில்லாத ஜாதியார். ஆனால் இக்கண்டத்தின் வடபாகத்திலிருக்கும் எகிப்து தேசத்திலுள்ளவர்கள் நாகரிகமுடையவர்கள். இக்கண்டத்தின் தென்பாகத்தில் நமது தேசத்தவர்கள் போய்க் குடியேறியிருக்கிறார்கள்.

தென் ஆபிரிகாவுக்கு எதிரே பஸிபிக் மகாசமுத்தி த்தில் ஒரு பெரிய நிலப்பிரிவு இருப்பதை உற்று நோக்குங்கள். இதுதான் ஆஸ்திரேலியா கண்டம். இது ஒரு பெரிய தீவாக உள்ளது. கண்டங்களெல்லாவற்றிலும் இதுதான் சிறியது. இது பிரிட்டிஷ் ராஜ்யத்தைச் சேர்ந்தது.

அமெரிகாகண்டம் இருக்குமிடத்தைப்பற்றி மேலே சொன்னோம். இக்கண்டத்தை ஏறக்குறைய 500 வருஷங்களுக்குமுன் கோலம்பஸ் என்னும் ஐரோப்பியர் ஒருவர் கண்டுபிடித்தார். படத்தைப் பார்த்து இக்கண்டத்தின் வடபாகமும் தென்பாகமும் இரண்டு பெரிய நிலப்பிரிவுகளாக இருப்பதையும் அவைகளை ஒரு சிறிய நிலப்பாகம் ஒன்றாய்ச் சேர்ப்பதையும் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு இவ்விரண்டு பிரிவுகளையும் சேர்க்கும் குறுகிய நிலப்பிரிவுக்கு பனாமா பூசந்தி என்று பெயர். இவ்விடத்தில் ஒரு கால்வாய் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது கிழக்கிலிருக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்தை மேற்கிலிருக்கும் பஸிபிக்கோடு சேர்க்கும். இக்கால்வாய் வெட்டினபிறகு வடஅமெரிகாவும் தென்அமெரிகாவும் தனித்தனியான தீவுகளாகும். வடஅமெரிகாவுக்கு வடக்கே ஆர்டிக் சமுத்திரம் (உத்தரமகா சமுத்திரம்) இருக்கிறது. யூரேஷியாவுக்கு வடக்கிலும் இம்மகாசமுத்திரம் இருக்

கிறதென்று மேலே சொன்னோம். குளோபைப் பார்த்தால் தான் ஆர்டிக் மகாசமுத்திரம் இக்கண்டங்களுக்கு வடக்கே இம்மாதிரி அமைந்திருக்கிறதென்று தெரியவரும். அமெரிகா கண்டத்திற்குத் தெற்கே அண்டார்டிக் (தக்ஷிண மகாசமுத்திரம்) இருக்கிறது. குளோபைப்பார்த்து ஆர்டிக், அண்டார்டிக் இவ்விரண்டில் பெரியது இன்னது என்று சொல்லுக.

மேலே சொன்ன ஜலபாகங்களும் பூபாகங்களும் சேர்ந்ததைத்தான் பூமி என்கிறோம். இப்பூமி உருண்டை வடிவமானது. ஆகையால்தான் இப்பூமியின் வடிவத்தைக் காட்டும் வண்ணம் குளோப் அம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது. இதை நன்றாகக் கவனிக்க. இதை இரண்டுவிதமான சமபாகங்களாகப் பிரிக்கலாம். தெற்குவடக்காகப் பிரித்தால் கிழக்குப் பாதி உருண்டை, மேற்குப்பாதி உருண்டை எனப் பிரியும். கிழக்கேயிருப்பதில் யூரேஷியா, ஆபிரிகா, ஆஸ்திரேலியா என்னும் கண்டங்களும், ஆர்டிக், அண்டார்டிக், பஸிபிக், இந்தியன் என்ற பெயர்களுடன் அங்கங்கே வழங்கும் ஜலபாகமும் இருக்கின்றன. மேற்குப்பாதியில் அமெரிகா கண்டமும் ஆர்டிக், அண்டார்டிக், பஸிபிக், அட்லாண்டிக் என்ற பெயர்களுடன் வழங்கும் மகா சமுத்திரங்கள் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும் ஜலபாகமும் இருக்கின்றன.


நாம் முன்சொன்னபடி குளோபைக் கிழக்கு மேற்காகவும் பிரிக்கலாம். பிரித்தால் வடக்கேயிருப்பதற்கு வடபாதி உருண்டை யென்றும் தெற்கேயிருப்பதற்குத் தென்பாதி உருண்டை யென்றும் பெயர் ஏற்படும். இவ்வாறு இரு பிரிவுகளாகப் பிரிக்கும்போது நாம் ஒரு கோடு இருப்பதாக நினைத்தால் அதுதான் பூமத்திய ரேகையாகும். இந்த ரேகைக்கு வடக்கே நிலப்பாகம் அதிகமாகவும் தெற்கே ஜலபாகம் அதிகமாகவுமிருக்கும்.

அதற்கு வடக்கே யூரேஷியாவும் வடஅமெரிகாவும் ஆபிரிகாவில் பாதியும் இருக்கின்றன. தெற்கேயிருக்கும் கண்டங்களைச் சொல்லுக. பூமியின் மேற்புறத்தில் இருக்கும் ஜலபாகம் மூன்று பங்கென்றும் நிலப்பாகம் ஒரு பங்கென்றும் தெரியவரும்.


# ஐந்தாம் பாகம்.

## பூமியின் வடிவம்.

நமது பார்வைக்கு, பூமி தட்டையாகத் தோன்றுகிறது. மேலே சொன்னபடி உண்மையில் அது உருண்டைதான் எப்படியென்றால் ஒருவன் இப் பூமியில் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு நேராகத் திரும்பாமற்போனால் அவன் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருகிறான். பூமி உருண்டையாயிருப்பதனால்தான் இவ்வாறு வர முடியும். ஒரு பந்தின்மேல் ஓர் எறும்பைவிட்டுப் பார்த்தால் இதை நீங்கள் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுவீர்கள்.



அது சுற்றிச்சுற்றிப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும். இதுபோலவே அநேகர் கப்பலைத் திருப்பாமல் நேராகச் செலுத்தி, பூமியைச் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள்.





பூமி உருண்டை யென்பதற்கு இன்னுமொரு திருஷ்டாந்தம் சொல்லலாம். சமுத்திரக்கரையில் நின்றுகொண்டு கரையைவிட்டுப் போகும் ஒரு கப்பலைப் பார்த்தால் கொஞ்சதூரம் போனவுடன் கப்பலின் பெரிய அடிப்பாகம் முதலிலும் புகைக்குழாய் முதலிய நடுப்பாகம் பிறகும் கடைசியாகப் பாய்மரத்தின் நுனியும் மறையும். கடற்கரையிலுள்ள ஒரு கோபுரம் அல்லது உயரமான கட்டிடத்தின்மேல் ஏறிப்பார்த்தால் கண்ணுக்கு மறைந்த கப்பல் மறுபடியும் தெரியும். முன் அவ்வாறு மறைந்தது ஏது என்று நினைக்கிறீர்கள். அதுவே இப்பூமியின் வளைவான பாகம். பூமி தட்டையாயிருக்குமா

யின் கப்பல் தூரம் போகப்போகச் சிறிதாகக் காணப்படுமே யல்லது ஒவ்வொரு பாகமாக மறையாது. வெகுதூரம் போன பிறகு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும். அப்படி ஒருதரம் மறைந்த பிறகு எவ்வளவு உயரமான இடத்தில் ஏறிப் பார்த்தாலும் தெரியாது.

இப்பூமி உருண்டையா யிருப்பதுபோல்சூரியனும் உருண் டையாகக் காணப்படுகிறது. சந்திரனும் நட்சத்திரங்களும் அவ்வாறே உருண்டையாகத்தான் காணப்படுகின்றன. இவ் வாறு உருண்டையாயிருக்கும் பூமியின் குறுக்களவு 3,000 மைல்; சுற்றளவு 25,000 மைல். நாம் பூமியிலிருந்து சூரிய னைப் பார்த்தால் அது மிகவும் சிறிதாகக் காணப்படுகிறது. ஆனால் சூரியன் பூமியைக்காட்டிலும் பத்து லட்சம் மடங்கு பெரிது. அவ்வளவு பெரிதாயிருந்தும் அது பூமிக்கு வெகு தூரத்திலிருப்பதால் மிகவும் சிறியதாகக் காணப்படுகிறது. எப்போதும் தூரத்திலுள்ள வஸ்து சிறிதாகத்தான் புலப்படும்.


சூரியனைப்பற்றி இன்னுமொரு விசேஷம் உண்டு என்ன வென்றால் காலையில் உதித்து ஆகாயமார்க்கமாய் மத்தியானம் நமது தலைக்கு நேராக வந்து சாயங்காலம் அஸ்தமிக்கிறதாக அது காணப்படுகிறது. இரவில் காணப்படாமல் மறுநாள் அவ்வாறே செல்லுகிறதாக அது தோன்றுகிறது. இம்மாதிரி காணப்பட்டபோதிலும் சூரியன் செல்வதாகத் தோன்றுவது உண்மையன்று. எவ்வாறெனில் வேகமாய்ப்போகும் இருப் புப்பாதை வண்டியில் நாம் ஏறிப்போகும்போது பக்கங்களி லுள்ள வீடு, மரம், செடி, கொடி முதலியவைகள் செல்வதாகத் தோன்றுகின்றனவேயன்றி நாம் ஏறிச்செல்லும் வண்டி ஓடுவ தாகத் தோன்றுவதில்லை. அதுபோலவே பூமியிலிருக்கும் நமக்கு நாம் பார்க்கும் சூரியன் ஓடுவதாகத் தோன்றுகிறது. உண்மையில் பூமிதான் சுற்றிக்கொண்டிருக்கிறது.

இருட்டில் ஒரு விளக்கின்முன் ஒரு பானையைக் கவிழ்த் துப் பாருங்கள் விளக்கின் வெளிச்சம் பானையின் ஒருபாதி யில்தான் விழும். மறுபாதி இருட்டாயிருக்கும். பானையை ஒரு சுற்றுச் சுற்றினால் இருட்டாயிருந்த பாகத்தில் வெளிச்ச மும் வெளிச்சமாயிருந்த பாகத்தில் இருட்டும் உண்டாவ தைப் பார்க்கலாம். இம்மாதிரியே பூமி ஒரு பம்பரத்தைப்



போல் சுற்றிக்கொண்டிருப்பதால் சூரியனுக்கு எதிரில் வரும் பாகத்தில் வெளிச்சமும் மறுபாகத்தில் இருட்டும் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. இதனால் பூமி சுற்றுவதனால்தான் இரவும் பகலும் உண்டாகின்றனவென்று தெரிந்துகொள்ளுகிறோம்.


இம்மாதிரி பூமி பம்பரம் சுற்றுவதுபோல் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றிவர ஒரு வருஷமாகிறது. இந்த ஒரு வருஷத்தைத்தான் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இம்மாதிரி பன்னிரண்டு மாதங்களாகப் பிரிக்கப்பட்டதற்குக் காரணம் அடுத்த வகுப்பில் தெரிந்துகொள்ளலாம். சூரியன் ஒரு பெரிய நெருப்புப் பந்து. உலகத்திலுள்ள உஷ்ணத்திற்குக் காரணம் அதுதான். அது இல்லாவிட்டால் நாம் பிழைத்திருக்கமாட்டோம். மழை பெய்யாது புல் பூண்டுகள் வளரமாட்டா.



சூரியனைப்போல் சந்திரனும் ஒரு கோளந்தான். சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள வித்தியாசங்களைச் சொல்ல முடியுமா? சந்திரன் நெருப்புப் பந்தாகுமா? சந்திரன் பிர

பாது எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கிறது பாருங் சந்திரனுக்கு இயற்கையாக வெளிச்சமில்லை. சூரியனது வெளிச்சம் சந்திரன்மேல் விழுகிறது. அந்த வெளிச்சத்தை நாம் பார்க்கிறோம்.

சூரியனைப்போல் சந்திரன் தினந்தோறும் பிரகாசிப்பதில்லை. மாதத்தில் ஒருநாள் அதாவது அமாவாசையன்று சந்திரன் அடியோடு புலப்படுவதில்லை. மற்றொருநாள் அதாவது பௌர்ணமியன்று பூர்ண சந்திரனைப் பார்க்கிறோம்.




பௌர்ணமிமுதல் சந்திரன் உருவத்தில் தினந்தோறும் குறைந்துகொண்டும் பிரகாசிக்கும் காலம் பேதித்தும் இருக்கின்றன; கடைசியாக அமாவாசையன்று சந்திரன் காணப்படுகிறதேயில்லை இவ்வாறே அமாவாசை முதல் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து காலமும் பேதித்து, பௌர்ணமியன்று பூர்ணசந்திரனாகக் காணப்படுகிறது. சூரிய சந்திரர்களை அல்லாமல் கணக்கில்லாத நட்சத்திரங்களும் இருக்கின்றன.

இம்மாதிரியான சூரியனையும், சந்திரனையும், பூமியையும், நட்சத்திரங்களையும் கடவுள் நம்முடைய உபயோகத்திற்காகவே கருணையுடன் சிருஷ்டித்திருக்கிறார். இப்பொருள்களை இன்னமாதிரி உபயோகிக்க வேண்டுமென்று தெரிந்துகொள்ளுவதுதான் பூகோள சாஸ்திரம். நம்முடைய சௌகரியத்திற்காக, பூமி முதலியவற்றைப் படைத்த கடவுளை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

149457

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY, MADRAS.—B. 9746.

## எலிமென்டரி பாடசாலைகளுக்குரிய தமிழ்ப் புத்தகங்கள்.

### உபகரண வாசக புத்தகங்கள்.

| இரேட், நம்பர். | | | விலை, அணா. |
|---|---|---|---|
| I. | 1. | ஹிதோபதேசக் கதைகள் முதற்பாகம் .... | ,, 2½ |
| ,, | 2. | ,, ,, இரண்டாம் பாகம் .. | ,, 2½ |
| ,, | 3. | நந்தவனச் சிறுகதைகள் .... .... .... | ,, 2½ |
| (மேலேகண்ட மூன்று புத்தகங்களும், இரண்டாவது, மூன்றுவது வகுப்புகளுக்குரியவை.) | | | |
| II. | 1. | பாரசீக கதைகள் முதற்பாகம் .... .... | ,, 3 |
| ,, | 2. | ,, ,, இரண்டாம்பாகம் .... .... | ,, 3 |
| ,, | 3. | கதாசரித் சாகரக் கதைகள் ... .... .... | ,, 3 |
| (மேலேகண்ட மூன்று புத்தகங்களும், மூன்றுவது, நான்காவது வகுப்புகளுக்குரியவை.) | | | |
| III. | 1. | சீதா ராமர்களின் பிறப்பும், வனவாசமும் சஞ்சாரமும் .... .... .... .... | ,, 4 |
| ,, | 2. | உத்தர இராமாயணக் கதைகள் .... .... | ,, 4 |
| ,, | 3. | ஸாதியின் விவேக விளக்கம் .... .... | ,, 4 |
| (மேலேகண்ட மூன்று புத்தகங்களும், நான்காவது வகுப்புக்குரியவை.) | | | |

| | |
|---|---|
| ஈசாப் கதைப்பாட்டுகள் படங்களுடன் (இரண்டாவது, மூன்றுவது வகுப்புகளுக்குரியவை) .... .... | ,, 8 |
| இந்திய மாயாவிநோதக் கதைகள் (நான்காவது, ஐந்தாவது வகுப்புகளுக்குரியவை) .... .... .... .... | ,, 5 |
| கட்டுக்கதைகள் (மூன்றுவது, நான்காவது வகுப்புகளுக்குரியவை) .... .... .... .... .... | ,, 4 |
| பாலநீதிபோதம் (மூன்றுவது, நான்காவது வகுப்புகளுக்குரியவை) .... .... .... .... .... | ,, 2½ |
| திரிபுரக் கதைகள் (இரண்டாவது, மூன்றுவது வகுப்புகளுக்குரியவை) .... .... .... .... | ,, 2½ |

### தேவஸகாயம் இயற்றிய புதிய தமிழ் கணித புத்தகங்கள்.

| | |
|---|---|
| முதல் புத்தகம்—இரண்டாம் வகுப்பிற்கு .... .... | ,, 2½ |
| இரண்டாம் புத்தகம்—மூன்றுவது வகுப்பிற்கு .... | ,, 2½ |
| மூன்றும் புத்தகம்—நான்காம் வகுப்பிற்கு .... .... | ,, 3½ |
| நான்காம் புத்தகம்—ஐந்தாவது வகுப்பிற்கு .... .... | ,, 5[illegible] |
| வீரராகவாசாரியாரெழுதிய ஆரம்ப பூகோள வாசக புத்தகம் | ,, [illegible] |
| ,, ஒவ்வொரு ஜில்லாவுடன் .... .... | ,, 4½ |
| ,, சென்னை இராஜதானியின் பூகோளம்.. | ,, 6 |
| காமீரான் மாரிஸன் எழுதிய மனிதனின் இருப்பிடம் .. | ,, 8 |
| ,, ,, ,, நம்முடைய சுதேசம் .... | ,, 10 |
| இந்துதேச சரித்திர பாடங்கள் .... .... .... | ,, 6 |

### தமிழ் காப்பி புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஒன்றுமுதல் ஆறு நம்பர்கள் ஒவ்வொன்றின் விலை .... | ,, 1½ |